Stay Connected with:
Uthayan.com

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.25
கொழும்பு : ரூபா.30

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily



தெளிவான வானிலை. சிறு மழைக்கான சாத்தியம் உண்டு.

30°c 28°c

பக்கம் 24 | சுடர்: 28 | கதிர்: 220 | வள்ளுவர் ஆண்டு: 2044 | ஆனி 20, வியாழன் 04.07.2013

# டில்லிக்கு மஹிந்த '13' குறித்து செய்தி

## கொண்டு பறக்கிறார் பஸில் இன்று

கொழும்பு, ஜூலை 4
அரசமைப்பின் '13' ஆவது திருத்தம் தொடர்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் விசேட செய்தியுடன் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ இன்று காலை டில்லிக்கு விரைகிறார்.
கொழும்பில் நேற்று அவசரமாகக் கூடிய பாதுகாப்புப் பேரவைக் கூட்டத்தின் போது இந்தியப் பயணம் தொடர்பில் அமைச்சர் பஸிலுக்கு ஜனாதிபதியால் முக்கிய ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.
மாகாணங்களுக்குப் பொலிஸ் அதிகாரங்களைப் பகிர்வதில் உள்ள சிக்கல் நிலைகள், இது தொடர்பாக புதுடில்லிக்கு வழங்கவேண்டிய விளக்கங்கள் ஆகியவை தொடர்பிலும் பாதுகாப்புப் பேரவைக் கருத்துப் பரிமாறல்கள் இடம்பெற்றுள்ளன. ஜனாதிபதி கூட்டத்துக்குத் தலைமை தாங்கினார்.
இதன்போது, எட்டப்பட்ட முக்கிய பதிலுடன் இரண்டு நாள்கள் பயணமொன்றை மேற்கொண்டு இன்று டில்லிக்குச் செல்லும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, அந்நாட்டு வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன் உள்ளிட்டோரைச் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார்.
'13' தொடர்பிலான ஜனாதிபதியின் உறுதியான நிலைப்பாட்டை - விசேட பதிலை டில்லி தரப்புக்குப் பஸில் எடுத்துரைப்பார் என்று கூறப்படுகின்றது.
அதேவேளை, இந்தியப் பிரதமருடன் சந்திப்புக்கான ஏற்பாடு பயண நிகழ்ச்சி நிரலில் இல்லாத போதிலும், பிரதமருடன் சந்திப்பை நடத்துவதற்கு இலங்கைத் தரப்பு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது என அரச தரப்பிலிருந்து அறியமுடிகின்றது. (த-சி)

## பிரிட்டனும் எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 4
இலங்கையில் ஒழுங்கமைக்கப்பட்ட ஆயுதக் குழுக்கள் செயற்படுவதைக் கவனத்தில் கொண்டு, இலங்கைக்குப் பயணம் செய்யும் தமது நாட்டவர்களுக்கான பயண எச்சரிக்கையை பிரிட்டனும் வெளியிட்டுள்ளது.
கடந்த சில தினங்களுக்கு முன்னர் இவ்வாறானதொரு பயண எச்சரிக்கையை அமெரிக்கா விடுத்துள்ள நிலையில் பிரிட்டனும் இப்போது பயண எச்சரிக்கையை வெளியிட்டுள்ளது.
பிரிட்டன் வெளி விவகார செயலகம் வெளியிட்டுள்ள இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
இலங்கைக்குப் பயணம் மேற்கொள்வோர், வன்முறைகள் மற்றும் ஆள் கடத்தல்களுக்குப் பொறுப்பான-ஒழுங்கமைக்கப்பட்ட ஆயுதக் குழுக்கள் இலங்கையில் செயற்படுவதை மனதில் கொள்ளவேண்டும்.

தொடர்ச்சி: பக்கம் 21

## இந்தியா



பக். 06

தனி ஈழமே தமிழருக்குத் தீர்வு 13ஆவது திருத்தம் ஏமாற்று வேலை.

## உலகம்



பக். 07

அமெ. மன்னிப்பு கேட்காது

## விளையாட்டு



பக். 23

இலங்கையணிக்கு அபார வெற்றி

## '13'ஐ பாதுகாப்போம்

### கையொப்பமிடும் போராட்டத்தில் ரணில்

கொழும்பு,ஜூலை 04
அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தைப் பாதுகாக்க ஒன்றிணைவோம் என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அறைகூவல் விடுத்துள்ளார்.
எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட '13' ஒழிப்புக்கு எதிரான மனுவில் கையொப்பமிடும் போராட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
இந்தப் போராட்டம் கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக நேற்று மாலை நடைபெற்றது. இதில் எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்கள் அனைவரும் கையொப்பமிட்டனர்.(த)

# இந்தியத் தலையீடு தேவையற்ற ஒன்று

## கொதிக்கிறார் கோத்தபாய



கொழும்பு,ஜூலை 04
13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் இந்தியாவின் பேச்சைக் கேட்கக் கூடாது என்றும், தேசிய பிரச்சினையை இலங்கையர்களே தீர்த்துக் கொள்ள வேண்டும் என்றும் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.
கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு அளித்துள்ள செவ்வியிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.
இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-
நாம் இந்தியாவின் பேச்சைக் கேட்கக் கூடாது. இதற்கு, இந்தியாவுடன் கொண்டுள்ள உறவுகளை இழப்பது என்று அர்த்தமில்லை. ஆனால், பிரச்சினை இருந்தால், இலங்கையர்களால் மட்டுமே அது தீர்க்கப்படவேண்டும்; இந்தியாவினால் அல்ல.
தேசியப் பிரச்சினைக்கு உள்ளகத் தீர்வு ஒன்றே காணப்படவேண்டும். '13' ஆவது திருத்தம் தொடர்பான விவாதங்கள் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளைப் பாதிக்காது.
இந்தியா எமது நண்பன். தொடர்ந்தும் நல்ல உறவுகளை நாம் கொண்டிருக்க வேண்டும்.இது எமது உறவுகளைப் பாதிக்கும் ஒரு

தொடர்ச்சி: பக்கம் 21

## தனியார் பஸ் உரிமையாளர்கள் அடுத்த வாரம் போராட்டம்

கொழும்பு,ஜூலை 04
நாடளாவிய ரீதியில் அடுத்த வாரம் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாகத் தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் நேற்று அறிவித்துள்ளது.
பஸ் கட்டண உயர்வு குறித்து போக்குவரத்து ஆணைக்குழு சாதகமான பதிலை வழங்காததன் காரணமாகவே போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.
"பஸ் கட்டண உயர்வு தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய பதிலை உரிய நேரத்தில் வழங்காவிட்டால், நாம் நிச்சயம் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடுவோம்" என்று தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார். (த)

## லண்டனில் புலிக்கொடியுடன் ஓடியவருக்குப் பிடியாணை

### கொழும்பு நீதிமன்றம் பிறப்பித்தது




கொழும்பு,ஜூலை 04
லண்டன் கார்டிப் நகர மைதானத்தில் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் நடைபெற்ற ஐ.சி.சி. கிண்ணக் கிரிக்கெட் போட்டியின்போது புலிக்கொடியுடன் ஓடியவருக்குக் கொழும்பு நீதிவான் நீதிமன்றம் சர்வதேச பிடியாணை பிறப்பித்துள்ளது.
அவர் வங்கி ஒன்றில் மோசடி செய்தமை தொடர்பாகவே இந்தப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.
ஐ.சி.சி. கிண்ணத்துக்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இரண்டாவது அரையிறுதி ஆட்டம் ஜூன் மாதம் 30ஆம் திகதி கார்டிப் நகர மைதானத்தில் நடந்தபோது மைதானத்துக்குள் புலிக்கொடியுடன் ஓடிய லோகேஸ்வரன் மணிமாறன் என்ற இலங்கைத் தமிழ் இளைஞரையே கைது செய்யுமாறு கொழும்பு பிரதான நீதிவான் கிஹான் பிலபிட்ட திறந்த பிடியாணையை நேற்றுப் புதன்கிழமை பிறப்பித்துள்ளார். (த)

# வவுனியா, மன்னாரில் அரச காணி 4,500 குடும்பங்களுக்கு பங்கீடு

## 4,000 துண்டுகள் முஸ்லிம்களுக்கு 500 துண்டுகள் தமிழர்களுக்கு


யாழ்ப்பாணம், ஜூலை 4
வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களில் 4 ஆயிரத்து 453 குடும்பங்களுக்கு அரை ஏக்கர் வீதம் அரச காணிகள் பகிர்ந்தளிக்கப்படவுள்ளன. இதற்கான பணிகள் தீவிரமாக இடம்பெற்று வருகின்றன.
4 ஆயிரம் முஸ்லிம்களுக்கும் 500 வரையான தமிழர்களுக்கும் இந்தக் காணிகள் வழங்கப்படவுள்ளன.
மன்னார் மாவட்டத்தில் முசலி பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பகுதியில் 2 ஆயிரத்து 895 பேருக்கு காணிகள் வழங்கப்படவுள்ளன என்று முசலி பிரதேச செயலர் கேதீஸ்வரன் தெரிவித்தார். , மாந்தை மேற்கு பிரதேச செயலர் பிரிவில் 628 குடும்பங்களுக்கும், மடுவில் 444 குடும்பங்களுக்கும், வவுனியா மாவட்டத்தில் வவுனியா பகுதியில் 275 குடும்பங்களுக்கும், செட்டிகுளத்தில் 211 குடும்பங்களுக்கும் காணிகள் வழங்கப்படவுள்ளன.
இந்த நடவடிக்கைகள் குறித்து வடமாகாண காணி ஆணையாளரைத் தொடர்பு கொண்டு கேட்ட போது, "அவ்வாறு ஒரு சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. அப்படியொரு நிகழ்வு நடப்பதாகவும் இல்லை" எனத் தெரிவித்தார்.
"எமக்கு 2, 895 குடும்பங்களுக்கு காணி வழங்குவதற்கான அனுமதிப் பத்திரங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. இதில் 255 தமிழ்க் குடும்பங்களும் அடங்குகின்றன. குறிப்பாக அரிப்பு, சௌத்பார், கொக்குப் புடையான் போன்ற இடங்களில் தெரிவுசெய்யப்பட்ட காடுகள் அழிக்கப்பட்டு

தொடர்ச்சி: பக்கம் 21

## 3 இலங்கையர் பிரிட்டனில் கைது

லண்டன்,ஜூலை 04
பிரிட்டன், சிட்டிங்பேண் பகுதியிலுள்ள கராஜ் ஒன்றைச் சோதனையிட்டபோது, இலங்கையைச் சேர்ந்த சட்டவிரோத தொழிலாளர்கள் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.
இரகசியத் தகவலின் அடிப்படையில் சென். போல் வீதியிலுள்ள பிபீ பெற்றோல் நிலையத்துக்கு கடந்த வெள்ளிக்கிழமை இரவு 7.10 மணியளவில் சென்ற அதிகாரிகள், அங்கிருந்தவர்களிடம் பிரிட்டனில் தங்கியிருப்பதற்கான ஆவணங்கள் உள்ளனவாவெனக் கேட்டுள்ளனர்.
இதனைத் தொடர்ந்து குறித்த கராஜிலிருந்து 22 மற்றும் 33 வயதுடைய இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், மில்ரன் ரிஜிஸ் பகுதியிலுள்ள வீதியில் 30 வயதுடைய ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். (த)

# புதிய இந்தியத் தூதுவர் கோத்தாவுடன் சந்திப்பு



கொழும்பு,ஜூலை 04
இலங்கைக்கான புதிய இந்தியத் தூதுவர் ஜஸ்வர்த்தன் குமார் சின்ஹாவுக்கும், பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கும் இடையில் நேற்றுமுன்தினம் சந்திப்பு ஒன்று இடம்பெற்றுள்ளது.
பாதுகாப்பு அமைச்சில் நேற்றுமுன்தினம் பிற்பகல் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில், இரு தரப்பு விவகாரங்கள் குறித்துப் பேச்சுக்கள் நடத்தப்பட்டதாகப் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.
இலங்கைக்கான புதிய இந்தியத் தூதுவராக நியமிக்கப்பட்டுள்ள, ஜஸ்வர்த்தன் குமார் சின்ஹா, தன்னை அறிமுகப்படுத்திக் கொள்ளும் நோக்கிலேயே நேற்றுமுன்தினம் பாதுகாப்புச் செயலரைச் சந்தித்ததாகத் தெரியவருகிறது. 13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பாக கடுமையான விமர்சனங்களை முன்வைத்து வரும் கோத்தபாய ராஜபக்ஷவுடன், அது தொடர்பான இந்தியாவின் நிலைப்பாடு குறித்துப் புதிய இந்தியத் தூதுவர் பேசினாரா என்பது குறித்த தகவல்கள் ஏதும் வெளியாகவில்லை. (த)

# தன்னை தானே சுட்டார் துமிந்த

### அதிரடிப்படை கான்ஸ்டபிள் சாட்சியம்

கொழும்பு,ஜூலை 03
பாரத லக்ஷ்மன் பிரேமசந்திர மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட துமிந்த சில்வா, தனக்குத் தானே சுட்டுக்கொண்டார் என்று முல்லேரியாராஹூல வித்தியாலயத்துக்கு அருகில் கூடியிருந்தவர்கள் தெரிவிப்பதைத் தான் செவிமடுத்ததாகப் பொலிஸ் விசேட அதிரடிப்படை கான்ஸ்டபிள் சுரங்க குமார சாட்சியமளித்தார்.
ஜனாதிபதி தொழிற்சங்கத்தின் ஆலோசகரான பாரத லக்ஷ்மன் பிரேமசந்திர உள்ளிட்ட நால்வரின் கொலைவழக்கு, கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் மேலதிக நீதிவான் பிரியந்த லியனகே முன்னிலையில் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.
இந்தக் கொலையின் சந்தேகநபர்களாக நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா உட்பட 13பேருக்கு எதிராகவே இந்த வழக்கு விசாரணை இடம்பெற்று வருகின்றது.
இந்நிலையில், துமிந்த சில்வா மன்றில் முன்னிலையானார். பாரத லக்ஷ்மன் தரப்பினர் சார்பில் மன்றில் முன்னிலையான வழக்கறிஞர், 'சந்தேகநபரான துமிந்த சில்வாவினால் மன்றில் முன்னிலையாகிப் பதிலளிக்க முடியுமா என்று கேட்டறியுமாறு நீதிவானிடம் குறிப்பிட்டார். இருப்பினும், அவரது வேண்டுகோள் நிராகரிக்கப்பட்ட நிலையில், சாட்சியாளர் அழைக்கப்பட்டார்.
இதன்போது, சாட்சியாளராக மன்றில் முன்னிலையான பொலிஸ் விசேட அதிரடிப்படை கான்ஸ்டபிள் சுரங்க குமார, 'தான் கடந்த 2011ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 8ஆம் திகதி முல்லேரியாராஹூல வித்தியாலத்தில் தேர்தல் பணிகளில் ஈடுபட்டிருந்ததாகவும் கைத்துப்பாக்கிகள் மற்றும் ரீ-56 ரகத் துப்பாக்கிகள் போன்றன பலரதும் கைகளில் இருந்தன.' என்றார்.
தொடர்ந்து சாட்சியமளித்த அவர், 'அப்போது, அந்தப் பகுதிக்கு 'டிபெண்டர்' ரக வாகனமொன்று வந்தது. அதில் துமிந்த சில்வாவும் இருந்தார். அப்போது, அப்பகுதியிலிருந்த பெண்கள் மீது தாக்குதலும் நடத்தப்பட்டது' என்றார்.
'பாரத மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட துமிந்த சில்வா, தன்னைத் தானேசுட்டுக்கொண்டார் என்று அங்கிருந்த



வர்கள் பேசிக்கொண்டதை நான் செவிமடுத்தேன்' என்றார்.
இதன்போது குறுக்கிட்ட நீதிவான், 'டிபெண்டர்' ரக வாகனத்தில் இருந்தவர்கள் தற்போது நீதிமன்றத்தில் உள்ளனரா?' என்று வினவினார். அதற்குப் பதிலளித்த சாட்சியாளர், 'இல்லை' என்று குறிப்பிட்டார்.
இதனையடுத்து இந்த வழக்கு விசாரணையை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் இரண்டாம் திகதிக்கு ஒத்திவைத்தார். (த)

# தேர்தலில் போட்டியிட கே.பியும் விண்ணப்பம்



யாழ்ப்பாணம், ஜூலை 4
வடக்கு மாகாண சபைத் தேர்தலில் புலிகளின் பிரமுகர்களான தயா மாஸ்ரர், தமிழினி ஆகியோரைத் தொடர்ந்து கே.பி யும் தேர்தலில் போட்டியிடுவதற்காக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு விண்ணப்பித்துள்ளதாக அந்தக் கட்சியின் பொதுச் செயலாளரும், அமைச்சருமான மைத்திரிபாலசிறிசேன"டெய்லி மிரர்'' பத்திரிகைக்கு தெரிவித்தார்.
தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் ஆயுதத் தரகரான கே.பி. என்று அழைக்கப்படும் செல்வராசா பத்மநாதன்,தமிழீழ விடுதலைப் புலிகளின் மகளிர் அரசியல் துறை முன்னாள் பொறுப்பாளரான தமிழினி என்றழைக்கப்படும் சுப்பிரமணியம் சிவகாமி, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க முன்னாள் ஊடகப் பேச்சாளரான தயா மாஸ்ரர் என்றழைக்கப்படும் வேலாயுதம் தயாநிதி ஆகியோர் வடமாகாண சபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிடுவதற்கு விண்ணப்பித்துள்ளனர்.
இவர்கள் மூவரும் விண்ணப்பித்துள்ள போதிலும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கட்சி வேட்பாளர் நியமனக்குழு முன்னிலையில் நேர்முகத் தேர்வுக்குத் தோற்ற வேண்டியிருக்கும் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டுள்ளார்.
மூவரும் புனர்வாழ்வளிக்கப் பட்டுள்ளனர்.
நீதிமன்றங்கள் எதுவும் இவர்களை குற்றவாளியாக இனங்காணவில்லை.
இதனால் இவர்களின் விண்ணப்பங்களை கருத்தில் எடுக்காமல் இருப்பதற்கு காரணம் எதுவுமில்லை என்றார் அமைச்சர் மைத்திரி பால. (த-5)

# குருநகரில் டெங்கு ஒழிப்பு நேற்றுப் பெரும் எடுப்பில்

யாழ்ப்பாணம்,ஜூலை 04
தேசிய டெங்குக் கட்டுப்பாட்டு வாரத்தை முன்னிட்டு நேற்றுப் புதன்கிழமை குருநகர் பிரதேசத்தில் டெங்கு ஒழிப்பு விழிப்புணர்வு நடவடிக்கைகள் பெருமெடுப்பில் முன்னெடுக்கப்பட்டன.
பல பிரிவுகளாக இந்த டெங்கு ஒழிப்பு விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாக பிரதேச பொதுச்சுகாதாரப் பரிசோதகர் ஜே.ராஜா தெரிவித்தார். இந்த டெங்கு ஒழிப்பு விழிப்புணர்வு நடவடிக்கையின் போது நேற்று மட்டும் ஆயிரத்து 478 வீடுகளின் சுற்றாடல் தரிசிப்புச் செய்யப்பட்டன. இதில் 41 வீடுகளின் சுற்றாடல் நுளம்பு பெருகும் இடங்களாக இனங்காணப்பட்டன.
இனங்காணப்பட்ட இந்த குடியிருப்பாளர்களை உடனடியாகத் தமது சுற்றாடலை துப்புரவு செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டது. இந்த டெங்கு ஒழிப்பு நடவடிக்கையின் போது பொது இடங்களில் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டன.
அத்துடன் கழிவுநீர் ஓடும் வடிகால்வாய்களுக்கு மருந்துகள் விசிறப்பட்டு நுளம்புக் குடம்பிகள் அழிக்கப்பட்டன.
இந்த டெங்கு ஒழிப்பு நடவடிக்கையின்போது மாநகர உறுப்பினர்கள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், குடும்பநல உதவியாளர்கள், கிராம உத்தியோகத்தர்கள், சுகாதாரப் பாதுகாவலர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் சனசமூக நிலையங்கள், மாதர் சங்கங்கள், பொது அமைப்புக்கள் போன்றவற்றின் பிரதிநிதிகள், பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (த-17)

# மகனின் செயல் ஒரு சிறிய விடயம்

### கூறுகிறார் ஊடக அமைச்சர் கெஹலிய



கொழும்பு,ஜூலை 04
கிரிக்கெட் வீரரான எனது மகன் ரமித் ரம்புக்வெல, பிரிட்டிஷ் எயார்வேஸ் விமானத்தில் ஏற்படுத்திய குழப்பம் ஒரு சின்ன விடயமாகும் என்று ரமித் ரம்புக்வெலவின் தந்தையும் ஊடகத் துறைஅமைச்சருமானகெஹெலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.
இது ஒரு சிறிய விடயமாகுமென அந்த விமான சேவை நிறுவனமே கூறியிருக்கின்றது. இந்நிலையில் இலங்கை ஊடகங்கள், டெய்லி மெயிலில் வெளியான செய்திக்குக் கடும் பாரத்தைக் கொடுத்துள்ளன என்று அவர் தெரிவித்துள்ளார்.
நாட்டுக்குத் திரும்பியவுடன் இது தொடர்பில் மகன் என்னிடம் கூறினார். விமானத்திலிருந்தவர்களிடம் மன்னிப்புக் கோரியதாகவும் மகன் என்னிடம் தெரிவித்தார் என்றார் அமைச்சர்.
விமானத்தின் பின்னால் உள்ள கதவுக்கும் மலசலகூடக் கதவுக்கும் இடையில் இரண்டு மீற்றர் தூரம் கூட இல்லை. யாருக்கும் இவ்வாறான தவறுகள் இடம்பெறலாம். இதற்கு முன்னரும் இவ்வாறான தவறுகள் இடம்பெற்றிருக்கின்றன. எதிர்காலத்திலும் இவ்வாறான தவறுகள் இடம்பெறலாம் என்று பிரிட்டிஷ் எயார்வேஸ் விமான சேவை நிறுவனம் தெரிவித்துள்ளது.
இவ்வாறான நிலையில் இலங்கைக் கிரிக்கெட் முன்னெடுக்கின்ற விசாரணைக்கு நான் ஆதரவளிப்பேன் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.
இது ஒரு சிறிய விடயமாகும் என பிரிட்டிஷ் எயார்வேஸ் விமான சேவை அறிக்கையொன்றை வெளியிட்டிருக்கின்ற நிலையில் சகல ஊடகங்களிலும் டெய்லி ரெலிகிராப் பத்திரிகையில் இருந்த விடயம் மட்டுமே இருப்பது கண்டிக்கத்தக்கதாகும்.
டெய்லி ரெலிகிராப் பத்திரிகையில் 23 வயதான ஒருவர் மதுபோதையில் சத்தம் போட்டதாக இருக்கின்றது. அதனையே இங்குள்ள ஊடகங்களும் எடுத்துக்கொண்டுள்ளன.
பிரிட்டிஷ் எயார்வேஸ் விமான சேவையின் அறிக்கை எனது கையில் இருக்கின்றது. இந்தச் சம்பவமானது சிறிய விடயமென அதில் இருக்கின்றது. இதற்கு முன்னரும் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாகவும் எதிர்காலத்திலும் இடம்பெறலாம் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் கூறினார். (த)

### முன்னாள் போராளிகளை சந்திக்கிறார் அமைச்சர்

யாழ்ப்பாணம், ஜூலை 4

புனர்வாழ்வு பெற்று விடுதலை செய்யப்பட்ட முன்னாள் போராளிகளினுடைய பிரச்சினைகள் தொடர்பில் அமைச்சர் சந்திரசிறி கஜதீர கலந்துரையாடவுள்ளதால் முன்னாள் போராளிகளை அது தொடர்பில் கலந்துரையாட வருமாறு சிறைச்சாலைகள் மற்றும் மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார்.

நாளைமறுதினம் சனிக்கிழமை யாழ்ப்பாணத்துக்கு வருகை தரும் அமைச்சர் யாழ். கூட்டுறவு சங்க மண்டபத்தில் முற்பகல் 11 மணிக்கு இந்தக் கலந்துரையாடலை நடத்தவுள்ளார்.

எனவே முன்னாள் போராளிகள் நேரடியாகவும் எழுத்து மூலமாகவும் தமது பிரச்சினைகள் தொடர்பில் அமைச்சருக்குக் கூறமுடியும். அதற்கான தயார்ப்படுத்தலுடன் சனிக்கிழமை வருகை தருமாறு முன்னாள் போராளிகளை அமைச்சின் செயலாளர் கேட்டுள்ளார். (வ-4)

### யாழ்ப்பாணம் வருகிறார் நேபாள முன்னாள் பிரதமர்

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் 70 ஆவது ஆண்டு விழா நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச்சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் நேபாள அரசின் முன்னைநாள் பிரதமர் மாதேவ் குமார் நேபாளின் விசேட உரை இடம் பெறுவதுடன் அமைச்சர்களான சந்திரசிறி கஜதீர, டியூ குணசேகர, வாசுதேவ நாணயக்கார, திஸ்ஸவிதாரண ஆகியோர் உட்பட பலர் இதில் கலந்து கொள்ளவுள்ளார். (வ-4-86)

# வடமாகாண பாடசாலைகளில் டெங்கு ஒழிப்பு நேற்று ஆரம்பம்




யாழ்ப்பாணம், ஜூலை 4

டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் வடமாகாண பாடசாலைகளில் நேற்று ஆரம்பிக்கப்பட்டன. இன்றும் நாளையும் இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

ஒவ்வொரு பாடசாலையிலும் ஒரு மணி நேரமாவது மாணவர்கள், ஆசிரியர்கள் டெங்கு ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு சூழலை துப்புரவு செய்து டெங்கு பெருகும் இடங்களை அழித்து, ஒழித்து டெங்கு பரவலைக் கட்டுப்படுத்துவர்.

வடக்கில் உள்ள ஐந்து மாவட்டங்களிலும் பாடசாலைகளில் மாணவர்கள் மூலமாக டெங்கு ஒழிப்பை மேற்கொள்ள வேண்டும் என மாகாணக் கல்விப் பிரிவால் அறிவிக்கப்பட்டு செயற்பாடுகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டன.

நேற்றுக் காலை பாடசாலைக்கு வருகை தந்த மாணவர்கள் கற்றல் நடவடிக்கைக்கு முன்பாக அரை மணி நேரம் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

சுற்றுச் சூழலை பாதுகாப்போம் என்ற தலைப்பில் சுலோக அட்டைகளை தாங்கியவாறு பாடசாலை முன்பாக மாணவர்கள் ஊர்வலமாக நின்றனர்.

அத்துடன் அனேகமான மாணவர்கள் பாடசாலை வளாகப் பகுதியை சிரமதானம் மூலம் துப்புரவு செய்யும் பணியிலும் ஈடுபட்டனர்.

மாணவர்களின் நேற்றைய விழிப்புணர்வுச் செயற்பாடுகளில் ஆசிரியர்களும் இணைந்து தமது பங்களிப்பை வழங்கினர்.

**நெல்லியடியில் பேரணி**

டெங்கு ஒழிப்பு விழிப்புணர்வுப் பேரணி ஒன்று நெல்லியடி நகரப் பகுதியை உள்ளடக்கிய பிரதேசத்தில் நேற்றுக் காலை நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மாணவர்களால் நடத்தப்பட்டது.

பாடசாலை ஆரம்பமானதைத் தொடர்ந்து மாணவர்கள் அனைவரும் ஒன்றுகூடி பதாகைகளைத் தாங்கியவாறும், டெங்கு ஒழிப்பு கோஷத்தை எழுப்பியவாறும் மகா வித்தியாலயத்திலிருந்து பேரணியாக வித்தியாலய வீதிவழியாக நெல்லியடி மத்திய பஸ் நிலையத்தை அடைந்து அங்கிருந்து யாழ்ப்பாணம் வீதி வழியாக நெல்லியடி பொதுச் சந்தையை அடைந்தனர். பின்னர் வந்த பாதை வழியாகத் திரும்பி பருத்தித்துறை வீதி வழியே சென்று அல்வாய் மாலி சந்தியைஅடைந் தனர். மாலி சந்தியிலிருந்து உடுப்பிட்டி வீதிக்கு திரும்பி வதிரிச் சந்தியை அடைந்து அதனூடாக மீண்டும் பாடசாலையை அடைந்தனர்.

பேரணியில் மாணவர்களுடன் வித்தியாலய அதிபர் எம்.சேதுராஜா மற்றும் ஆசிரியர்கள் கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எஸ்.சுதோகுமார் மற்றும் சுகாதாரப் பரிசோதகர்களும் கலந்து கொண்டனர்.

பேரணியில் சென்ற மாணவர்கள் தாங்கிச் சென்ற பதாகைகளில் டெங்கு நோயை முற்றாக ஒழிப்போம், டெங்கு வருமுன் காப்போம், பொலித்தீன் பாவனையை ஒழிப்போம், சுற்றுச் சூழலைச் சுத்தமாக வைத்திருப்போம், நுளம்பு பெருகும் இடங்களை அழிப்போம் உள்ளிட்ட வாசகங்கள் காணப்பட்டன. இதே வாசகங்களையே அவர்கள் கோஷங்களாகவும் எழுப்பிச் சென்றார்கள். (வ-4-8-9-17)

### சிறுவர் புகைப்படக் கண்காட்சி இன்று

யாழ்ப்பாணம், ஜூலை 4

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையத்தினரின் ஏற்பாட்டில் ''வாழ்வியலுடன் இணைந்த தேடல்'' சிறுவர் புகைப்படக் கண்காட்சி இன்று யாழ். கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

முற்பகல் 9.30 மணி முதல் பிற்பகல் 1.30 மணி வரை நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.உதயகுமார் முதன்மை விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக் கழக கலைப்பீடப் பீடாதிபதி பேராசிரியர் வி.பி.சிவநாதன் கலந்து கொள்ளவுள்ளார்.

ஊடகவளங்கள் மற்றும் பயிற்சி நிலைய மாணவர்களின் பயிற்சியில் யாழ். கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலய மாணவர்களால் எடுக்கப்பட்ட புகைப்படங்கள் காட்சிப் படுத்தப்படவுள்ளதாகவும் இந்த நிகழ்வில் ஆர்வலர்கள் பங்குபற்ற முடியும் எனவும் விழா ஏற்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றனர். (வ-ரி)

## புனரமைக்கப்பட்ட 7 பாடசாலைகள் திறப்பு



யாழ்ப்பாணம், ஜூலை 4

தீவக வலயத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை, ஐயாயிரம் பாடசாலைகள் திட்டத்தில் அல்லைப்பிட்டி றோ.க.பாடசாலை உட்பட மண்டைதீவு, மண்கும்பான், வேலணை துறையூர், ஊர்காவற்றுறை பகுதிகளில் 7 பாடசாலைகள் மீள் திறப்பு செய்யப்பட்டன.

நேற்றுமுன்தினம் இடம் பெற்ற இந்த நிகழ்வுகளில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின், தீவக வலயக் கல்விப்பணிப்பாளர்எஸ்.ஜோன் குயின்ரஸ், வேலணைப் பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீசன், ஓய்வு நிலை கல்விப் பணிப்பாளர் எஸ்.இராதாகிருஸ்ணன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

மீள் திறப்பு விழா நிகழ்வுகள் அல்லைப்பிட்டி றோ.க.பாடசாலை அதிபர் கே.பத்மநாதன் தலைமையில் அல்லைப்பிட்டியில் நடைபெற்றன. (வ-7)

## யாழ். கொழும்பு அதிவேக நெடுஞ்சாலை பணிகள் அடுத்த வருடத்தில் ஆரம்பம்

கொழும்பு, ஜூன் 4

யாழ். - கொழும்பு அதிவேக நெடுஞ்சாலையின் முதல் கட்டப் பணிகள் அடுத்த வருட ஆரம்பத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் ஆர்.டபிள்யூ.ஆர்.பிரேமசிறி தெரிவித்தார்.

சீனாவுக்கு அண்மையில் பயணம் மேற்கொண்ட இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும், சீன அரசுக்கும் இடையில் எட்டப்பட்ட உடன்பாடு காரணமாக, சீன அரசின் நிதி உதவியில் 300 கிலோ மீற்றர் நீளமான யாழ்-கொழும்பு அதிவேக நெடுஞ்சாலை அமைக்கப்படவுள்ளது.

நெடுஞ்சாலையின் முதல் கட்டப் பணிகள் அடுத்த வருட ஆரம்பத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளன. எந்தரமுல்ல தொடக்கம் அம்பேபுஸ்ஸ வரையிலான 52.8 கிலோமீற்றர் நீளமான வீதி ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் செலவில் முதல் கட்டமாக அமைக்கப்படவுள்ளது. இந்தப் புனரமைப்பின் போது 50 மேம் பாலங்கள், 30 நிலக்கீழ் பாலங்கள், 5 வீதி மாற்றங்கள் என்பனவும் அமைக்கப்படும்.

39 கிலோ மீற்றர் நீளமான இரண்டாம் கட்டப் பணிகள், குருநாகலிலிருந்து பலந்தெனிய வரையில் அமைக்கப்படவுள்ளது. மூன்றாம் கட்டப் பணிகள் அம்பேபுஸ்ஸவிலிருந்து கண்டி வரையிலும் அடுத்த கட்டப் பணிகள் பலந்தெனியவிலிருந்து தம்புள்ள வரையிலும் அமைக்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (வ-5)

### சீருடையுடன் புகைப்பிடித்த மாணவர்கள் வசமாகச் சிக்கினர்

தென்மராட்சி, ஜூலை 4

பற்றை மறைவில் பாடசாலை சீருடை அணிந்த நிலையில் புகைப்பிடித்த 5 மாணவர்கள் ரோந்து சென்ற பொலிஸாரிடம் வசமாக மாட்டிக் கொண்டனர். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் சாவகச்சேரி கண்டுவில் ஒழுங்கையில் இடம் பெற்றது.

வீதியில் ரோந்து சென்ற பொலிஸார் பற்றைக்குள்ளிருந்து புகை வருவதை அவதானித்து அங்கு சென்று பார்த்தபோது ஓரளவு மயக்க நிலையில் மாணவர்கள் புகைப்பிடித்ததைக் கண்டு அழைத்துச் சென்றனர்.

குறித்த மாணவர்கள் பிரபல பாடசாலையின் கழுத்துப்பட்டி அணிந்திருந்தனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (வ-9)

### தனியார் பஸ்களில் திடீர் பரிசோதனை

தென்மராட்சி, ஜூலை 4

யாழ்.மாவட்ட தனியார் பஸ்களில் திடீர் பரிசோதனை நடத்த சீருடை அணிந்த குழுவினர் கடமையில் ஈடுபட்டு வருகின்றனர்.

பரிசோதனைக் குழுவினருக்கு சாம்பல் (கிறே) நிற சீருடை வழங்கப்பட்டுள்ளது. தனியார் வாகனங்களில் பயணிகளுக்கு பயணச்சீட்டு வழங் காமல் பணம் பெறுவது, வாகனத்தில் கடமையாற்றும் சாரதி, நடத்துநர்கள் அடையாள அட்டை அணியாமல் உள்ளமை மற்றும் பயணிகளிடம் அதிகரித்த கட்டணங்கள் அறவிடல் போன்றவை திடீர் பரிசோதனைக் குழுவினரால் கண்காணிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)



வெளிநாட்டு பிரதிநிதிகளால்
ஐக்கிய இராச்சியத்தின்
பல்கலைக்கழகங்கள் / கல்லூரிகளில்
உடனடி அனுமதி

20 மற்றும் 10 மணி நேர வேலை அனுமதியுடன்

ஐக்கிய இராச்சியத்தின் பல பல்கலைக்கழகங்களில் அனுமதி பெற்றுக் கொடுப்பதில் முன்னோடியாகத் திகழும் Brit Learning Ltd. நிறுவனம் தமது பல பிரதிநிதிகளுடன் ஆரம்ப நாட்களில் இலங்கைக்கு வருகின்றது.

பிரதிநிதிகளுடன் தமிழிலேயே உரையாடி உங்கள் அனுமதிகளை உறுதிசெய்யுங்கள்

University of Sunderland · University of ULSTER · WESTLINK

நேர்முகப் பரீட்சைகள்
- யாழ்ப்பாணம் : ஜுலை 6, கிரீன் கிராஸ், ஆசீர்வாதம் லேன், மருத்துவமனை வீதி (மு.ப 10.00 முதல்)
- வவுனியா : ஜுலை 7, பாக்கியம் ரெஸ்ட், முதலாம் குறுக்குத் தெரு, வவுனியா (மு.ப 10.00 முதல்)

மேலதிக விபரங்களுக்கு
077 9656647

TO REQUEST APPOINTMENTS PLEASE E-MAIL US.
BRIT LEARNING LIMITED
Angel House, 225, Marsh Wall, London.
76/2/1/1, Colombo Road, Negombo
E-mail: britlearning@yahoo.co.uk
Web: www.britlearning.co.uk
UK office: 0044 203 6868 306
JEBZ


# தமிழ், முஸ்லிம் கட்சிகளின் ஆட்சியில் மாகாண சபைகள் இருக்கக் கூடாதா?

## ஹெல உறுமயவிடம் மனோ கேள்வி

கொழும்பு,ஜூலை 04

இலங்கையில் வடமாகாணம் தவிர்ந்த ஏனைய மாகாண சபைகளில் சிங்களப் பெரும்பான்மை கட்சியின் கீழ் தமிழர்களும், முஸ்லிம்களும் வாழ்கின்றார்கள். ஆனால் தமிழ், முஸ்லிம் பெரும்பான்மைக் கட்சிகளின் ஆட்சி மாகாண சபையில் ஏற்படுவதை ஏற்க நீங்கள் ஏன் தயாரில்லை? இது என்ன நியாயம்?

இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோகணேசன்.

பிரபல தனியார் தொலைக்காட்சி ஒன்றில் இடம்பெற்ற சிங்கள மொழியிலான நேரடி அரசியல் விவாத நிகழ்ச்சியில் ஜாதிக ஹெலஉறுமயவின் ஊடகச் செயலாளர் நிஷாந்த வனசிங்க, மனித உரிமை சட்டத்தரணி சந்திரபால குமாரசிங்க, கலாநிதி சூர்யா குணசேகர ஆகியோருடன் கலந்துகொண்ட மனோ கணேசன் அங்கு தெரிவித்தவை வருமாறு:-

சிங்களம் மாத்திரம் என்ற கொள்கை தான் மறுபுறத்தில் தமிழ்-முஸ்லிம் மாத்திரம் என்ற கொள்கையை உருவாக்கியது. நான் இந்த மூன்று கொள்கைகளையும் நிராகரிக்கின்றேன்.

இலங்கையர் என்ற பொதுவான பயணத்துக்குள் சிங்கள மக்களையும் இணைத்துக்கொண்டு பயணிக்க நாம் தயார். ஆனால் சிங்கள மக்களை எம்முடன் இணைத்துக் கொள்வதை நீங்கள் (ஹெலஉறுமய) எதிர்க்கின்றீர்கள்.

நாடு முழுக்க மாகாண சபைகள் உருவாக்கப்பட்டபோது அவற்றில் பங்குபற்றிவிட்டு இன்று வடக்கில் மாகாண சபை உருவாக்கப்படும்போது அதை நீங்கள் எதிர்க்கின்றீர்கள்.

இந்த நாடு முழுமையாகச் சிங்கள பௌத்தர்களுக்கு மாத்திரமே சொந்தமான நாடு என்று நீங்கள் நினைக்கின்றீர்கள். இதை நாம் ஏற்றுக் கொள்ள முடியாது. ஓய்வுபெற்ற அரச ஊழியரான கலாநிதி சூர்யா குணசேகர, திருகோணமலையில் சிங்கள மொழியில் கடிதம் ஒன்றை தட்டச்சுச் செய்ய முடியாமல் தான் கஷ்டப்பட்டதாகவும் அங்கு சிங்கள மொழிப் பாவனையாளர்கள் கஷ்டப்பட வேண்டிவரும் என்று கூறுகிறார். உண்மையில் இந்த நாட்டில் மொழிப்பாவனையில் கஷ்டங்களை எதிர்கொள்வது தமிழர்கள்தான்-என்றார். (த-5)


# கண்ணீர் அஞ்சலி



யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளன முன்னாள் தலைவரும், நீண்டகாலமாக வடபகுதி மீனவர்களின் நலனுக்காக தேசிய சர்வதேச ரீதியில் குரல் கொடுத்து வந்தவருமான

S.தவரட்ணம்

அவர்களின் மரணச்செய்திகேட்டு ஆழ்ந்த கவலையும் அதிர்ச்சியும் அடைவதோடு அவரது பிரிவினால் துயருறும் குடும்பத்தினர், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் நெடுந்தீவு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் சமாச மக்கள் நிர்வாகத்தினர் ஆகிய நாம் எமது ஆழ்ந்த அனுதாபத்தினை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆன்மா இறைவனின் சந்நிதியில் இளைப்பாற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நெடுந்தீவு கடற்றொழிலாளர்
கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்


# குழந்தையை பெற்றெடுத்த யுவதி வைத்தியசாலையில் காத்திருப்பு

## ஒப்பமிடுவதாகக் கூறிச் சென்றவர் மாயம்

யாழ்ப்பாணம்,ஜூலை 04

யுவதியைக் கர்ப்பமாக்கிய நபர், யுவதிக்கு குழந்தை பிறந்த நிலையில் அவரைத் திருமணம் செய்வதாக வைத்தியசாலையில் கூறிச் சென்றவர் பின்னர் தலைமறைவாகிவிட்டார். வைத்தியசாலை பொலிஸ் ஊடாக சம்பவம் சுன்னாகம் பொலிஸாரிடம் பாரப்படுத்தப் பட்டுள்ளது.

யுவதியைக் கர்ப்பமாக்கியவர் மருதனார்மடத்திலுள்ள கிறிஸ்தவ தேவாச்சிரமத்தின் பணியாளர் என்றும் முன்னர் போதகராக இருந்தவர் என்றும் இணுவிலில் வசிப்பவர் என்றும் சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர்.

சுன்னாகம் பொலிஸ் பிரிவைச் சேர்ந்த குறித்த யுவதி கடந்த திங்கட்கிழமை வீட்டில் குழந்தையைப் பிரசவித்துள்ளார். பின்னர் யாழ். போதனா வைத்தியசாலை விடுதியில் சேர்க்கப்பட்டுள்ளார். வைத்தியசாலையில் குழந்தையின் தந்தை குறித்து வினவப்பட்டபோது குறித்த நபர் தானே தந்தை என ஒப்புக்கொண்டு யுவதியைத் திருமணம் செய்வதாகக் கூறிவிட்டுச் சென்றுள்ளார்.

அதனடிப்படையில் அவர் மீது நடவடிக்கை எடுக்காது வைத்தியசாலை நிர்வாகத்தினர் விட் டுள்ளனர். இந்த நிலையில் குழந்தையையும் தாயையும் நேற்று விடுதியில் இருந்து விடுவிப்பதற்காக குழந்தையின் தந்தை என்று ஒப்புக்கொண்ட நபரைக் கையெழுத்திட வருமாறு வைத்தியர் கோரியுள்ளார். ஆனால் குறித்த நபர் வரவில்லை. அவரது தொலைபேசியும் இயங்கவில்லை. இந்த நிலையில் வைத்தியசாலைப் பொலிஸாரின் உதவியுடன் சம்பவம் சுன்னாகம் பொலிஸாருக்குப் பாரப்படுத்தப்பட்டுள்ளது. பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-4)

# சட்டவிரோத கள் விற்பனைக்கு அபராதம்



யாழ்ப்பாணம்,ஜூலை 04

சட்டவிரோதமாக கள்ளு வைத்திருந்து விற்பனை செய்த 7 பேருக்கு 6ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது ஊர்காவற்றுறை நீதிமன்று.

யாழ்.மதுவரித் திணைக்களத்தினர் வேலணை, புங்குடுதீவு பகுதியில் வைத்து குறித்த 7 பேரையும் கைது செய்தனர்.

இவர்கள் அனைவரும் நீதிவான் ஆர்.எஸ்.மகேந்திரராஜா முன்னிலையில் முற்படுத்தப்பட்டபோது தம்மீதான குற்றத்தை ஒப்புக்கொண்டனர்.

இவர்களில் இருவர் முன்னரும் இதேகுற்றத்தைப் புரிந்ததனால், இருவருக்கும் தலா ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. கள் விற்பனை செய்த ஒருவருக்கு ஆயிரம் ரூபாவும், மேலதிகமாகக் கள் வைத்திருந்த நான்கு பேருக்கு தலா 500 ரூபாவும் அபராதம் விதிக்கப்பட்டது. (ஐ-4)


# கண்ணீர் அஞ்சலி



தீவகக் கல்வி வலயத்தில் முகாமைத்துவ உதவியாளராகக் கடமையாற்றும் சொர்ணலிங்கம் குணவர்சன் அவர்களின் அன்புத் தந்தையார்

மாணிக்கம் சொர்ணலிங்கம்

அவர்கள் நேற்றுமுன்தினம் (02.07.2013) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்ததையிட்டு துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரி கழகம், வலயக் கல்வி அலுவலகம், தீவகம், வேலணை.
(C/10207)(3.6.11)

# 8ஆம் ஆண்டு நினைவுகள்



அமரர் J.S.
கிருஷ்டதாஸ் (J.P)
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

தோற்றம் 18 * 08 * 1933
மறைவு 04 * 07 * 2005

எட்டாண்டுகள் எப்படி நகர்ந்ததுவோ
தொட்டசெயல் எல்லாமே துலங்கிடும் உங்களாலே!
தகமைகளும் எங்களைச் சேர்ந்ததும் உங்களேலே!
திட்டமிட்டு வாழ்ந்ததனால் நல்நிலையில் உள்ளோமே!
தீமைகள் எமையணுகாத காவற்கோபுரம் ஆனவரே!
அட்டதிக்குகள் அனைத்திலும் புகழ்பரப்பி வாழ்ந்தவரே!
ஆங்கில மொழிதனிற்கு அகராதியாய் திகழ்ந்தவரே!
எட்டாண்டுகள் எப்படி போனதுவோ அப்பாவே!
ஏழுபிறப்பு நாமெடுத்தாலும் அப்பாவாகவே வரவேண்டுமே.

கி.நேசமணி (மனைவி)
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

"தங்கமால்" அல்வாய்
தெற்கு, அல்வாய்.

# கடை வாடகைக்கு

திருநெல்வேலி M.P.C.S கட்டடத்துக்கு அருகில் உள்ள கடை வாடகைக்கு உண்டு.
தொடர்பு- 0773606835

# தவறிவிட்டது

வவுனியா பூம்புகார் கண்ணகி வித்தியாலய மாணவர்களுடைய 25 பிறப்பு அத்தாட்சிப் பத்திரமும், 25 அஞ்சல் அடையாள அட்டையும் அரியாலைக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தவற விடப்பட்டுள்ளது. இவ் ஆவணங்கள் அவசரமாகத் தேவைப்படுவதால் கண்டெடுத்தவர்கள் 0778380780 இவ் தொலைபேசி இலக்கத்துடன் உடன் தொடர்புகொள்ளவும்.

# 16ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மலர்வு
05.01.1921

உதிர்வு
19.06.2013

சின்னையா தில்லையம்பலம்
(சிவனேசன்)

அன்னார் சிவபதமடைந்ததையிட்டு நேரில் வந்து அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், தொலைபேசி மூலமும் உள்நாடு வெளிநாடுகளிலிருந்து துயர் பகிர்ந்தவர்களுக்கும் மலர் வளையங்கள் சாற்றியோருக்கும் அனைத்து வழிகளிலும் உதவி புரிந்த அன்பு உள்ளங்களுக்கும் எமது அன்பார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி

அடைக்கலம் தோட்டம்,
கந்தசாமி கோயிலடி,
வட்டுக்கோட்டை

குடும்பத்தினர்.


## 'அலாரம்' அடித்ததால் அலறி ஓடிய திருடன்

அச்சுவேலி, ஜுலை 4
மக்கள் வங்கி அச்சுவேலிக் கிளையில் திங்கட்கிழமை இரவு உட்புகுந்த திருடன் வங்கியின் 'அலாரம்' அடித்ததால் ஓட்டம் பிடித்துள்ளான். அச்சுவேலி பொதுச் சந்தை கட்டடத்தொகுதியின் மேல் மாடியில் மக்கள் வங்கி, அச்சுவேலிக்கிளை அமைந்துள்ளது. மக்கள் வங்கி கட்டடத்தின் பின்பக்கத்தில் உள்ளயன்னலின் 'கிறிலை'க் கழற்றி திருடன் உட்புகுந்துள்ளான்.


பணத்தைத் தேடி சல்லடை போட்ட திருடன் பாதுகாப்பு பெட்டகத்தில் கை வைத்துள்ளான். அந்த வேளை அலாரம் ஒலிக்கவே திருடன் தப்பினோம் பிழைத்தோம் என்று ஓட்டம் பிடித்துள்ளான்.

செவ்வாய்க்கிழமை காலையில் வழமைபோல கடமைக்குச் சென்ற வங்கி முகாமையாளர் மற்றும் ஊழியர்கள்யன்னல்உடைக்கப்பட்டிருந்ததையும் மற்றும் மேசைகளின் லாச்சிகள் இயல்பு நிலையில் இல்லாமல்இருந்ததையும் கண்டு அதிர்ச்சி அடைந்தனர். சம்பவம் தொடர்பாக வங்கி மேலிடத்துக்கும் பொலிஸாருக்கும் புகார் செய்தனர். பொலிஸார்மோப்ப நாயின் உதவியுடன் சென்று விசாரணைகளை மேற்கொண்டனர்.

காங்கேசன்துறைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஜ-11)



## புனரமைக்கப்படும் மதகு



யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் திருமுழுக்கு ஜோவான் ஆலயம் முன்பாகவுள்ள பெரிய மதகு திருத்தும் பணிகள் தற்போது இடம்பெற்று வருகின்றன. வீதியில் இடம்பெறும் திருத்த வேலை காரணமாக ஆஸ்பத்திரி வீதியால் கண்டி வீதிக்குச் செல்லும் வாகனங்கள் மாற்று வழிகளைப் பயன்படுத்தி வருகின்றன. (வ-7)

## சமுர்த்திப் பயனாளிகளை குறைப்பதற்கு நடவடிக்கை

### காரைநகர் பிரதேச செயலர் பிரிவில்

காரைநகர் பிரதேச செயலர் பிரிவில் வாழ்க்கைத்தரம் அதிகரித்த சமுர்த்திப் பயனாளிகளின் சமுர்த்தி நிவாரண முத்திரைகளை நிறுத்த பிரதேச செயலகம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

முதற் கட்டமாக காரைநகர் பிரதேச செயலர் பிரிவில் உள்ள சமுர்த்திப் பயனாளிகளின்முத்திரைகள்மீளாய்வு செய்யும்செயற்பாடுகள்கடந்த வாரம் முதல் இடம் பெற்று நிறைவடைந்துள்ளன.

கிராம அலுவலர் பிரிவு ரீதியாக இடம்பெற்ற மீளாய்வு நடவடிக்கையானது உதவித் திட்டப் பணிப்பாளர் மற்றும் சமுர்த்தி அலுவலர்கள், சமுர்த்தி முகாமையாளர்கள் கொண்ட குழுவால் மேற்கொள்ளப்பட்டது.

காரைநகர் பிரதேச செயலர் பிரிவில் 1881 சமுர்த்திப் பயனாளிகள் சமுர்த்தி முத்திரைகளைப் பெற்று வருகின்றனர். இவர்களில் கடந்த காலத்தில் அரச தொழிலைப் பெற்றவர்கள், குடும்ப மட்டத்தில் வருமானம் அதிகரித்தவர்கள், வெளிநாடுகளுக்குச் சென்றவர்கள் என பலருடைய வருமான மட்டம் அதிகரித்துள்ள நிலையில் மறுபக்கம் தொழில் இழந்தவர்கள், குடும்பத் தலைவனை இழந்து வருமானம் அற்றவர்களும் காணப்படும் நிலையில் இத்தகைய மீளாய்வின் மூலம் பாதிக்கப்பட்டவர்களும்நன்மை அடையக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. (வ-86)

## உதவி கொடுப்பனவு வழங்கல் நாளை

தென்மராட்சி, ஜூலை 4
தென்மராட்சி பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட 70 வயதுக்கு மேற்பட்ட வயோதிபர்களுக்கான ஜுலை மாதத்துக்குரிய ஆயிரம் ரூபா கொடுப்பனவு நாளை அந்தந்த அஞ்சல் அலுவலகங்களில் வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆயிரம் ரூபா கொடுப்பனவுக்கான பட்டியல்கள் தயாரிக்கும் பணிகள் முடிவடைந்துள்ளதால் இன்று அந்தந்த தபால் அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்படவுள் ளது. இதேவேளைபொதுசனமாதாந்த உதவிப்பணம், நோய்களுக்கான கொடுப்பனவு பட்டியல்களும் இன்று அனுப்பி வைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)

## சாவகச்சேரி நகரசபையால் துப்புரவுப் பணிகள்

தென்மராட்சி, ஜூலை 4
சாவகச்சேரி நகர சபையின் சுகாதார சேவைகள் செயற்றிட்டத்தின் கீழ் மாதாந்தம் மூன்று இடங்களில் சிரமதானம் மூலம் துப்புரவு செய்ய சுகாதாரக் குழுவினரால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் முதலாவது சிரமதானம் நேற்று மீசாலை கிழக்குப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்டது. சபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பற்றைகளாகக் காணப்படும் காணிகள் மற்றும் வீதிகளைத் துப்புரவு செய்தல், கிணறுகள் இறைத்தல், போக்குவரத்துக்கு இடையூறாகக் காணப்படும் மரங்களை வெட்டல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. சபை எல்லைக்குள் இயங்கும் சனசமூக நிலையங்கள், பொது அமைப்புக்கள் தமது பிரிவில் அவசியமென கருதப்படும் இடங்களைத் துப்புரவு செய்தல் தொடர்பான விவரங்களை வழங்கினால் அந்த இடங்கள் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்படுமென சுகாதாரக் குழுத் தலைவர் த.சுதர்சன் தெரிவித்தார். (வ-9)


# வெற்று காணிகளை துப்புரவு செய்யவும்

## மீறுவோர் மீது நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 4
வலி.கிழக்குப் பிரதேசத்தில் மக்கள் குடியிருக்காத வெற்றுக் காணிகளை அதன் உரிமையாளர்கள் உடனடியாகத் துப்புரவு செய்யுமாறு வலியுறுத்தப்பட்டுள்ளது. கோப்பாய் பிரதேச செயலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை பிரதேச செயலர் ம.பிரதீபன் தலைமையில் இடம்பெற்ற டெங்கு ஒழிப்பு தொடர்பான கூட்டத்தில் பொது அமைப்புக்களாலேயே மேற்கண்டவாறு வலியுறுத்தப்பட்டது.

இவ்வாறு துப்புரவு செய்யப்படாது பற்றைகளால் மூடியிருக்கும் காணிகளின்உரிமையாளர்களுக்குஎதிரான வலி.கிழக்கு பிரதேச சபை சட்ட நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளது. எனவே மக்கள் குடியிருக்காத சகல வெறும் காணிகளும் உடனடியாக துப்புரவு செய்யப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது. இது குறித்து அறிவுறுத்தல் பிரசுரங்களை சபை விரைவில் சம்பந்தப்பட்ட காணிகளுக்கு முன்பாக ஒட்டவுள்ளது.

புல் பற்றைகளில்இருந்து பெருகும் நுளம்புகளால் குடியிருப்பாளர்களுக்கு தொற்றுநோய் அபாயம் ஏற்படும் சூழல் நிலவுகிறது. நுளம்புத் தொல்லையால் டெங்கின் தாக்கமும் அதிகரிக்க வாய்ப்பு உள்ளதாகவும் சுகாதார பகுதியினர் தெரிவித்தனர். (வ-17)



## சாவகச்சேரியில் சின்னமுத்து தடுப்பூசி


தென்மராட்சி, ஜூலை 4
சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட 17 நிலையங்களில் சுகாதார அமைச்சின் விசேட திட்டத்தின் கீழ் சின்னமுத்து தடுப்பு மருந்து நாளை வெள்ளிக்கிழமை வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. சாவகச்சேரி, கொடிகாமம், வரணி, கைதடி, ஆகிய வைத்தியசாலைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் உட்பட 17 நிலையங்களில் 6 மாதங்கள் தொடக்கம் ஒரு வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு சின்னமுத்து தடுப்பு மருந்து ஏற்றப்படவுள்ளது.

தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ளவர்களும் பிரதேசத்தில் தங்கி நிற்பவர்களும் தமது குழந்தைகளை அருகில் உள்ள நிலையத்திற்கு கொண்டு சென்று சின்னமுத்து தடுப்பூசி மருந்தைக் கொடுக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-9)

## கூரைகள் இல்லாத நிலையில் சைக்கிள் பாதுகாப்பு கொட்டகை

யாழ்ப்பாணம், ஜூலை 4
யாழ். நவீன சந்தைக்கும் மரக்கறிச் சந்தைக்கும் மத்தியில் உள்ள மோட்டார் சைக்கிள், சைக்கிள் தரிப்பிடத்தில் பாதுகாப்புக் கொட்டகையின் கூரைகள் கழற்றப்பட்டு இரண்டு மாதங்கள் கடந்துள்ளன. புதிய கூரைகள் இன்னமும் அமைக்கப்படாததால் பாதுகாப்புக்காக நிறுத்தப்படும் சைக்கிள்களை வெயிலில் நிறுத்த வேண்டியுள்ளது.

இந்தக் கொட்டகைக்கான கூரையை மீண்டும் அமைப்பதற்காக யாழ். மாநகர சபை ஊழியர்கள் அடிக்கடி வந்து பார்வையிட்டு மதிப்பீடு செய்து செல்கின்றார்களே தவிர அதனை அமைப்பதற்கான நடவடிக்கை எதுவும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை என சந்தைப் பகுதியில் உள்ள வியாபாரிகளும் பொதுமக்களும் விசனம் தெரிவிக்கின்றனர். (வ-7)



## பெண் நாய்களுக்கு கருத்தடை சிகிச்சை

வலி.வடக்கு, ஜூலை 4
உடுவில் பிரதேச செயலர் பிரிவில் உள்ள பெண் நாய்களுக்கு கருத்தடை செய்யும் நடவடிக்கைகள் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை முதல் மேற்கொள்ளப்படுகின்றன. சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் கண்காணிப்பின் கீழ் பெண் நாய்களுக்கான கருத்தடை கிராமம் கிராமமாக மேற்கொள்ளப்படவுள்ளது.

கடந்த பல வருடங்களாக மஹிந்த சிந்தனைத் திட்டத்தின் கீழ் கட்டாக்காலி நாய்களின் எண்ணிக்கை மிகவும் அதிகரித்துக் காணப்படுவதுடன் கட்டாக்காலி நாய்களால் பொது மக்கள் கடியுண்ட சம்பவங்களும் அதிகரித்துள்ளன. இந்த நிலையில் தற்போது பெண்நாய்களுக்கு கருத்தடை செய்யும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதுவரையில் சண்டிலிப்பாய், தெல்லிப்பழை ஆகிய பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் ஆயிரம் நாய்களுக்கு கருத்தடை செய்யப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்ட தனியார் நிறுவனத்தின் அதிகாரியால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-86)

## கட்டைக்காட்டுக்கு தினமும் இரு தடவைகள் பஸ் சேவைகள்

குருநகர், ஜூலை 4
யாழ்ப்பாணம் இ.போ.ச. பஸ் நிலையத்திலிருந்து தினமும் இரு தடவைகள் இயக்கச்சி ஊடாக கட்டைக்காட்டுக்கு பஸ் சேவை நடத்தப்பட்டு வருகிறது. முற்பகல் 11.30 இற்கும், மாலை 5.30 மணிக்கும் இந்தச் சேவை நடைபெறுகிறது.

இந்தப் பஸ் சேவை ஊடாக புல்லாவெளி புனித செபஸ்தியார் ஆலயத்துக்கும் பக்தர்கள் சென்றுவரும் வாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளதாக புல்லாவெளி புனித செபஸ்தியார் ஆலயத்தின் பரிபாலகர் வண. பிதா எம்.யேசுரட்ணம் அடிகளார் அறியத் தந்துள்ளார். (ஜ-51)



# தனி ஈழமே தமிழருக்குத் தீர்வு

## 13ஆவது திருத்தம் ஏமாற்று வேலை என்கிறார் வைகோ



உலக நாடுகளின் கண்களில் மண்ணைத் தூவவும், கொமன்வெல்த் நாடுகளில் இலங்கை அரசு மீதான குற்றங்களை மறைக்கவுமே தற்போது 13 ஆவது திருத் தச் சட்டத்தை இலங்கை அரசு கைகளில் தூக்கியுள்ளது.

சென்னை,ஜூலை 4

''இல்லாத ஊருக்கு, போகாத வழியைக் காட்டுவது போன்றதே ஈழத் தமிழர் பிரச்சினைக்கு 13 ஆவது அரசமைப்புத் திருத்தம் தீர்வைத் தரும் என்பது'' என்று தெரிவித்துள்ளார் ம.தி.மு.க. பொதுச் செயலர் வைகோ. அப்போதைய இலங்கை ஜனாதிபதி ஜெயவர்த்தனவின் தந்திரத்தாலும் மற்றும் போபர்ஸ் ஊழலில் சிக்கித் தவித்துக் கொண்டிருந்த இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி மக்களைத் திசை திருப்ப மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தமே 13 ஆவது அரசமைப்புத் திருத்தம். அது தமிழர்களுக்கு எந்த நன்மையையும் தராது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறும்போது,

''ஈழத் தமிழர் இனப்படு கொலையுடன் தொடர்புடைய பஸில் ராஜபக்ஷ, புதுடில்லி வந்து இந்திய வெளியுறவுத்துறை அமைச்சரைச் சந்தித்துப் பேச்சுகள் நடத்துகின்றார். இவர்கள் இல்லாத ஊருக்கு, போகாத வழியைக் காட்டுகின்றனர்.

13 ஆவது சட்டத்திருத்தம் என்பது இந்திய இராணுவத்தினர் ஈழத்தமிழர்கள் மீது கொடுந்தாக்குதல் நடத்திக் கொண்டு இருந்த காலகட்டத்தில், 1987 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 14ஆம் திகதி இலங்கை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டத் திருத்தம் மட்டுமே. ஈழத் தமிழர்களுக்கு அதில் எந்த அதிகாரமும் தரப்படவில்லை.

உலக நாடுகளின் கண்களில் மண்ணைத் தூவவும், கொமன்வெல்த் நாடுகளில் இலங்கை அரசு மீதான குற்றங்களை மறைக்கவுமே தற்போது 13ஆவது திருத்தச் சட்டத்தை இலங்கை அரசு கைகளில் தூக்கியுள்ளது. இது தொடர்பான விவாதத்துக்காகவே தற்போது புதுடில்லியில் கூடிப் பேசுகின்றனர். ஈழத் தமிழர்களின் பிரச்சினைக்கு உண்மையான தீர்வு தனி ஈழம் மட்டுமே. அதற்காக தமிழர்கள் போராட வேண்டும்'' என்று தெரிவித்துள்ளார்.(ற)

# மாவோயிஸ்ட் தாக்குதலில் 7 பொலிஸார் உயிரிழப்பு



தும்கா, ஜூலை 4

ஜார்க்கண்ட் மாநிலத்தில் மாவோயிஸ்டுகள் நடத்திய திடீர் தாக்குதலில் 7 பொலிஸார் உயிரிழந்தனர். 3 பேர் காயமடைந்தனர்.

இந்த சம்பவம் பகுர் மாவட்டம், அம்ரபாரா காட்டுப் பகுதியில் நடைபெற்றுள்ளது. தும்காவில் நடைபெற்ற உயர் பொலிஸ் அதிகாரிகள் ஆலோசனைக் கூட்டத்தில் பங்கேற்க சென்ற பொலிஸ் அதிகாரிகளின் வாகனங்கள் மீதே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

நூற்றுக்கும் மேற்பட்ட மாவோயிஸ்ட்டுக்கள் சுற்றிவளைத்து தாக்குதல் நடத்தியுள்ளனர். துப்பாக்கி மற்றும் வெடிகுண்டுகள் கொண்டு நடத்தப்பட்ட தாக்குதலில் 7 பொலிஸார் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

அதையடுத்து உள்துறை செயலாளர் என்.என். பாண்டே மற்றும் மாநில காவல் துறைத் தலைவர் ராஜீவ் குமார் ஆகியோர் தாக்குதல் நடைபெற்ற இடத்துக்கு விரைந்து சென்று தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டனர். காயங்களுக்குள்ளான பொலிஸார் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தற்போது, தாக்குதல் நடத்திய மாவோயிஸ்டுகளைத் தேடும் பணியில் 200 மத்திய துணை பாதுகாப்பு படை வீரர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (ற)

# உத்தர்கண்டில் மீண்டும் கன மழை

பாட்னா, ஜூலை 4

கன மழை மற்றும் வெள்ளப் பெருக்கால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள உத்தர்கண்ட் மாநிலத்தில் நேற்று மீண்டும் கனமழை பெய்து வருகின்றது.

இரண்டு வாரங்களுக்கு முன்னர் கன மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் ஏராளமானோர் காணாமற் போயுள்ளனர். அந்த மீட்புப் பணிகள் நிறைவடைந்து, நிவாரணப் பணிகள் ஆரம்பமாகியுள்ள நிலையில் மீண்டும் கனமழை பெய்ய ஆரம்பித்துள்ளது. அதனால் நிவாரணப் பணிகள் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, குறித்த காலநிலை இன்னும் இரண்டு அல்லது மூன்று நாள்களுக்கு நீடிக்கக் கூடும் என்றும் இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.(ற)

# அரச கட்டடத்தில் தீ விபத்து; கட்டுப்படுத்த பெரும் போராட்டம்



மும்பை, ஜூலை 4

மும்பை பிரதான அரசு அலுவலகக் கட்டடத்தில் நேற்று பயங்கர தீ விபத்து ஏற்பட்டுள்ளது. வேகமாகப் பரவிய தீயைக் கட்டுப்படுத்த முடியாது தீயணைப்பு வீரர்கள் கடுமையாகப் போராடி வருகின்றனர்.

மும்பையின் மையப் பகுதியான போலார்ட்பைர் என்ற இடத்தில் உள்ள பழமையான கட்டடத்திலேயே அரசு அலுவலகம் இயங்கி வருகின்றது. அந்தக் கட்டடத்தின் 4 ஆவது தளத்தில் இயங்கி வந்த போதைப் பொருள் தடுப்புப் பிரிவிலேயே தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

நேற்றுக் காலை அலுவலகத்தில் வழமையான செயற்பாடுகள் ஆரம்பமாகி நடைபெற்றுக் கொண்டிருந்த வேளை திடீரென தீ பற்றிக் கொண்டுள்ளது. அதையடுத்து அங்கிருந்த பணியாளர்கள் அவசர அவசரமாக வெளியேற்றப்பட்டு தீயை அணைக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

எனினும் மரங்களால் கட்டப்பட்ட குறித்த பழமையான கட்டடத்தில் தீ வேகமாகப் பரவத் தொடங்கியது. அதையடுத்து தீயணைப்பு வீரர்கள் சம்பவ இடத்துக்கு வந்து தீயை அணைக்கும் முயற்சிகளில் இறங்கினர் எனினும் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருதில் அவர்கள் கடும் சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

குறித்த பகுதியில் மிக முக்கிய ஆவணங்கள் சேமித்து வைக்கப்பட்டிருந்தன என்று கூறப்படுகின்றது. எனினும் ஏற்பட்ட சேதங்கள் குறித்த மதிப்பீடுகள் எதுவும் இது வரை மேற்கொள்ளப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற)

# காங்கிரஸ் முயற்சியாலேயே தமிழக மீனவர்கள் விடுதலை

சென்னை, ஜூலை 4

இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்பட்ட மீனவர்களை விடுவிக்கும் நடவடிக்கைகளில் காங்கிரஸ் கட்சியே முன்னெடுத்தது. மீனவர்களின் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணப்படும் என்று தமிழகக் காங்கிரஸ் கட்சித் தலைவர் ஞானதேசிகன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:

''இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்டு இலங்கைச் சிறையில் உள்ள இராமேஸ்வரம் மீனவர்களை மீட்கும் நடவடிக்கையை தமிழக காங்கிரஸ் கட்சி எடுத்தது. மத்திய வெளி விவகாரத் துறை அமைச்சர், இலங்கை விவகாரங்களைக் கவனிக்கும் வெளிவிவகாரத்துறை அமைச்சகத்தில் உள்ள இணைச் செயலாளர் மற்றும் இலங்கையில் புதிதாகப் பொறுப்பேற்றுள்ள இந்திய தூதர் ஆகியோர் இதற்கு பேருதவி புரிந்தனர்.

இலங்கை அரசில் உள்ள சில அமைச்சர்களும் தலையிட்டு, சிறையில் உள்ளவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்ததுடன், அவர்களை விடுதலை செய்வதற்கான முயற்சியிலும் அரசு ரீதியாகப் பங்கேற்றனர்.கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்களின் ஒரு பகுதியினர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். மீதமுள்ளோரும் விடுதலை செய்யப்படுவர். இந்தப் பிரச்சினையில் உதவிசெய்த அனைவருக்கும் காங்கிரஸ் கட்சிசார்பில் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்'' என்றுதெரிவிக்கப்பட்டுள்ளது.(ற)

# பிரிவினைவாத தலைவர்களுக்கு வீட்டுக் காவல்

ஸ்ரீநகர், ஜூலை 4

காஷ்மீரில் 2 இளைஞர்கள் பாதுகாப்புத் தரப்பினரால் சுட்டுக் கொல்லப்பட்டமைக்குக் கண்டனம் தெரிவித்து நேற்று பேரணி நடத்தப் போவதாக அறிவிக்கப்பட்டதை அடுத்து பிரிவினைவாத தலைவர்கள் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சட்டம் ஒழுங்கு பாதிக்கக் கூடாது என்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகவே, சையத் அலிஷா கிலானி, மிர்வாய்ஸ் உமர் பரூக், மொகம்மது யாசின் மாலிக் ஆகியோர் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இதுவரை எந்த அசம்பாவித சம்பவங்களும் நடைபெறவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.(ற)

# இந்தியா திறந்த வீடல்ல

## ஸ்நோடனின் கோரிக்கை குறித்து குர்ஷித்

புதுடில்லி, ஜூலை 4

அமெரிக்காவில் இருந்து தப்பி வந்த எட்வேர்ட் ஸ்நோடன், இந்தியாவுக்கு புக லிடக் கோரிக்கை வைத் துள்ள நிலையில், இந்தியா ஒன்றும் திறந்த வீடு அல்ல என்று வெளியுறவுத் துறை அமைச்சர் சல்மான் குர்ஷித் தெரிவித்துள்ளார்.

ஸ்நோடன், இந்தியா உட்பட 19 நாடுகளில் அடைக்கலம் புக கோரிக்கை விடுத்துள்ளார் என்று செய்திகள் வெளியானதை அடுத்து சல்மானிடம் அது பற்றி கேள்வி கேட்கப்பட்டது.

''இது பற்றி தனக்கு தெரியவில்லை என்றும், அதிகாரப்பூர்வமாக தெரியாத ஒரு விஷயத்தைப் பற்றி தான் கருத்துக் கூற விரும்பவில்லை என்று அவர் முதலில் தெரிவித்தார்.

பின்னர் கருத்துக் கூறும்போது, ''அடைக்கலம் புக இந்தியா ஒன்றும் திறந்த வீடு அல்ல, சில காலங்களுக்கு முன்பு அதுபோன்று அடைக்கலம் கொடுக்கப்பட்டது. ஆனால் தற்போது மிகவும் எச்சரிக்கையாக, கொள்கைகள் வகுக்கப்பட்டு அதன் அடிப்படையில் செயற்பட்டு வருகிறோம்'' என்று தெரிவித்துள்ளார் அவர். (ற)

# ரூ. 200 கோடி சட்ட விரோதப் பணம் பொலிஸாரின் அதிரடியில் சிக்கியது

புதுடில்லி, ஜூலை 4


மும்பையில் வருமான வரித் துறையினர் மற்றும் தேசிய புலனாய்வு அமைப்பினர் நடத்திய அதிரடி சோதனையில் 150 பொதிகளில் இருந்த பணம், நகைகள் பறிமுதல் செய்யப்பட்டன. 4 லொறிகளில் எடுத்துவரப்பட்ட இந்தப் பணம், நகைகளின் இந்திய மதிப்பு சுமார் ரூ.200 கோடிக்கு மேல் இருக்கும் எனத் தெரிவிக்கப் படுகிறது.

கணக்கில் காட்டப்படாத பெருமளவிலான பணம் மும்பையில் இருந்து குஜராத்துக்கு லொறிகளில் கடத்தப்படவுள்ளன என்று வருமான வரித் துறைக்கு கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து நடத்தப்பட்ட சோதனை நடவடிக்கையின்போதே இந்த லொறிகள் பொலிஸாரிடம் சிக்கியுள்ளன.

தற்போது பணத்தை எண்ணுவதிலும், தங்க, வைர நகைகளை எடைபோட்டு மதிப்பிடும் பணியிலும் 50 வருமான வரித்துறை அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர். அப்பணி முடிந்த பின்புதான் அவற்றின் மொத்த மதிப்பை சரியாகத் தெரியவரும் என்று பொலிஸார் கூறுகின்றனர்.

குறித்த பணம் பயங்கரவாதிகளுக்காக கொண்டு செல்லப்பட்டதா அல்லது அரசியல் கட்சிகளின் நிதிக்காக எடுத்துச் செல்லப்பட்டதா என்பது உறுதிசெய்யப்படவில்லை.

இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த மகாராஷ்டிர உள்துறை அமைச்சர் ஆர்.ஆர். பாட்டீல், ''இந்த சம்பவத்தில் பயங்கரவாதத் தொடர்பு இருந்தால் விசாரணை மும்பை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்படும். இந்தப் பணம் எங்கிருந்து வந்தது என்பது குறித்து வருமான வரித் துறையினர் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்'' என்று தெரிவித்தார். (ற)



நேற்றுமுன்தினம் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட இந்தோனேசியாவின் ஆச்சே மாகாணத்தில் மீட்புப் பணிகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன. 6.1 ரிக்டர் அளவில் பதிவான இந்த நிலநடுக்கத்தால் சிறுவர்கள் உட்பட 22 பேர் உயிரிழந்தனர். 200 க்கும் அதிகமானவர்கள் காயமடைந்துள்ளனர்.

## ‘டிரோன்’ தாக்குதலில் 17 பேர் உயிரிழப்பு

இஸ்லாமாபாத், ஜூலை 4
பாகிஸ்தானின் வசிரிஸ்தான் பகுதியில் அமெரிக்காவின் ஆளில்லா விமானங்கள் (டிரோன்) நடத்திய தாக்குதல்களில் 17 பேர் உயிரிழந்துள்ளனர்.

மக்கள் குடியிருப்புக்களுக்கு அருகிலே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று பாகிஸ்தான் அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

அமெரிக்காவின் ஆளில்லா விமானத் தாக்குதல்கள் பாகிஸ்தான் அரசியலில் பெரும் சிக்கல்களைத் தோற்றுவித்துள்ள நிலையில் அமெரிக்காவின் ஆளில்லா விமானங்களின் தாக்குதல்கள் நிறுத்தப்பட வேண்டும் என பாகிஸ்தானின் புதிய பிரதமர் வலியுறுத்தி வருகின்றார். எனினும் நவாஸ் ஷெரிப் பாகிஸ்தானின் பிரதமராக இரண்டாவது தடவையாகவும் பதவியேற்றதன் பின்னர் அமெரிக்கா இவ்வாறான தாக்குதலை மேற்கொண்டுள்ளது. (ற)

> “ அமெரிக்காவின் ஆளில்லா விமானத் தாக்குதல்களில் உயிரிழப்பவர்களில் பெரும்பாலோனோர் சாதாரண பொதுமக்களே என்று குற்றஞ் சாட்டப்படுகிறது.

# அமெ. மன்னிப்பு கேட்காது

## பிறநாடுகளை உளவு பார்த்த விடயத்தில் திட்டவட்டம்

நியூயோர்க், ஜூலை 4
நட்பு நாடுகள் உட்படப் பிறநாடுகளின் தூதரங்களை உளவு பார்த்தமை தொடர்பில்யாரிடமும்மன்னிப்புக்கேட்க வேண்டிய தேவை இல்லை என்று அமெரிக்கா திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது.

அமெரிக்கா 38 தூதரக அலுவலகங்களை இரகசியமாகக் கண்காணித்தமை தொடர்பான இரகசியத் தகவல்களை அமெரிக்க உளவு அமைப்பான என்.எஸ்.ஏ யின் முன்னாள் பணியாளர் எட்வேர்ட் ஸ்நோடன் அண்மையில் பகிரங்கப்படுத்தியிருந்தார். அதையடுத்து குறிப்பிட்ட சில நாடுகள் இது குறித்து அமெரிக்காவிடம் விளங்கங்களையும் கோரியிருந்தன.



> “ மற்றைய நாடுகளை உளவு பார்ப்பது புதிய விடயம் அல்லவே.
>
> *- பராக் ஒபாமா*

இந்த நிலையில் இதுகுறித்துக் கருத்து வெளியிட்டுள்ள அமெரிக்க வெளியுறவுத் துறைச் செய்தித் தொடர்பாளர் பாட்ரிக் வென்ட்ரல்

‘‘இதுகுறித்து அமெரிக்கா யாரிடமும் மன்னிப்புக் கேட்க வேண்டிய அவசியம் இல்லை” என்று தெரிவித்துள்ளார்.

‘‘நாங்கள் பெரும்பாலான நாடுகளுடன் மிகவும் நெருக்கமான நட்புறவுடன் உள்ளோம். அவர்களுடனான தூதரக ரீதியாலான உறவுகளும் தொடர்கின்றன. அமெரிக்கா 38 நாடுகளின் தூதரங்களை உளவு பார்த்தது என்ற விடயத்தில் யாரிடமும் மன்னிப்புக் கேட்க வேண்டிய அவசியம் இல்லை. இது அனைத்து நாடுகளும் வழமையாக மேற்கொள்ளும் செயற்பாடுதான்’’ என்று தெரிவித்துள்ளார்.

ஆபிரிக்க நாடுகளுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவும் இவ்வாறான கருத்தையே வெளியிட்டுள்ளார். ‘‘மற்றைய நாடுகளை உளவு பார்ப்பது ஒன்றும் புதிய விடயம் அல்லவே’’ என்று அவர் தெரிவித்துள்ளார்.

எனினும் ஐரோப்பிய யூனியன் அலுவலகங்களை அமெரிக்கா உளவு பார்த்தமை தொடர்பில் ஐரோப்பிய யூனியன் கடுமையான விசனத்தை வெளியிட்டிருப்பதுடன், தகவல் உண்மையாக இருக்கும் பட்சத்தில் விளைவுகள் கடுமையாக இருக்கும் என்று எச்சரிக்கையும் விடுத்துள்ளது. (ற)

## ஒபாமாவின் பாதுகாப்பு ஆலோசகராக சூசன் ரைஸ்



வோஷிங்டன், ஜூலை 4
அமெரிக்க ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு ஆலோசகராக சூசன் ரைஸ் நியமிக்கப்பட்டுள்ளார். கடந்த மாதம் 5 ஆம் திகதி அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவால் குறித்த பதவிக்குக் தேர்ந்தெடுக்கப்பட்ட சூசன் ரைஸ் நேற்று உத்தியோக பூர்வமாகப் பதவியேற்றுக் கொண்டார்.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள சூசன் ரைஸ், ‘‘கடந்த நான்கரை ஆண்டுகளாக ஐ.நாவுக்கான அமெரிக்க தூதராகப் பணியாற்றிமை குறித்து மகிழ்ச்சியடைகின்றேன். தற்போது தேசிய பாதுகாப்பு ஆலோசகராகப் பதவியேற்று வெள்ளை மாளிகையில் பணியைத் தொடரப் போவதையிட்டு பெருமைப் படுகின்றேன்’’ என்று தெரிவித்துள்ளார். (ற)

## ஈராக்கில் குண்டு வெடிப்பு

### 54 பேர் சாவு

பாக்தாத், ஜூலை 4
ஈராக்கில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவமொன்றில் 54க்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளனர். குண்டு வெடிப்புச் சம்பவத்தில் பொது மக்கள் 47 பேரும், ஏழு பேருக்கு மேற்பட்ட பாதுகாப்புத் தரப்பினரும் உயிரிழந்துள்ளனர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

குண்டு வெடிப்புச் சம்பவத்துக்கு இதுவரை எந்த அமைப்பும்பொறுப் பேற்காத போதும், சிரிய எல்லைப்பகுதியில் உள்ள அல்குவைதா இயக்கத்தினரே குண்டு வெடிப்பை நடத்தியிருக்கக் கூடும் என்று பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (ற)

## சைபீரியாவில் ஹெலி விபத்து

### 19 பேர் சாவு

ஷகா, ஜூலை 4
சைபீரியாவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஹெலிகொப்டர் விபத்தில் 19 பேர் உயிரிழந்துள்ளனர். குறித்த ஹெலிகொப்டர் 3 விமானிகள் மற்றும் 25 பயணிகளுடன் பறப்பில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோதே விபத்தில் சிக்கியுள்ளது.

அதில் பயணித்தவர்களில் 19 பேர் உயிரிழந்துள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ள போதும், 23 பேர் உயிரிழந்துள்ளனர் என்று உத்தியோக பூர்மற்ற தகவல்கள் குறிப்பிடுகின்றன.

ஷகா பகுதியில் மக்களின் முக்கிய போக்குவரத்துச் சாதனமாக ஹெலிகொப்டரே பயன்படுத்தப்பட்டு வருகின்றது.(ற)

## ஸ்நோடன் தப்பினார் என்ற தகவலால் பொலிவிய ஜனாதிபதிக்கு சோதனை

மொஸ்கோ, ஜூலை 4
அமெரிக்காவுக்கு தலைவலியை ஏற்படுத்திக் கொண்டிருக்கும் எட்வேர்ட் ஸ்நோடன் பொலிவியா ஜனாதிபதியின் விமானத்தில் தப்பிச் செல்கிறார் எனப் பரவிய தகவலை அடுத்து அவரது விமானம் கீழிறக்கப்பட்டு கடும் சோதனைக்கு உள்ளாக்கப் பட்டுள்ளது.



அமெரிக்காவின் இரகசிய உளவு நடவடிக்கைகள் குறித்த தகவல்களைப் பகிரங்கப் படுத்திய எட்வேர்ட் ஸ்நோடன் தற்போது ரஷ்யாவின் மொஸ்கோ நகரில் தங்கியுள்ளார். இந்த நிலையில் ரஷ்யாவில் உச்சி மாநாடு ஒன்றில் கலந்துகொண்டு விட்டு பொலிவியா நாட்டு ஜனாதிபதி இவோ மொராலெஸ் மொஸ்கோவில் இருந்து நேற்றுமுன்தினம் நாடு திரும்பினார்.

அவருடைய விமானத்தில் எட்வேர்ட் ஸ்நோடனும் தப்பிச் செல்வதாகத் தகவல் பரவியது.அதையடுத்துஅமெரிக்க வெளியுறவுத்துறை பெரும் எடுப்பிலான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. அந்த விமானம் பிரான்ஸ் மற்றும் போர்த்துக்கல் ஆகிய நாடுகளின் மேல் பறப்பதற்கு தடை விதிக்கப்பட்டது. அதையடுத்து பொலிவியா நாட்டு ஜனாதிபதியின் விமானம் அவசரமாக ஒஸ்ரியாவில் தரையிறக்கப்பட்டது.

ஒஸ்ரியாவின் வெளியுறவுத் துறை அதிகாரிகள் விமானத்தைத்துருவித்துருவி சோதனை செய்தபின் அந்த விமானத்தில் ஸ்நோடன் இல்லை என்பதை உறுதி செய்தனர். அதையடுத்து விமானம் தொடர்ந்து பறப்பில் ஈடுபட அனுமதி வழங்கப்பட்டது.

இந்தச் சம்பவம் குறித்து பொலிவியா அரசு கடும் கண்டனத்தை வெளியிட்டுள்ளது. ‘‘ஸ்நோடன் ஜனாதிபதியின் விமானத்தில் உள்ளார் என்ற ஆதாரமற்ற தகவலைக் கொண்டு இவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது கண்டனத்துக்குரியது. இந்தச் செயலால் ஜனாதிபதியின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது.

போர்த்துக்கலில் ஜனாதிபதியின் விமானம் தரையிறங்க அனுமதி மறுக்கப்பட்டமை மற்றும் பிரான்ஸ் வான் எல்லையில் பறக்க அனுமதி மறுக்கப்பட்டமை ஆகியவற்றுக்குப் பின்னால் அமெரிக்காவின் வெளியுறவுத் துறையின் பங்கு உள்ளது. பொலிவியாவையும் அதன் ஜனாதிபதியையும் அச்சுறுத்தவே, அமெரிக்க இந்த இரண்டு ஐரோப்பிய நாடுகளையும் பயன்படுத்திக் கொண்டுள்ளது.’’ என்று பொலிவியா அரசு கூறியுள்ளது.

எட்வேர்ட் ஸ்நோடன் பொலிவியா நாட்டிடம் புகலிடக் கோரிக்கைக்கு விண்ணப்பித்துள்ளார். (ற)

## எகிப்து போராட்டத்தில் பாலியல் வன்புணர்வு

### ஆபத்தான நிலையில் பாதிக்கப்பட்டவர்

கெய்ரோ, ஜூலை 4
இலட்சக்கணக்கானோர் பங்கேற்ற எகிப்தின் ஜனாதிபதி முகமது மூர்சிக்கு எதிரான போராட்டத்தின் போது, பெண் நிருபர் ஒருவர் ஐந்து நபர்களால் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

பாதிக்கப்பட்டவர் தற்போது கவலைக்கிடமான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இந்தக் கொடூர செயல் மாபெரும் எழுச்சிப் போராட்டத்தில் நடந்திருப்பது உலகளவில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

எகிப்தில் ஜனாதிபதி முகமது மூர்சி பதவியை விட்டு விலக வேண்டும் என்று மக்கள் போராட்டங்களை நடத்திவருகின்றனர்.

எகிப்து தலைநகர் கெய்ரோவில் மாபெரும் தொடர் போராட்டங்கள் நடந்தவண்ணம் உள்ளன. தலைநகரின் மையப் பகுதியான தாஹ்பீர் சதுக்கத்தை நோக்கி ஞாயிற்றுகிழமை பேரணிகள் புறப்பட்டன.

இந்த நிலையில் பேரணியின்போது வெளிநாடொன்றைச் சேர்ந்த பெண் நிருபர் ஒருவர் ஐந்து பேர் கொண்ட கும்பலால் இலட்சக்கணக்கானோர் சூழ்ந்த முக்கிய போராட்ட பகுதியில் அன்றிரவு பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். அவரை போராட்டத்தில் ஈடுப்பட்ட ஒரு பகுதி இளைஞர்கள் மீட்டுள்ளனர். தற்போது அந்த பெண் பலத்த காயமுற்று மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

மருத்துவ பரிசோதனையில் அந்த பெண் ஐந்து நபர்களால் கொடூரமாக பாலியல் துஷ்பிர யோகம் செய்யப்பட்டமை உறுதிப்படுத்தப் பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் எகிப்து மக்களை அதிர்ச்சியில் உறைய வைத்துள்ளது. (ற)

## ஹாட்லிக் கல்லூரியில் 175 ஆவது ஆண்டு நிறைவையொட்டி முத்திரை வெளியீடு

கெருடாவில், ஜூலை 4

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் 175 ஆவது ஆண்டு நிறைவையொட்டி முத்திரை வெளியீட்டு நிகழ்வு இன்று 9 மணிக்கு இடம் பெறும். தபால் மா அதிபர் நினைவு முத்திரையை வெளியிட்டு வைப்பார்.

ஹாட்லிக் கல்லூரியின் பழைய மாண வரும் சட்டத் தரணியுமாகிய நா. விஸ்ணு காந்தனின் அனுசரணையில் நிகழ்வு இடம் பெறுகிறது. (வ-253-8)

**விற்பனைக்கு**

ஹோட்டல் தேவைக்குரிய சில்வர் கதிரைகள், மேசைகள், கொட் கபேட், வளைவு சோக் கேஸ், டீ பிறீசர், வோட் (Board) இன்னும் பல விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 021 222 9942, 077 008 1806

யாழ்.நகர். (38793) (6.7.2)

**Free -GCE (A/L) Physics**

Video மூலம் தெளிவான விளக்கங்களுடன் GCE (A/L) Physics Pass paper www.erevision.org
Free guest assess *Password-12345*
Sample: http: youto.be/peWjqsg1gM4
**Actware (pvt) Ltd**
**396(570)KKS Road, Jaffna**
**021 222 3359/072 159 6500**
**into@actware.edu.lk**
**www.actware.edu.lk** (38863) (3.6.11)

## முன்மாதிரியான வைத்தியசாலையாக கைதடி சித்த போதனா திகழ வேண்டும்

### பொறுப்பு வைத்திய அதிகாரி தெரிவிப்பு

குருநகர், ஜூலை 4

கைதடி சித்த போதனா வைத்தியசாலை ஒரு முன்மாதிரியான வைத்தியசாலையாக திகழ இங்கு கடமையாற்றும் சகலரும் நேர்மையாகவும் மனப்பூர்வமாகவும் சேவையாற்ற வேண்டும் என்று வைத்தியசாலையின் பொறுப்பு வைத்திய அதிகாரி திருமதி பிறேமா சிவசண் முகராஜா தெரிவித்தார்.

யாழ். கைதடி சித்த போதனா வைத்திய சாலை யின் 40 வருட நிறைவு தின நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே வைத்திய அதிகாரி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

இந்த வைத்தியசாலையில் ஆளணிப் பற்றாக் குறை உள்ளது. ஒரு காலகட்டத்துக்குப் பின்னர் இந்த வெற்றிடங்கள் இது வரை நிரப்பப் படவில்லை. 1992 ஆம் ஆண்டிலிருந்து இங்கு கடமையாற்றி வருகின்றேன். ஒவ்வொரு காலகட்டத்திலும் வித்தியாசமான நிகழ்வுகளுக்கு முகம் கொடுத்து சவால்களை சமாளித்து முன்னேறியுள்ளோம்.

1992 ஆம் ஆண்டிலிருந்து 2000 ஆம் ஆண்டு வரை இயங்கிய மகப்பேற்று நிலையம் தற்போது இங்கு செயற்படவில்லை. வாகனத் தரிப்பிடம், சிற்றூழியர் விடுதி ஆகியவை இங்கு தற்போது அமைக்கப்பட்டு வருகின்றன. இங்கு சேதமடைந்த நிலையில் உள்ள தாதியர் விடுதியை புனரமைப்பதற்கான அனுமதி ஆயுள் வேத திணைக்களத்தால் வழங்கப்பட்டுள்ளது.

சித்த மருத்துவம் செய்வதற்கான உபகர ணங்களைக் கேட்டுள்ளோம். புத்தளம், கிளிநொச்சி, மன்னார் ஆகிய இடங்களிலிருந்தும் நோயாளர் இங்குவருகிறார்கள். இந்த வைத்தியசாலை வளர்ச்சியடைய அனைவரதும் ஒத்துழைப்புத் தேவை என்றார். (எ-51)

**நிதி நடைமுறைப் பாடம் கற்பித்தல்**

கிளிநொச்சி நகரில் பாடசாலை **அதிபர்களுக்கான** வினைத்திறமை காண் தடை தாண்டல் பரீட்சைக்கான அரச நிதி நடைமுறைப் பாடம் அனுபவம் வாய்ந்த அலுவலரால் கற்பிக்கப்படவுள்ளது.

**தொடர்பு: 075 509 6149** (37631)(3.6.11)

## வேல் திருவிழா

வடமராட்சி, ஜூலை 4



தொண்டமானாறு செல்வச் சந்நிதி கோயிலில் இருந்து கதிர்காமத்துக்கு வேல் அனுப்பும் பாரம்பரிய நிகழ்வு எதிர்வரும் 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. அன்றைய தினம் மாலையில் இடம்பெறும் விசேட பூசையைத் தொடர்ந்து இந் நிகழ்வு இடம்பெறும். (ஐ-8)

**பெயர் மாற்றம்**

வத்திராயன் வடக்கு தாளையடியைச் சேர்ந்த பாலசுந்தரம் வள்ளிப்பிள்ளை ஆகிய நான் இன்றிலிருந்து எனது பெயரை பாலசுந்தரம் ஜஸ்மின் என்று மாற்றிக்கொள்வதோடு, இனி வரும் ஆவணங்களில் இவ்வாறே கையெப்பம் இடுவேன் என்பதனையும் அறியத்தருகின்றேன்.

பாலசுந்தரம் ஜஸ்மின் (38804) (45.6.4)

**வேலையாள்கள் தேவை**

ரைப்பிங் (Typing) டிசைனிங், புத்தகம் கட்டுதல், ஸ்கிறீன் பிறிண்டிங் செய்யக்கூடியவர்கள், அல்லது பழகவிரும்புபவர்கள், பிறிண்டிங் மெசின் பழகி வேலை செய்யக் கூடியவர்கள் தேவை.

ஸ்ரீ சாயி பிறிண்டேர்ஸ்
கே.கே.எஸ். வீதி, கோண்டாவில்.
077 220 9474 (38865) (45.6.3)

## அங்குரார்ப்பண கூட்டம் வெள்ளிக்கிழமை

14 கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்கிய பண்டத்தரிப்பு கோயில்பற்றுக்கு உட்பட்ட வகையில் புதிய கால்நடை வளர்ப்போர் கூட்டுறவு சங்கத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம் நாளை பண்டத்தரிப்பு ப. நோ. கூட்டுறவுச் சங்கத்தின் தலைமைக் காரியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபை உறுப்பினரும் பண்டத்தரிப்பு மக்கள் நலன்புரி சங்கத் தலைவருமான சி.மகேந்திரன் தலை மையில் நடை பெறும் இந்த நிகழ்வில் கால் நடை வளர்ப்போர் கூட்டுறவு சங்க உப விதிக்கு அமைய 6 உறுப்பினர்கள் தெரிவு செய்யப் படவுள்ளனர்.

எனவே பண்டத்தரிப்பு கோயில் பற்றுக்கு உட்பட்ட சகல மக்களையும் கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

மேற்படி சங்கம் புனரமைக்கப்பட்ட பின்னர் மானிப்பாய் கோயில் பற்றுக்கு ஒரு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கமும் பண்டத்தரிப்பு கோயில் பற்றுக்கு மற்றொரு சங்கமுமாக இரு சங்கங்கள் வலி. தென்மேற்கில் கால் நடை வளர்ப்போரின் நன்மை கருதி இயங்கவுள்ளன. அத்துடன் இரு சங்கங்களுக்கும் வெவ்வேறு பதிவிலக்கம் வழங்கப் பட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (எ-50)

**UNIVERSITY OF JAFFNA**
**INVITATION FOR BIDS**

1. **The Chairperson, Procurement Committee of University of Jaffna** now invites sealed bids from eligible and qualified bidders for the following works.

| Bid ID | Description of Work | Estimated Cost | Contract Period | Minimum Required Grade | Required Bid Security | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | Security Amount | Valid Period |
| YA/CWP/ AG-KLN/2013-BW | Completion of Construction of Boundary Wall and Repairs to the Existing Boundary Wall at Faculty of Agriculture, University of Jaffna at Ariviyalnagar, Kilinochchi. | Rs.19.0 million | 120 Calander Days | C6 | Rs. 190,000.00 | 22.11. 2013 |
| YA/CWP/ AG-KLN/2013-B-7 | Completion of Construction of Student' Cafeteria, Toilet complex and Chef Quarters at Faculty of Agriculture, University of Jaffna at Ariviyalnagar, Kilinochchi. | Rs.15.0 million | 150 Calander Days | C6 | Rs. 150,000.00 | 22.11. 2013 |

2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure.
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of building construction with the Institute for Construction Training and Development (ICTAD) as indicated in the above table.
4. Bids shall be accompanied by a Bid Security as per the information given in the table.
5. Interested bidders may obtain further information from **Deputy Registrar, Capital Works & Planning Unit, University of Jaffna** and inspect the bidding documents at the same address on any working day from **9:00hrs to 16:00hrs.** Contact numbers are: Phone: **021 2219201** Fax: **021 2219201.**
6. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Deputy Registrar, Capital Works & Planning Unit, University of Jaffna from 04.07.2013 until 24.07.2013** from **9:00 hrs to 15:00 hrs** upon payment of a non refundable fee of Rupees four thousand (**Rs.4,000/-**) for each bid.
7. Bids shall be delivered or sent by registered post to the **Chairperson, Procurement Committee of University of Jaffna, P.O Box 57, Thirunelvely, Jaffna** to reach **on or before 14.00 hrs on the 25.07.2013 or be deposited in the tender box kept in the Registrar's office.** Bids will be opened immediately thereafter **25.07.2013** in the Board room of the University in the presence of the bidders' representatives who choose to attend.
8. Bids shall be Valid for a period for **91 days** from the date fixed for closing of Bids or any extend period.
9. All Bids shall be accompanied by a Bid Security, which shall be;
   - In the form included in Section 09 in the Bidding document.
   - In favour of "**Vice Chancellor, University of Jaffna.**"
   - Issued by one of the agencies indicated in the clause 16 of the Schedule.
10. Pre Bid meeting will be held at the faculty of Agriculture, Ariviyalnagar, Kilinochchi at **10.30 hrs** on the **18th July, 2013**

**Vice- Chancellor,**
**Chairperson, Procurement Committee,**
**University of Jaffna.**
**Thirunelvely, Jaffna.**

(C/10201)(2.6.3)

புதுக்குடியிருப்பு – மல்லிகைத்தீவு
**புனித அந்தோனியார் திருவிழா – 2013**



**கொடியேற்றம்**
05.07.2013 வெள்ளிக்கிழமை
மாலை 5.00 மணிக்கு
**நற்கருணைப் பெருவிழா**
06.07.2013 சனிக்கிழமை
மாலை 5.00 மணிக்கு
**திருவிழாத் திருப்பலி**
07.07.2013 ஞாயிற்றுக்கிழமை
காலை 7.00 மணிக்கு
இவ்விழாவில் பங்குபற்றி அந்தோனியாரின் ஆசீர் பெறுமாறு அனைவரையும் அழைக்கின்றோம். (38861)(2.6.3)

**பங்குத்தந்தை,**
**புதுக்குடியிருப்பு.**

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



29.06.2013 அன்று "தேசமான்ய"
விருதுபெறும் எமது குருவான
புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த
**கலாநிதி பண்டிதர் சிவஸ்ரீ**
**து.கு.ஜெகதீஸ்வரக் குருக்கள் (J.P)**
(நல்லை ஆதீன சிவாச்சாரியார்) அவர்களுக்கு
அவரது சமய சமூக சேவையைப் பாராட்டி
"தேசமான்ய"
என்னும் கௌரவ விருது வழங்கி
அகில இன நல்லுறவு ஒன்றியம்
கௌரவித்துள்ளது.
எங்கள் குருவை எமது ஆலயம் சார்பாக
நாமும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர்: சிவஸ்ரீ சி.சபாரத்தின தேசிகர்**
**பாஸ்கரசர்மா குருக்கள்**
**தர்மகர்த்தா/ பிரதமகுரு**
**பண்டாரியம்மன் கோயில், தம்பசிட்டி, பருத்தித்துறை.** (38410)(2.6.3)

**அழகுக்கலை**



யாழ். நகரில் முதல் தரமான **Tilko Jaffna City Hotel**
மிகச் சிறந்த சேவையை வழங்கிவரும் இவ்வேளையில்
எம் வாடிக்கையாளர் நலன் கருதி எமது Hotel இல்
உள்ள **"Sandy's beauty Care"** இல் ஒரு நாள்
அழகுக்கலை கருத்தரங்கை நடத்த உள்ளோம்.
இதில் ஆர்வமுள்ளவர்கள் எங்களுடன்
இணைந்து முன் பதிவுகளை உறுதிப்படுத்தவும்.

இடம்: **Tilko Jaffna City Hotel**
காலம்: July 6th - 9 am - 4.pm நாளைமறுதினம் (06.07.2013) சனிக்கிழமை
பதிவுசெய்யவேண்டிய இறுதித் திகதி:
July 5th நாளை (05.07.2013) வெள்ளிக்கிழமை
தொ.பே. எண். 021 3210 204, 021 720 0704

**Tilko Jaffna City Hotel**
**70/6, K.K.S. Rd, Jaffna.**
**Tel: 021 222 5969, Hot line: 021 222 7291**

(சி.10203) (46.6.3)



யாழ்.மாநகர சபையால் பண்ணையில் அமைக்கப்பட்ட யாழ். நங்கை சிலைக்கு வர்ணம் பூசி அழகுபடுத்தப்படுகிறது. (ஒ-ரி)

# குடை சாய்ந்தது லொறி

## தொழிலாளர்கள் ஐவர் காயம்

வடமராட்சி, ஜூலை 4
நெல்லியடியிலிருந்து சுண்டிக்குளம் நோக்கி கட்டடப் பொருள்களையும் தொழிலாளர்களையும் ஏற்றிக் கொண்டு சென்ற லொறி ஒன்று நாகர்கோயில் சந்தியில் குடைசாய்ந்ததில் 5 பேர் காயமடைந்தனர்.


சம்பவம் திங்கட்கிழமை மாலை 3.30 மணியளவில் இடம்பெற்றது.

சுண்டிக்குளம் பகுதியில் கட்டடம் ஒன்றை நிர்மாணிப்பதற்காக சுமார் 75 சிமெந்து பைகள், இரும்புக் கம்பிகள் மற்றும் கட்டடம் கட்டுவதற்கான தளபாடங்கள் என்பவற்றையும் தொழிலாளர்களையும் ஏற்றிச் சென்ற லொறி நாகர் கோயில் சந்தியைத் தாண்டியதும் வீதியிலுள்ள பள்ளம் ஒன்றில் குடைசாய்ந்து வீழ்ந்தது.

காயமடைந்த தொழிலாளர்கள் உடனடியாக வீதியால் சென்ற மக்கள் மற்றும் இராணுவத்தினரின் உதவியுடன் அம்பன் கிராமிய வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டனர்.

பின்னர் அங்கிருந்து பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் மூலம் மேலதிக சிகிச்சைக்காக கொண்டு செல்லப்பட்டனர்.

காயமடைந்த ஐவரும் உரும்பிராய், யோகபுரம், அன்னம்மாள் கோயிலடியைச் சேர்ந்தவர்களாவர். ம.நிக்சன் (வயது-17), கஜீபன் (வயது-19), ஜெ.ஜெயந்தன் (வயது-19), கே.துசியந்தன் (வயது-17), மதிவண்ணன் (வயது-19) ஆகிய ஐவருமே காயமடைந்தவர்களாவர். (வ-8)



காயமடைந்த தொழிலாளர்கள் உடனடியாக வீதியால் சென்ற மக்கள் மற்றும் இராணுவத்தினரின் உதவியுடன் மீட்கப்பட்டு அம்பன் கிராமிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

## 6 மாதங்களில் 142 பேருக்கு காசநோய்



யாழ்ப்பாணம், ஜூலை 3
யாழ். குடாநாட்டில் கடந்த 6மாத காலப் பகுதியில் 142 பேர் காசநோய்க்கு இலக்காகி சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்று மாவட்டக் காசநோய் கட்டுப்பாட்டு அதிகாரி டாக்டர் எஸ்.யமுனானந்தா தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணத்தில் உள்ள மார்பு நோய் வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவில் இந்த வருடத்தில் 6 மாத காலப் பகுதியில் 11 ஆயிரத்து 340 பேர் சிகிச்சை பெற்றனர்.

சிகிச்சைக்கு உட்படுத்தியோரில் 142 பேருக்கு காச நோய் அறிகுறி இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. இதில் பாதிக்கப்பட்ட 142 பேரும் தீவிர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். (வ-17)

# இறங்குதுறை புனரமைப்பால் 800 மீனவருக்கு பெரும் நன்மை

யாழ்ப்பாணம், ஜூலை 4
ஐ.ஓ.எம். நிறுவனத்தால் புனரமைப்புச் செய்து கையளிக்கப்பட்ட பாஷையூர் இறங்குதுறையால் 800 மீனவர்கள் நன்மையடைந்து வருகின்றனர் என்று பாஷையூர் புனித அந்தோனியார் கூட்டுறவுச் சங்கம் தெரிவித்துள்ளது.

கடந்த காலங்களில் சேதமடைந்திருந்த இறங்கு துறையில் மீனவர்கள் தமது வள்ளங்கள் மற்றும் படகுகளை அணைத்துக் கட்டுவதில் சிரமங்களை எதிர்கொண்டு வந்தனர். அத்துடன் வள்ளங்கள் மற்றும் படகுகள் சேதத்துக்கு உள்ளாகும் நிலையும் ஏற்பட்டது. ஆஸ்திரேலிய அரசின் நிதியுதவியுடன் ஐ.ஓ. எம். நிறுவனத்தினர் பாஷையூர் இறங்குதுறையைப் புனரமைப்புச் செய்து அண்மையில் மீனவர்களிடம் கையளித்துள்ளனர்.



இதனூடாக பாஷையூரைச் சேர்ந்த 800 இற்கும் மேற்பட்ட மீனவர்கள் தற்போது நன்மையடைந்துள்ளனர். இந்த இறங்குதுறையில் 258 பிளாஸ்ரிக் வள்ளங்களையும், 150 மர வள்ளங்களையும், 35 படகுகளையும் அணைத்துக் கட்டுவதற்கான வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. இதனால் புனரமைப்புச் செய்யப் பட்ட இறங்குதுறையில் அணைபடும் வள்ளங்கள், படகுகள் சேதத்துக்குள்ளாதல் தவிர்க்கப்பட்டுள்ளது என்று சங்கம் தெரிவித்துள்ளது. (வ-14)

# வலி. கிழக்குப் பிரதேச செயலகத்துக்கு முதலிடம்

அச்சுவேலி, ஜூலை 4
தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் ''புதுவீடு நிர்மாணித்தல்'' போட்டியில் வலிகாமம் கிழக்கு பிரதேச செயலகம் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது.

தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் நிதி உதவி மற்றும் இளைஞர்களின் ஒத்துழைப்பு உதவியுடன் வீடு நிர்மாணித்தல் வேலைத் திட்டம்-2012 பிரதேச செயலர் பிரிவு வாரியாக நடைமுறைப் படுத்தப்பட்டது.

யாழ்.மாவட்டத்தில் உள்ள 15 பிரதேச செயலர் பிரிவுகளிலும் மேற்கொள்ளப்பட்ட வேலைத் திட்டம் தொடர்பான மதிப்பீட்டில் வலிகாமம் கிழக்கு பிரதேச செயலர் பிரிவு முதலாவது இடத்தைப் பெற்றுள்ளது. வீடு நிர்மாணம் தொடர்பான மதிப்பீடுகளை கொழும்பில் இருந்து வருகை தந்த உயர் மட்டக்குழு மேற்கொண்டது.

மதிப்பீட்டில் வீட்டின் வளவசதிகள்; இளைஞர்களின் ஒத்துழைப்பு உதவி, கட்டுமானப் பணியின் காலம் உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் தொடர்பாக மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு புள்ளிகள் வழங்கப்பட்டு அதன் அடிப்படையில் முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

புதுவீடு நிர்மாணித்தல் போட்டியில் சங்கானை பிரதேச செயலகம், சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் என்பன முறையே இரண்டாம் மூன்றாம் இடங்களைப் பெற்றுக்கொண்டன. (வ-11)

## சாவகச்சேரி ஆஸ்பத்திரியில்

# உடற்கூற்று பரிசோதனை நேரத்தில் மாற்றம்

தென்மராட்சி, ஜூலை 4
சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் இனிவரும் காலங்களில் பிற்பகல் 3.30 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை மட்டுமே உடற்கூற்றுப் பரிசோதனைகள் நடத்தப்படுமென வைத்தியசாலை அறிவித்தல் பலகையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வைத்தியசாலையின் பொறுப்பதிகாரியே வைத்தியசாலைக்குக் கொண்டு வரப்படும் திடீர் சாவு சடலங்களின் உடற்கூறுப் பரிசோதனைகளை மேற்கொண்டு வருகிறார்.



அவர் விடுதிக் கடமைகள், அலுவலகக் கடமைகள் போன்றவற்றையும் பூர்த்தி செய்த பின்னரே உடற்கூற்றுப் பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளதால் பிற்பகல் 3.30 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை சடலங்களின் உடற்கூற்றுப் பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

# வலி. கிழக்கு மாணவர்கள் 23 பேருக்கு கற்றல் உதவி

அச்சுவேலி, ஜூலை 4
சிறுவர் மற்றும் இளைஞர்களுக்கான வலுவூட்டல் நிலையம் வலி.கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் 23 மாணவர்களுக்கு கற்றலுக்கான உதவியை வழங்கி வருகின்றது.

தாய், தந்தையரை இழந்த குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளுக்கு குறித்த நிலையம் உதவிகளை வழங்கி வருகின்றது.

தரம் 3-4 இல் கல்வி கற்கும் மாணவர்களுக்கு 1,500 ரூபா வீதமும், தரம் 5-7 இல் கல்வி கற்கும் மாணவர்களுக்கு 2,000 ரூபா வீதமும் தரம் 8-9 இல் கல்வி கற்கும் மாணவர்களுக்கு 3,000 ரூபா வீதமும் க.பொ.த.சாதாரணதரத்தில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு ரூபா 3,500 வீதமும் மாதாந்த உதவுதொகை வழங்கப்படுகிறது.

பாடசாலைகளில் கல்வி கற்றுக் கொண்டிருக்கும் தாய்-தந்தையை இழந்த மாணவர்கள் உதவி தேவைப்படின் அதிபர் மற்றும் கிராம அலுவலர் ஊடாக தமது சுயவிவரங்களுடன் பிரதேச செயலக சிறுவர் மேம்பாட்டு அலுவலருடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-11)

## துப்பாக்கி தயாரிப்பு நிலையம் முற்றுகை

திருக்கோவில்,ஜூலை 4
திருக்கோவில் பிரதேசத்தில் இயங்கிவந்த சட்டவிரோத துப்பாக்கி தயாரிக்கும் இடமொன்றை பொலிஸார் சுற்றிவளைத்துள்ளனர்.

திருக்கோவில் பொலிஸாருக்குக் கிடைத்த தகவல் ஒன்றையடுத்து இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது குறித்த இடத்தில் இருந்து சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.


தயாரிக்கப்பட்டுவந்த 3 துப்பாக்கிகள், மூன்று ரவைகள், 10 கிராம் வெடிமருந்து, 10 ஈயத் தகடுகள் ஆகியவற்றை பொலிஸார் குறித்த இடத்தில் இருந்து மீட்டுள்ளனர்.



இந்தச் சம்பவம் தொடர்பில் திருக்கோவில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

மூதூர் தள வைத்தியசாலையில்

## மூதூர் ஆஸ்பத்திரிக்கு ஆளணி கோரி பேரணி



திருகோணமலை,ஜூலை 4
திருகோணமலை, மூதூர் தளவைத்தியசாலையில் நிலவும் பௌதிக மற்றும் ஆளணி வளப்பற்றாக் குறையை நிவர்த்தி செய்யுமாறு கோரிக்கை விடுத்து செவ்வாய்க்கிழமை மூதூரில் பேரணி நடந்தது.

ஆயிரத்துக்கும் அதிகமானோர் கலந்து கொண்ட இந்தப் பேரணி மூதூர் எரிபொருள் நிலைய சந்தியிலிருந்து ஆரம்பித்து தளவைத்தியசாலை வரை சென்றது.

பேரணியில் கலந்து கொண்டவர்கள் வைத்தியசாலைக்குத் தேவையான ஆளணியினைப் பெற்றுத் தருமாறும், போதிய கட்டட வசதிகளை ஏற்படுத்தித் தருமாறும் எழுதப்பட்ட வாசகங்களை தாங்கிய அட்டைகளை ஏந்திச் சென்றனர்.


> 2006ஆம் ஆண்டு முதல் தள வைத்தியசாலையாக தரமுயர்த்தப்பட்ட போதும் போதிய வசதிகள் எதுவும் இல்லாத நிலையிலேயே தொடர்ந்து இயங்கி வருகின்றது.

மிகப்பழைமையான இந்த வைத்தியசாலை 2006ஆம் ஆண்டு முதல் தள வைத்தியசாலையாகத் தரமுயர்த்தப்பட்ட போதும் போதிய வசதிகள் எதுவும் இல்லாத நிலையிலேயே தொடர்ந்து இயங்கி வருகின்றது. (ச-40)

# மைதானக் காணியில் புத்தரின் சிலையை நான்தான் வைத்தேன்

### விகாரைக்கு உரிய காணியை மீட்கும் போராட்டமே இது என்கிறார் விகாராதிபதி

மட்டக்களப்பு,ஜூலை 4
"என்னிடம் மத வேறுபாடுகளோ, சாதி வேறுபாடுகளோ ஒருபோதும் இல்லை. முஸ்லிம்கள் எப்போதும் எனது நண்பர்கள். சிலையை வைப்பதற்கு நான் யாரிடமும் கேட்க வேண்டிய அவசியம் கிடையாது. இந்த புத்தர் சிலையை நான்தான் வைத்தேன்."



இவ்வாறு வாழைச்சேனை புத்த ஜயந்தி விகாரையின் விகாராதிபதி வண. நாவானே அபயவன்ஸ அலங்கார தேரர் தெரிவித்தார்.

வாழைச்சேனை, பறைந்துரைச்சேனை சாதுலியா வித்தியாலய மைதானத்தில் திடீரென தோன்றிய புத்தர் சிலை தொடர்பாக கேட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
இந்த புத்தர் சிலையை நான் தான் வைத்தேன். 1960ஆம் ஆண்டு மார்ச் மாதம் 6ஆம் திகதி வி.ஜேமிஸ் அபுகாமி என்பவர் புத்த ஜயந்தி விகாரைக்கு இரண்டு ஏக்கரும் பதினேழு பேர்ச்சும் அடங்கலான காணியை அன்பளிப்புச் செய்திருந்தார்.

போரின்போது முறையான பராமரிப்பு இல்லாத காரணத்தினால் சிலரால் விகாரையின் காணி பிடிக்கப்பட்டு தற்போது பாடசாலை மைதானம் என்று குறிப்பிடப்படுகிறது.

அதனால் இந்த புத்தர் சிலையை நான்தான் இங்கு வைத்தேன். இதனை முஸ்லிம்களுக்கு எதிரான செயற்பாடாக எவரும் கருதக் கூடாது. புத்த ஜயந்தி விகாரைக்குரிய காணியை மீட்கும் போராட்டமே இது -என்றார்.

விகாரையின் நிர்வாகம் அத்துமீறி இந்தக் காணியில் புத்தர் சிலை வைத்துள்ளது என்று பறைந்துரைச்சேனை சாதுலியா வித்தியால அபிவிருத்திக் குழு செயலர் எஸ்.எம். செயினுதீன் தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் குறித்து சட்டத்தரணிகளுடன் சிவில் வழக்கு தாக்கல் செய்வது தொடர்பாக ஆலோசித்து வருகின்றோம் என்று அவர் மேலும் கூறினார். (ச-ரி)



தேசிய டெங்கு ஒழிப்பு வாரத்தினை முன்னிட்டு சம்மாந்துறையில் பொலிஸ் பொதுச் சுகாதாரப் பரிசோதகர், கிராம உத்தியோகஸ்தர்கள் மற்றும் சிவில் பாதுகாப்பு குழுவினர் மக்களோடு ஒன்றிணைந்து சிரமதானப் பணியில் ஈடுபட்டனர். (ச-ரி)

## புனரமைப்பு காணாத குளம்



திருகோணமலை, ஜூலை 4
திருகோணமலை, மூதூர் பிரதேசத்தில் அமைந்துள்ள 200 வருடங்கள் பழைமை வாய்ந்த குளம் பல வருட காலமாக புனரமைப்பின்றிக் காணப்படுகின்றது.

இந்தக் குளம் சுமார் 600 ஏக்கர் விஸ்தீரனம் கொண்டதுடன் 450 ஏக்கர் வயல் நிலங்களுக்கு இரு போகத்துக்குமான நீரைத் தேக்கி வைக்கக் கூடியது.

இந்தக் குளத்தை நம்பியே, மேன்கமம், மல்லிகைத் தீவு ஆகிய இரு கிராமங்களைச் சேர்ந்த மக்கள் இரு போக விவசாயத்தில் ஈடுபட்டு வந்தனர். ஆனால் தற்போது குளத்துக்கான நீரைக் கொண்டு வருகின்ற வாய்க்கால் சீராக இல்லாமையினாலும் குளத்தின் ஆழம் குறைந்திருப்பதாலும் நீரைத் தேக்கி வைக்க முடியாமல் குளத்து நீரை நம்பி விவசாயத்தில் ஈடுபடும் விவசாயிகள் பெரும் நட்டத்தினை எதிர்நோக்கி வருகின்றனர்.

எனவே இனியாவது சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகள் இந்தக் குளத்தினை துப்புரவு செய்து மீளப்புனரமைப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் வலியுறுத்துகின்றனர். (ச-40)

# தமிழ் வாழ மேடை பேச்சு மட்டும் போதாது

திருகோணமலை, ஜூலை 4
தமிழ்மொழிவாழ வேண்டுமானால் வெறுமனே மேடைகளில் ஏறி தமிழ் வளர்ப்போம் என்று வீர வசனங்களால் பேசினால் மட்டும் போதாது. தமது வாழ்க்கை நடைமுறையிலும் இவ்வாறான செயற்பாடுகளை பின்பற்றுபவனே சிறந்த தமிழ் மொழி ஆர்வலனாக கணிக்கப்படுகின்றான்.

இவ்வாறு கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் எம்.ரி.ஏ. நிசாம் தெரிவித்தார்.

ஞாயிற்றுக்கிழமை திருகோணமலை தமிழ்ச் சங்கத்தினால் நடத்தப்பட்ட முத்தமிழ் விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:
தமிழ் மொழிக்கும் வீரத்துக்கும் நிறையவே சம்பந்தம் உள்ளது. தமிழைப் பேசும் போதே ஒரு கம்பீரமும் வீரமும் ஒருங்கே காணப்படுவது தெரியும்.

வீரம் பாதி வீர வசனம் பாதியுமாகவே முற்கால இலக்கியங்கள் புனையப்பட்டுள்ளன. இவ்வாறுள்ள தமிழ்மொழி உலகில் தற்போது வேகமாக அழிந்து வருகின்ற பத்து மொழிகளில் முதலாவது இடத்தில் உள்ளதை சமீபத்திய ஆய்வுகள் வெளிக்காட்டுகிறது.

தமிழர் ஒருவர் படித்துக் கல்விமானாகவோ அல்லது தொழிற்துறைகளில் விற்பனராக உயர்ந்தாலோ அவர் செய்யும் முதலாவது செயற்பாடு தமிழைப் பேசாமல் விடுவது ஆகும்.


ஆங்கில மொழி பேசுவதன் மூலம் தம்மை அறிவாளியாக காட்ட முயற்சிப்பது தற்போது நம் மத்தியில் அதிகரித்து வருகின்றது.

இவ்வாறான புத்தி ஜீவிகளின் வாயிலிருந்து தமிழ் எப்போது வெளிப்படுகிறதோ அதுதான் தமிழுக்கும் பெருமை அவர்களுக்கும் பெருமையாகிறது.

இருபது ஆண்டுகளின் பின்னர் தமிழ் மொழி தெரியாத தமிழர்கள் வாழும் சூழல் உருவாகும் அபாயம் நம் மத்தியிலே காணப்படுகின்றது. இவ்வாறான சூழல் நம் மத்தியில் இல்லாது ஒழிய வேண்டுமாயின் தமிழ்ச் சங்கங்கள் பல உருவாகி மேடை நிகழ்ச்சிகளுடன் முடங்கி விடாது பாடசாலை மட்டத்தில் தமது பணிகளை ஆற்றுவதற்காக தமது காலடியை எடுத்து வைக்க வேண்டும்.

இதற்கு முழு ஒத்துழைப்பு வழங்குவதற்கு கிழக்கு மாகாண கல்வித் திணைக்களம் காத்து நிற்கின்றது- என்றார். (ச-40)

# மீனவர் இழப்பீட்டுக்கு ரூபா 73.2 மில்லியன்



கொழும்பு,ஜூலை 4

அண்மையில் ஏற்பட்ட சீரற்ற காலநிலையினால் உயிரிழந்த மீனவர்களின் குடும்பங்களுக்கும், சேதமடைந்த படகுகளுக்கும் இழப்பீடு வழங்குவதற்காக 73.2 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது என்று கடற்றொழில் மற்றும் நீரியல் வள அபிவிருத்தி அமைச்சு குறிப்பிட்டது.

இதன்பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த விசேட அமைச்சரவைப் பத்திரத்துக்கு ஜனாதிபதி அங்கீகாரம் வழங்கியுள்ளார் என அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்த மீனவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு இழப்பீடு செலுத்துவதற்கும் சேதமடைந்த படகுகள் மற்றும் உபகரணங்களுக்காக புதியனவற்றை வழங்குவதற்கும் பகுதியளவில் சேதமடைந்த படகுகளுக்கு 50 வீத இழப்பீடு வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இந்த நிவாரணங்களை விரைவில் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

ஏற்கனவே பெற்றுக்கொள்ளப்பட்ட தரவுகளின் பிரகாரம் ஏற்பட்டிருந்த இடரில் 51 மீனவர்கள் உயிரிழந்துள்ளனர்; மேலும் 8 பேர் காணாமற்போயுள்ளனர்.

இதேவேளை, 84 படகுகள் முற்றாக சேதமடைந்துள்ளன. 76 படகுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன என்று அமைச்சின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# 27 ஆயிரம் பட்டதாரிகளுக்கு வாரத்துள் நிரந்தர நியமனம்

## பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு தெரிவிப்பு

கொழும்பு,ஜூலை 4

அரசதுறையில் இதுவரை நிரந்தர நியமனம் வழங்கப்படாத 27,000 பட்டதாரிகளுக்கு ஒரு வாரத்துக்குள் நிரந்தர நியமனம் வழங்கப்படவுள்ளது என்று பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் பி. அபேகோன் தெரிவித்தார்.


இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது:

அரச பட்டதாரிகள் நியமன திட்டத்தின் கீழ் இதுவரை 50,000 இற்கு மேற்பட்டோர் அரச சேவைகளில் உள்வாங்கப்பட்டுள்ளனர். இதுவரை 20,000 பேருக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

மேலும்27,000 பட்டதாரிகளுக்கு ஒரு வாரத்துக்குள் நிரந்தர நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அவர்களுக்கான நியமனக் கடிதங்கள் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் மூலம் சம்பந்தப்பட்ட பிரதேச செயலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு பட்டதாரிகளுக்கு அந்தந்தப் பிரதேசத்திலேயே நிரந்தர நியமனப் பத்திரங்களை வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பட்டதாரிகளை அரச சேவையில் இணைத்துக் கொள்ளும் திட்டத்தில் பட்டதாரிகள் தகைமை அடிப்படையில் உள்வாங்கப்பட்டு பட்டதாரி பயிலுநர்களாக ஒருவருட பயிற்சிக்கு உட்படுத்தப்பட்டனர்.



அதற்கிணங்க அமைச்சுகள், திணைக்களங்கள் மற்றும் ஏனைய அரச நிறுவனங்களில் அவர்கள் இணைத்துக்கொள்ளப்பட்டு ஒரு வருட பயிற்சியின் பின்னர் நிரந்து நியமனங்களப் பெற்று வருகின்றனர்.இவ்வாறு ஒரு வருட பயிற்சியை முடித்துக்கொண்டவர்களில் இதுவரை 20,000 இற்கு மேற்பட்டவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது. மேலும்27,000 பேருக்கான நிரந்தர நியமனம் வழங்கப்படவுள்ளது என்று தெரிவித்தார்.

இன்னும் ஒருவார காலத்துக்குள் அவர்களுக்கான நிரந்தர நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டுவிடும் என்றும் அவர் கூறினார். (ச)



பாதுகாப்பற்ற ரயில் கடவைகளால் காரணமாக ஏற்பட்டுவரும் உயிர் சேதங்களைத் தவிர்ப்பது தொடர்பில் ஆராயும் கூட்டம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் அலரி மாளிகையில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.இந்தக் கூட்டத்தில் போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம, ஜனாதிபதியின் செயலர் லலித் வீரதுங்க,பாதுகாப்பு செயலர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோர் கலந்து கொண்டனர்.

# ரம்ழான் பண்டிகைக்கு விசேட விடுமுறை

கொழும்பு, ஜூலை 4

ரம்ழான் பண்டிகைக் காலத்தில் விசேட விடுமுறை வழங்க பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

ரம்ழான் நோன்பு எதிர்வரும் 9 ஆம் திகதி ஆரம்பமாகி ஓகஸ்ட் 8 ஆம் திகதி முடிவடையவுள்ளதால், இவ்விழாக் காலத்தில் முஸ்லிம் அரச அலுவலர்களுக்கு மத வழிபாடுகளீல் கலந்து கொள்ளக் கூடிய ஒழுங்குகளைச் செய்யுமாறு சகல அமைச்சுக்களின் செயலர்கள், மாகாண சபைகளின் தலைமைச் செயலர்கள், திணைக்களத் தலைவர்கள், அரச கூட்டுத்தாபனத் தலைவர்கள் ஆகியோருக்கு சுற்றறிக்கை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ரம்ழான் பெருநாளுக்கு அரச சேவை கூட்டுத் தாபனங்கள் சட்டவாக்க சபைகளில் கடமையாற்றும் தகைமையுள்ள முஸ்லிம் அலுவலர்கள், பணியாளர்களுக்கு விழா முற்பணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று அமைச்சின் செயலர் பி.பி. அபயகோன் கேட்டுள்ளார்.(ச-ரி)

# '13' திருத்தப்பட வேண்டும்

## பொன்சேகா கூறுகிறார்

கொழும்பு,ஜூலை 4

நாட்டுக்கு பாதகமான நடவடிக்கைகளை எடுக்கும் அதிகாரங்கள் முதலமைச்சருக்கு இருப்பின் '13'ஆவது திருத்தத்தை திருத்த வேண்டும் என்று ஜனநாய கட்சியின் தலைவர் சரத் பொன்சேகா தெரிவித்தார்.



கொழும்பில் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறினார்.

கெடுதியான தீர்மானங்களை எடுக்கும் அதிகாரம் முதலமைச்சர்களுக்குஇருக்குமாயின், அதை நிறுத்தும் வழியைக் கண்டுபிடிக்க வேண்டும் என்று அவர் குறிப்பிட்டார்.

சகல இனங்களினதும் உரிமைகளைப் பாதுகாக்கக் கூடிய புதிய அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும், தற்போதைய நிலையில் '13'ஆவது திருத்தத்தை திருத்துவது ஏற்புடையதல்ல என அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# காலக்கெடுவை நீடித்தது சவூதி

கொழும்பு,ஜூலை 4

சவூதி அரேபியாவில் முறையான ஆவணங்கள் இன்றி வேலை செய்து கொண்டிருக்கும் வெளிநாட்டவர்கள், தங்களது குடிவரவு அந்தஸ்தை சட்டபூர்வமாக்கிக் கொள்ள அந்நாட்டு அரசு மேலும் நான்கு மாதங்கள் கால அவகாசம் வழங்கியுள்ளது.

தங்களது இருப்பிட அந்தஸ்தை சட்டபூர்வமாக்க, வெளிநாட்டுப் பணியாளர்களுக்கு எதிர்வரும் நவம்பர் மாதம் வரை இந்தக் காலக்கெடு வழங்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் முறையான ஆவணம் எதுவும் இல்லாத வெளிநாட்டுத் தொழிலாளர்கள் நாட்டை விட்டு வெளியேற்றப்படுவர் என்று உள்துறை அமைச்சக அறிக்கை கூறுகிறது.(ச)

> முறையான ஆவணம் இல்லாத வெளிநாட்டுத் தொழிலாளர்கள் நாட்டை விட்டு வெளியேற்றப்படுவர்.

# அதிபர்களுக்கான இராணுவப் பயிற்சி திட்டத்தை உடன் கைவிடுங்கள்

## ஆசிரியர் சங்கம் கல்வி அமைச்சிடம் அவசர கோரிக்கை

கொழும்பு,ஜூலை 4

அதிபர்களுக்கு இராணுவப் பயிற்சி வழங்கும் திட்டத்தை அரசு உடனடியாகக் கைவிட வேண்டும் என்று இலங்கை ஆசிரியர் சங்கம் கல்வியமைச்சின் செயலாளரிடம் வலியுறுத்தி உள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் பயிற்சியில் ஈடுபட்டிருந்த பாடசாலை அதிபர் ஒருவர் ஞாயிற்றுக்கிழமை காலை உயிரிழந்த நிலையிலேயே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த 28ஆம் திகதி ரந்தம்பை என்னுமிடத்தில் ஆரம்பிக்கப்பட்ட இராணுவப் பயிற்சி நெறியில் உடற் பயிற்சிக்காக காலையில் 2 கிலோ மீற்றர் தூரம் நடக்க வேண்டும் என்ற நியதிக்கமைய, ஞாயிற்றுக் கிழமை காலை நடைப்பயிற்சியில் ஈடுபட்டிருந்த அதிபர் திடீர் சுகவீனமுற்று வைத்தியாசலைக்குக் கொண்டு செல்லப்பட்டபோது உயிரிழந்தார்.

> பல்கலைக்கழகங்களுக்கு தெரிவாகின்ற மாணவர்களுக்கு தலைமைத்துவப் பயிற்சி என்ற பெயரில், அரசு இராணுவ தர பயிற்சியை வழங்கிவருகிறது.

உயிரிழந்த 52 வயதான டபிள்யு. ஏ.எஸ்.விக்கிரமசிங்க, ரத்தெலுகம பஞ்ஞானந்த தேசிய பாடசாலையின் அதிபர். இவர் உயிரிழந்தமைக்கான பொறுப்பை அரசே ஏற்க வேண்டும் என்று ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

பாடசாலை அதிபர்களுக்கும் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் இராணுவப் பயிற்சி வழங்கும் அரசின் திட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து வந்த இலங்கை ஆசிரியர் சங்கம், இந்தச் சம்பவத்துடனாவது இந்தப் பயிற்சியை அரசு உடனடியாக நிறுத்த வேண்டும் என்று கோரியுள்ளது.

பல்கலைக்கழகங்களுக்கு தெரிவாகின்ற மாணவர்களுக்கு தலைமைத்துவப் பயிற்சி என்ற பெயரில், அரசு இராணுவத்தர பயிற்சியை வழங்கிவருவதாகவும் அது குற்றஞ் சாட்டுகிறது. (ச)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-5678844, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## ஐம்பத்தாறை பின்னோக்கிய நகர்வுக்கு மீண்டும் எடுகோளா?

நாட்டின் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ இன்று புதுடில்லிக்கு பயணமாகிறார் என்பது செய்தி. இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான அபிவிருத்தி விடயங்கள் குறித்து இருதரப்புப் பேச்சுகளுக்கு அவர் அங்கு செல்கிறார் என்று வெளிப்படையாகத் தெரிவிக்கப்பட்டாலும், அதன் பிரதான நோக்கம் வேறு.

அமைச்சர் பஸில் புதுடில்லி செல்வதற்கும், அடுத்த வாரம் (ஒன்பதாம் திகதி) இந்திய அரசின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவசங்கர் மேனன் இலங்கைக்கு விஜயம் செய்வதற்கும் இரு தரப்பு தேவைகள், உள்ளார்ந்த குறிக்கோள்கள் உள்ளன என்பதே உண்மை.

அரசமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தம் குறித்து இந்திய உயர்மட்ட அதிகாரிகளையும், அரசியல் தலைவர்களையும் சந்தித்துப் பேசுவதே தமது புதுடில்லி விஜயத்தின் முழு நோக்கமும் என்று அமைச்சர் பஸில் சிங்கள நாளேடு ஒன்றுக்குத் தகவல் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் பணிப்பின் பேரிலேயே பஸில் அங்கு செல்கிறார் என்பதும் இரகசியமல்ல.

இந்திய அரசின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர், இந்திய - இலங்கை - மாலைதீவு (முத்தரப்பு) மாநாட்டுக்காக கொழும்புக்கு விஜயம் செய்தாலும், அவரது நிகழ்ச்சிநிரலில் மேலதிகமாக ஒரு நாள் சேர்க்கப்பட்டிருப்பது ''பதின்மூன்று'' குறித்த பேச்சுக்களுக்காகவே என்பதும் பகிரங்கமான ஒன்றாகும்.

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் '13' ஒழிப்பு முயற்சி குறித்து தனது கவலையையும், அதிருப்தி யையும் வெளியிட்ட நிலையில், பஸில் ராஜபக்ஷவின் புதுடில்லி விஜயமும், சிவ்சங்கர் மேனனின் கொழும்பு விஜயமும் இடம்பெறுகின்றன. சிவ்சங்கர் மேனன் கொழும்பு வரும் நாளிலேயே 13இல் மாற்றம் செய்வதற்கு நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழுவும் கூடுகிறது. '13' பிரச்சினையை இது மேலும் சூடேற்றிவிட்டுள்ளது என்று கொள்வது தப்பன்று.

'13'ஆவது திருத்தம் நீக்கப்பட வேண்டும். மாகாணசபை ஆட்சி முறைமை ஒழிக்கப்படவேண்டும் என்பதே அரசின் இன்றைய நிலைப்பாடு. ஆனால், இந்தியாவின் தலையீடு காரணமாக அரசின் நடவடிக்கைகளில் தாமதம் ஏற்பட்டுவருவது தெரிகிறது. அதனால்தான் பௌத்த அமைப்புகள் தமது '13' எதிர்ப்புப் போராட்டத் தைத் தீவிரப்படுத்தி வருகின்றன.

மாகாணசபை முறைமையை ரத்துச் செய்யும் தேசிய ஒருங்கிணைப்பு அமைப்பால் நேற்றுமுன்தினம் மஹரகமவில் ஏற்பாடுசெய்யப்பட்ட மாநாட்டில் ஆயிரக்கணக்கான பௌத்த பிக்குகளும், அவர்களுக்கு ஆதரவான அமைப்புகளும் கலந்து கொண்டு '13'இற்கு எதிராகக் குரல் கொடுத்திருப்பது, எதிர்காலத்தில் பௌத்த பிக்குகளின் ஆதிக்கம் மேலோங்கும் சாத்தியங்களை அதிகரிக்க வைத்துள்ளது.

மாகாண சபைகளுக்கு இப்போதுள்ள அதிகாரங்களுடன் வடமாகாணத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றுமானால், அது பிரிவினைக்கே வழிவகுக்கும் என்று சிஹல உறுமய, பொதுபலசேனா உட்பட்ட பௌத்த அமைப்புகள் கருதுகின்றன. பெரும் பான்மை சிங்கள மக்களையும் நம்ப வைத்துள்ளன.

''நாட்டில் தலைதூக்க முற்படும் தமிழ் இனவாதத்தை இல்லாதொழித்து நாட்டின் ஐக்கியத் தையும், சுதந்திரத்தையும் பாதுகாக்க நூறு நந்திக்கடல்களைக்கூட உருவாக்க நாம்' தயாராகவுள்ளோம்'' - என்றவாறாக மஹரகம மாநாட்டில் அமைச்சர் சம்பிக்க ரணவக்க கூளுரைத்துள்ளார்:

கௌதம புத்தர் ஒருபோதும் அரசியலில் ஈடுபடவில்லை. அரசியலில் ஈடுபடும்படி எவரையும் கேட்கவுமில்லை. அஹிம்சையும், சமாதானமும்தான் அவரது பிரதான குறிக்கோள்கள் என்பதனை சமயோசிதமாக மறந்துவிடுவது நன்றன்று.

இன்று இந்த நாட்டில் வாழும் பௌத்த குருமார், இவற்றையெல்லாம் மறந்துவிட்டார்கள். ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுகிறார்கள். அரசியல் கூட்டங்களில் கலந்துகொள்கிறார்கள். பிற சமய வழிபாட்டு ஸ்தலங்களுக்கு சேதம் விளைவிக்கத் தூண்டுகின்றனர். கௌதம புத்தர் இன்று உயிரோடு இருந்திருந்தால், இதற்காக கண்ணீர் வடிப்பார் என்பதில் ஐயமில்லை.

அரை நூற்றாண்டுக்கு முன்னர், 56 ஆண்டுகளுக்கு முன்னர், பிராந்திய சபைகளை நிறுவுவதற்குகெனக் கைச்சாத்தான பண்டா - செல்வா ஒப்பந்தத்துக்கு எதிராகப் பௌத்த குருமார் வீதியில் இறங்கிப் போராட்டம் நடத்தியதும் -

அதனைத் தொடர்ந்து அப்போதைய பிரதமர் எஸ். டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க ஒப்பந்தத்தைக் கிழித்து எறிந்ததும் இந்த நாட்டின் சரித்திரம்.

அதே நிலைமையை உண்டாக்க அத்திபாரம் இடப்படுகிறதோ என்னவோ... காலம்தான் பதில் கூறும். கூறவேண்டும்.

# மோசமாகச் சீர்குலைந்துள்ள இலங்கையின் சட்ட ஆட்சி

தேவன்; இது அவருடைய உண்மையான பெயரல்ல இலங்கையின் தலைநகர் கொழும்பிலுள்ள காவல் துறை நிலையம் ஒன்றில் தான் தடுத்து வைக்கப்பட்டு எவ்வாறான சித்திரவதைகளை அனுபவித்தார் என்பதைக் கூறுகிறார்.

''எனது இரு கைகளும் பின்னால் கட்டப்பட்டு, கண்களும் கட்டப்பட்டிருந்தன. சிலவேளைகளில் எமது தலையைச் சுவர்களில் மோதுவார்கள். அல்லது எமது மார்பில் உதைப்பார்கள். இவ்வாறான நேரங்களில் நான் எனது நினைவுகளை இழந்துவிடுவேன். 'நீ தமிழ்ப் புலி என்பதை ஒப்புக்கொண்டு இந்தத் தாளில் கையெழுத்திடு' எனக் கூறுவார்கள்'' என்கிறார் தேவன்.

2008இன் பிற்பகுதியில், வவுனியாவில் உள்ள கடை ஒன்றில் தேவன் வேலை செய்துகொண்டிருந்தார். அவ்வாண்டு நவம்பர் 29, அதாவது நாட்டில் உள்நாட்டுப் போர் தீவிரமடைந்திருந்தபோது தேவன் தனது நண்பர்களில் ஒருவருடன் கொழும்பு சென்றபோது இவ்விருவரும் வெள்ளை வானில் கடத்தப்பட்டனர். அதன் பின்னர் இவர்கள் இருவரதும் கண்கள் கட்டப்பட்டவாறு தடுப்பு முகாம் ஒன்றுக்கு கொண்டு செல்லப்பட்டனர். அங்கு மூன்று நாள்கள் சித்திரவதை செய்யப்பட்ட பின்னரே தாம் காவல்துறை நிலையம் ஒன்றில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதை இவர்கள் உணர்ந்து கொண்டனர்.

''எம்மைக் கடத்தி வைத்திருந்த முதல் மூன்று நாள்களும் எங்களுக்கு என்ன நடந்தது என்பது தெரியாது. அவ்வளவு தூரம் அவர்கள் எம்மைத் தாக்கியிருந்தார்கள். நாங்கள் இருவரும் ஒரே இடத்தில் தடுத்து வைக்கப்பட்ட போதும், வெவ்வேறு அறைகளில் அடைத்து வைக்கப்பட்டோம். சிலவேளைகளில் எனது நண்பன் தாக்கப்படும் போது அவன் வலியால் துடித்து அழுவதை என்னால் கேட்கமுடிந்தது. அதேபோன்று நான் அழுவதும் அவனுக்கு கேட்டது'' என தேவன், அனைத்துலக மன்னிப்புச் சபையிடம் கூறியிருந்தார்.

தேவன் மீது இலங்கை பாதுகாப்புப் படையினர் சித்திரவதைகள் மேற்கொண்டதானது, தமிழீழ விடுதலைப் புலிகள் என்ற சந்தேகத்தின் பேரில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் சந்திக்கும் சித்திரவதைகளுக்கான சான்றாகக் காணப்படுகிறது.

இலங்கைஅரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான போர் 2009இல் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது. ஆனால், தடுத்து வைக்கப்பட்டுள்ளோருக்கு எதிராக மேற்கொள்ளப்படும் தாக்குதல்கள் தற்போதும் தொடர்கின்றன.

இலங்கை அரசை விமர்சிக்கும் ஊடகவியலாளர்கள், சட்டவாளர்கள், அடிமட்ட செயற்பாட்டாளர்கள் பயங்கரவாத பாதுகாப்புச் சட்ட விதிகளின் கீழ் எவ்வித வெளித் தொடர்புகளுமின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இலங்கை அரசானது தன்மீது விமர்சனங்களை மேற்கொள்பவர்களை அடக்குவதற்கு பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை அதிகம் பயன்படுத்துகிறது. அந்தச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்படும் எவரையும் எவ்வித விசாரணைகளுமின்றி 18 மாதங்கள் வரை தடுத்து வைக்கப்பட முடியும். அல்லது இவர்கள் மீதான வழக்குகள் எவ்வித வரையறையுமின்றி கிடப்பில் போடப்படும். சட்டவாளர்களை வைத்து வாதிடும் உரிமை இவர்களுக்கு மறுக்கப்பட்டது.

இலங்கை அரசை விமர்சிப்பவர்கள் வெள்ளை வான்களில் கடத்தப்பட்டு பின்னர், சடலமாக மீட்கப்படுகின்ற அல்லது காணாமற் போவதை பல்வேறு நம்பகமான அறிக்கைகள் உறுதிப்படுத்துகின்றன. இவ்வாறு கடத்தப்படுபவர்களில் பெரும்பாலானவர்கள் பாதுகாப்பு படையினரின் கட்டுப்பாட்டின் கீழ், தாம் புலிகள் என்பதை ஒப்புக்கொண்டு கைச்சாத்திடும் வரை பல மாதங்களாகத் தடுத்து வைக்கப்படுகின்றனர்.

இதேபோன்றே தேவன் 2011இல் விடுதலை செய்யப்படும் வரை தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதைப்படுத்தப்பட்டார். ''அவர்கள் எனது கையில் பலவந்தமாக பேனா ஒன்றைத் தந்து தாள் ஒன்றில் கையெழுத்திடுமாறு வற்புறுத்தினார்கள். ஆனால் நான் அதற்கு மறுத்துவிட்டேன். இதன் பின்னர், என்னை பல தடவைகள் அடித்தார்கள். ஒருமுறை எனது தலையில் அடித்தார்கள். அப்போது இரத்தம் ஓடியது. இதனால் எனது மண்டையோட்டில் காயம் ஏற்பட்டது. இந்த வடுவை தற்போதும் பார்க்கமுடியும்'' என தேவன் விளக்கினார்.

2008டிசம்பர்01 ஆம்திகதியன்றுகடுமையான சித்திரவதைகளைத் தொடர்ந்து தேவன் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். அவரது கைகள் மற்றும் கால்கள் என்பன கட்டிலுடன் வைத்து சங்கிலியால் பிணைக்கப்பட்டன. ''நான் மலசலகூடத்திற்கு செல்லும் போது மட்டும் எனது கை மற்றும் கால் கட்டுக்கள் கழற்றி விடப்பட்டன. என்னை இரண்டு காவற்துறையினர் பின்தொடர்ந்தனர். நான் மலசலகூடக் கதவைத் திறந்து வைத்தவாறே மலம் கழிக்க வேண்டியிருந்தது'' என தேவன் கூறுகிறார்.

தேவன் கைதுசெய்யப்பட்டு இரண்டு வாரங்களின் பின்னர், இலங்கை காவல்துறை புலனாய்வுப் பிரிவின் கொழும்புக் கிளைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

நான்கு மாதங்களின் பின்னர், தேவன் இலங்கையிலுள்ள மிகப் பிரதான சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டார். தேவன் மீது இன்னமும் உத்தியோகபூர்வமாக குற்றச்சாட்டு முன்வைக்கப்படவில்லை. தான் ஏன் கைதுசெய்யப்பட்டேன், தொடர்ந்தும் தான் ஏன் சித்திரவதைப்படுத்தப்பட்டேன் என்பது தேவனுக்குத் தெரியாது.

தேவன் கொழும்பிலுள்ள வெலிக்கடைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்ட 14 நாள்களில் ஒவ்வொரு நாளும் ஏனைய 70 கைதிகளுடன் நீதிமன்றுக்கு கொண்டு செல்லப்பட்டார்.

தேவன் மற்றும் ஏனைய கைதிகளிடம் அவர்கள் என்ன பேசவிரும்புகிறார்கள் என்பதை நீதிபதி விசாரிக்காது இவர்களுக்கான உத்தியோகபூர்வ தடுப்புக் காலத்தை நீட்டுவதற்கான விசாரணையை மேற்கொண்டு தீர்வை முன்வைத்தார்.

''தேவன் தடுத்து வைக்கப்பட்டதும், அவர் தடுப்பு முகாங்களில் அனுபவித்த சித்திரவதைகளும் அவர் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகளும் இலங்கையில் சட்ட முறைமையில் குறைபாடு உள்ளதையே தெளிவாகச் சுட்டிக்காட்டுகிறது'' என அனைத்துலக மன்னிப்புச்சபையின் ஆசிய-பசுபிக் பிராந்திய பிரதி இயக்குநர் பொலிறஸ்கொற் தெரிவித்துள்ளார்.

''தேவனுக்கு எதிராக எவ்வித குற்றச்சாட்டுக்களும் முன்வைக்கப்படாது மீண்டும் மீண்டும் துன்புறுத்தப்பட்டார் என்பதே சுட்டிக்காட்டத்தக்க விடயமாகும். தான் எவ்வளவு காலம் அதாவது ஒரு நாளா, இரண்டு நாளா அல்லது ஐந்து மாதமா அல்லது 30 ஆண்டுகளா தடுத்து வைக்கப்படுவேன் என்பதை தேவன் அறியவில்லை. இதனால் இலங்கையின் சட்ட முறைமையில் எந்த அளவுக்கு தவறு உள்ளது என்பதை அறியமுடியும்'' என பொலிறஸ்கொற் சுட்டிக்காட்டியுள்ளார்.

தேவனை சிறையிலிருந்து விடுதலையாக்குவதற்காக அவரது குடும்பத்தவர்கள் சட்டவாளருக்கு பணம் கொடுத்தனர். அத்துடன் சம்பந்தப்பட்டவர்களுக்கு இலஞ்சம் கொடுத்தே தமது மகனை மீட்டெடுத்தனர். இவ்வாறான சம்பவமானது இலங்கையில் சட்ட ஆட்சி குலைந்துள்ளதற்கான எடுத்துக்காட்டாகும்.

(நன்றி: புதினப்பலகை)

நாங்கள் இருவரும் ஒரே இடத்தில் தடுத்து வைக்கப்பட்ட போதும், வெவ்வேறு அறைகளில் அடைத்து வைக்கப்பட்டோம். சிலவேளைகளில் எனது நண்பன் தாக்கப்படும் போது அவன் வலியால் துடித்து அழுவதை என்னால் கேட்கமுடிந்தது. அதேபோன்று நான் அழுவதும் அவனுக்கு கேட்டது'' என தேவன், அனைத்துலக மன்னிப்புச் சபையிடம் கூறியிருந்தார்.



# பெற்றோர்- பிள்ளைகள் உறவு சீரானால் பிரச்சினைகளுக்கு முற்றுப்புள்ளி


கவிதாயினி

பெற்றோர்-பிள்ளைகள் உறவு எப்படி இருக்க வேண்டும்?

★ அது எவ்விதம் அமைந்தால் பிள்ளைகளுடைய எதிர்காலம் சிறக்கும்?

★ பெற்றோரின் எதிர்பார்ப்புகளை பிள்ளைகள் எவ்வாறு பூர்த்தி செய்ய முடியும்?

இத்தகைய பல கேள்விகளுக்கு விடை, பெற்றோர் பிள்ளைகள் இருவரும் பரஸ்பரம்காட்டும்பாசத்தில்,அந்தஅன்னியோன்னியத்தில் தான் இருக்கிறது. பெற்றோரின் கடுமையான கண்டிப்பு பெரும்பாலும் தோல்வியில் தான் முடிந்திருக்கிறது.



ஒரு குறிப்பிட்ட பருவத்துக்குப் பிறகு இளையவர்களுக்கு அறிவுரை பிடிக்காது. கண்டிப்பும் பிடிக்காது. பின் எப்படித்தான் அவர்களை வழி நடத்துவது? பெற்றோர்தம் பிள்ளைகளிடம் காட்டும் உன்னத நட்பின் மூலமாகத் தான் இதைச் சாதிக்க முடியும். பெற்றோர் பிள்ளைகள் உறவு, நட்பு அந்தஸ்தை அடையும்போது கண்டிப்பான அறிவுரை கூட, பிள்ளைகளால் நல்ல ஆலோசனையாக எடுத்துக் கொள்ளப்பட்டு விடும்.

'உங்கள் பிள்ளைகள் எப்போது உங்கள் கைகளை மீறினர்? எதனால் மீறினர்? யோசித்துப் பார்த்தால் நீங்கள் எப்போது கண்டிப்பு என்ற அஸ்திரத்தை அளவுக்கு மீறிப் பிரயோகிக்க ஆரம்பித்தீர்களோ, அப்போது முதல் தான் அந்த ஆட்டம் ஆரம்பித்திருக்கும். எப்போதும் முகத்தை கடுகடுவென்று வைத்துக் கொண்டு தொட்டதற்கெல்லாம் குறை சொல்லிக் கொண்டிருப்பது. தேவையற்ற சந்தேகங்களை மனதில் ஏற்படுத்திக் கொண்டு அவர்கள் போகும் இடமெல்லாம் தொடர்வது, இதெல்லாம் உங்கள் பிள்ளைகளின் மனதில் உங்களைத் தரம் தாழ்த்தி விடும். இதுவே தொடரும்போது ஒரு கட்டத்தில் இம்மாதிரியான வதந்தியை உண்மையாக்கினால் தான் என்ன என்கிற அளவுக்குக் கூட அவர்கள் போய்விடும் அபாயம் உண்டு.

கண்ணாடியில் முகம் பார்க்கிறீர்கள். சோர்வாக இருந்தால் கண்ணாடி உடனே காட்டிக் கொடுத்து விடும். உடனே சிற்சில ஒப்பனைகள் மூலம் சோர்வைச் சரி செய்து விடலாம். ஆனால் உங்கள் மனக்கண்ணாடி தான் உங்கள் பிள்ளைகள். அதில் சந்தேகம் என்ற கல்லை எறிந்து தேவையில்லாமல் கீறல் விழுந்து போகும் காரியத்தை செய்து விடாதீர்கள்.

இதனால் உங்கள் பிள்ளைகளுக்கு மன அழுத்தம் ஏற்பட்டு, நாளடைவில் பலவிதமான வியாதிகளுக்கு ஆட்பட்டு விடுவார்கள். உங்கள் பிள்ளைகள் பற்றிய தேவையற்ற சிந்தனைகளை தூரம் தள்ளுங்கள். அவர்கள் எதிர்காலம் என்னாகும் என்ற பயத்தை அப்புறப்படுத்துங்கள். நல்ல நண்பர்களாக எப்போதும் அவர்களிடம் கலகலப்பாக மனம் விட்டுப் பேசுங்கள்.

நாளடைவில் அவர்களும் ஒரு நல்ல தோழனாகவோ தோழியாகவோ உங்களை நேசிக்க தொடங்கிவிடுவார்கள். இந்த நேசம் உங் களுக்குள் ஒரு நெருக்கமான பிணைப்பை உருவாக்கும். அந்த பிணைப்பு அவர்களை உங்களிடம் வெளிப்படையாக நடக்கத் தூண்டும். பிறகு அவர்களுடைய வாழ்க்கையில் ஒளிவு மறைவே இருக்காது. அதன் பின் அவர்களைப் பார்த்து நீங்கள் பயப்பட வேண்டிய அவசியமும் நேராது. உங்கள் வாழ்க்கையில் நடந்த ஏதேனும் ஒரு விஷயம் உங்களை வெகுவாக பாதித்திருந்தால் அதனை அவர்களிடம் மனம் விட்டுப் பேசலாம். அது அவர்களுக்கு ஒரு பாடமாக இருக்கும். அனுபவங்களே ஒருவருடைய அறிவை விசாலமாக்கும். இளைய பருவத்தில் உங்களுக்கு எதிர்பாராமல் ஒரு கசப்பான அனுபவம் கிடைத்திருக்கலாம்.

நேர்ந்த அந்தப் பாதிப்பை மட்டும் தவிர்த்து, "நல்லவேளை அந்த நேரத்தில் தெய்வாதீனமாக தப்ப முடிந்தது' என்பதாக சொல்லி அவர்களை எச்சரிக்கையாக இருக்கச் செய்யலாம். இம்மாதிரியான ஆலோசனைகள் அவர்களுக்கு பிரச்சினைகளை சமாளிக்கும் மனப் பக்குவத்தைக் கொடுக்கும். ஒரேநாளில் மொத்த அனுபவங்களையும் அவர்களிடம் புகுத்த முயற்சிக்காதீர்கள்.

அவ்வப்போது ஏற்படும் சூழ்நிலைக்கு தக்க அனுபவங்களை அவர்களோடு பகிர்ந்து கொள்ளும்போது அவர்களுடைய நம்பிக்கை பலப்படும். பிள்ளைகள் சில சமயம் மனதில் எதையாவது மறைத்து தனக்குத் தானே தீர்வு தேடிக் கொள்ள விரும்புவார்கள். அந்த நேரத்தில் முறையான பகிர்தல் இருந்தால் பிரச்சினைகளை எளிமையாக்கிக் கொள்ளலாம்.

பிள்ளைகள் வீட்டுக்குள் எப்படி இருக்கிறார்கள் என்பது எளிதில் தெரிந்துவிடும். ஆனால் வெளியில் போய் என்ன செய்கிறார்கள், யார் யாருடன் பழகுகிறார்கள் எங்கெங்கே செல்கிறார்கள் என்று அவர்களுடைய செயல்பாடுகளைக் கவனித்துக் கொண்டிருக்க முடியாது. ஆனால் இதையெல்லாம் பெற்றோரிடம் பகிர்ந்து கொள்ளும் மனப்பக்குவம் வந்தால் தான் அவர்களே தமக்குள் ஏற்படும் பிரச்சனைகளை மனம் விட்டுப் பேசத் தொடங்கி விடுவார்கள். சந்தேகம் என்பது நல்ல நட்பை பிளவு படுத்தும் ஆயுதம். இந்த ஆயுதத்தை எப்போதும் நாம் பிரயோகப்படுத்தக் கூடாது. அது மனதளவிலும் ஓர் ஆழமான பாதிப்பை ஏற்படுத்தும். நன்மை, தீமைகளை பகுத்தறிந்து உணரும் ஆற்றலை நாம் அவர்களுக்கு கொடுத்தால் மட்டும் போதுமானது சில தவறுகள் எந்த வகையான பின் விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை தக்க உதாரணங்களோடு நாம் அவர்களுக்கு விளக்கி அவர்களை தவறுகளிலிருந்து பாதுகாத்திட வேண்டும்.

வெளிப்படையான நட்பு பல பிரச்சினைகளுக்கு அப்போதே உரிய தீர்வைச் சொல்லி விடுகிறது. தனது கட்டுக்கோப்பான அணுகுமுறையையும் மீறி ஏதேனும் நேர்ந்து விடுமோ என்ற பயத்தில் சில பெற்றோர்கள் சதா நச்சரித்துக் கொண்டிருப்பது, சகல விஷயத்திலும் மிகவும் கண்டிப்பாக இருப்பது இதெல்லாம் வேண்டாத பின் விளைவுகளைத் தான் ஏற்படுத்தும்.

சில விஷயங்களில் விட்டுக் கொடுக்கவும் நாம் பழகிக் கொள்ள வேண்டும். நாம் அவர்களை கைக்குள் வைத்திருப்பதாக நினைத்து ஏதாவது ஒரு விஷயத்தில் பிடியை இறுக்கும் போது அது உடைந்து விடும் வாய்ப்பிருக்கிறது. அவர்களையும் மீறி ஏதேனும் தவறு நேர்ந்து விட்டால் மன்னிக்கும் பெருந்தன்மை பெற்றோருக்கு இருக்க வேண்டும். உங்கள் பிள்ளைகளுடைய எதிர்காலக் கனவுகள் பற்றி மிகுந்த ஆர்வத்துடன் நீங்கள் கேட்கும் போது, அவர்களுக்கு உங்களுடன் பேசுவதில் ஒரு சுவாரசியம் ஏற்படும். அந்த சுவாரசியம் தான் உங்கள் அன்புக் கடிவாளம். அதை ஒருபோதும் நழுவ விட்டு விடாதீர்கள். அது கடிவாளம் என்பதை கடைசிவரை அவர்கள் தெரிந்து கொள்ளாதபடி பார்த்துக் கொள்வதில் தான் உங்கள் சாமர்த்தியமே இருக்கிறது.

# நேரத்தை முகாமை செய்வது எப்படி...?

நடேசு தயாளன்

நேரத்தை முகாமை செய்தல் என்பது ஒழுங்கு படுத்தல், பட்டியலிடல், பங்கீடு செய்தல் என்பவை தொடர்பான ஒரு கலையாகும். குறித்த நேரத்தை வினைத்திறனான வெளியீட்டுக்குப் பொருத்தமானதாக உருவாக்குவதாகும். நேர முகாமைத்துவம் தொடர்பான வேலைப் பட்டறைகள், தினத் திட்டமிடல் அட்டவணைகள் என்பன இயந்திர மயமான உலகில் நேரத்தினை எவ்வாறு முகாமை செய்தல்என்பதுதொடர்பிலானஅறிவை எமக்கு வழங்குவதாயுள்ளது.

நேர முகாமைத்துவமானது ஒவ்வொருவருக்கும் அவசியமானதாகும். இதன் முதல் படியானது வீட்டில் அல்லது வேலைத் தலத்தில் நேரத்தை முகாமை செய்வதிலேயே தங்கியுள்ளது. நேர முகாமைத்துவமானது நேரத்தை வினைத்திறனாகவும் சமமான முக்கியத்துவத்துடனும் அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் கையாள வழி சமைக்கிறது. இதன் மூலம் அழுத்தத்தை இல்லாது செய்தல் என்பதோடு சிறப்பான பெறுபேற்றினையும் அடைய முடிகின்றது. இச் செயன்முறையின் படிகளாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1. ஆற்ற வேண்டிய கடமைகளைப் பட்டியலிடல்
2. கடமையை ஆற்றுகின்றபோது அதற்கான தயார் நிலையில் இருத்தல்.
3. கடமையை நிறைவேற்றும் வரை அதனை நிறுத்தாது செயற்படுத்தல் என்பனவாகும்.

நேரமானது விசேடமான வளமாகும். அதனை பின்னர் பயன்படுத்துவதற்காக களஞ்சியப்படுத்தவோ, சேமித்து வைக்கவோ முடியாது. ஒவ்வொருவரும் வரையறுக்கப்பட்டதும் சமமானதுமான அளவுடைய நேரத்தை ஒவ்வொரு நாளும் பெறுகின்றனர். மேலும் பெரும்பாலானவர்கள் தாம் செய்ய வேண்டிய செயற்பாடுகள் அதிகமாகவுள்ளதாகவும் ஆனால் போதுமான அளவு நேரம் இல்லாதுள்ளது எனவும் உணர்கின்றனர். இதன் காரணமாக இலக்குகளை அடைய முடியாதவர்களாகின்றனர். இந்த நிலையில் நேர முகாமைத்துவமானது ஆற்ற வேண்டிய பணிகளை சீரான முறையில் ஆற்றுவதற்கான வாய்ப்பை வழங்குகின்றது.

நேர முகாமைத்துவமானது செயற்பாடுகளை முன்னுரிமைப்படுத்த உதவுகின்றது. ஒரு நாளின் நேரமானது இருபத்து நான்கு மணித்தியாலங்களாக உள்ளதனால் அதனைத் திட்டமிடுவதன் மூலம் செயற்பாடுகளுக்கு வேண்டிய நேரத்தை இனங்காண முடிகின்றது. அத்தோடு நேரத்தையும் சக்தியையும் விரயமாக்குவதனைக் குறைப்பதாகவும் அமைகிறது. அது மட்டுமல்ல நபர்களை வெளியீட்டு ஆற்றலுள்ளவர்களாகவும் மாற்றுகின்றது. சரியான நேரத்தில் சரியான விடயத்தினைச் செயற்படுத்தவும் துணை நிற்கின்றது என்பதோடு இயந்திரமயமான உலகில் நேர விரயத்தையும் கட்டுப்படுத்துகின்றது.

உடலியக்கம் சார்ந்த நிலையானது ஆரோக்கியமான உடலையும், அழுத்த நிலைக் குறைவினையும் பெற்றுத் தருகின்றது. புலமை நிலையானது கற்றலையும் உள விருத்தி நிலையையும் உள்ளடக்கியதாகவுள்ளது. சமூக அந்தஸ்து நிலையானது தனியாள் விருத்தி, நெருக்கமான உறவு நிலை என்பவற்றோடு சமூகத்துக்கு ஆர்வத்துடனான பங்குபற்றுதலை வெளிப்படுத்துவதாகவும் இருக்கும். தொழில் நிலையில் வேலை ஈடுபாட்டையும், அபிலாசையையும் குறிக்கின்றது. உணர்வு ரீதியிலான அபிலாசை நிலையானது சரியான உணர்வு நிலையினையும் பதட்ட நிலையைக் குறைப்பதாகவும் இருக்கும். ஆன்ம நிலையை நோக்கின் உண்மை நிலையைத் தேடியறிதல் என்பதாகவுள்ளது. இந்தச் செயற்பாடுகள் தொடர்பில் கவனம் செலுத்தும் நிலையானது நேர முகாமைத்துவத்தின் பகுதி அம்சங்களாகவுள்ளன. இவற்றில் ஒரு விடயத்தினைப் புறக்கணிக்கும் ஒருவர் வாழ்வின் முக்கிய பகுதியினைப் புறக்கணித்த ஒருவராகின்றார்.

நேரத்தை முகாமை செய்தல் கற்றுக் கொள்ளல் அல்லது விருத்தி செய்தல் என்பன பல அடிப்படையான செயற்பாடுகளை உள்ளடக்கியதாகும்.

1. இலக்குகளை உடனடியானதா நீண்ட காலத்துக்குரியதா எனத் தீர்மானித்தல்.
2. இலக்குகளை அடைவதற்கு எத்தகைய அணுகு முறை அவசியமானது எனத் தீர்மானித்தல்.
3. எம்மைச் சுற்றியுள்ளவர்களின் ஆதரவைப் பெற்றுக் கொள்வதன் மூலம் செயற்பாடுகளை வெற்றிகரமாக முன்னெடுப்பதோடு நேரத்தையும் சேமிக்க முடிதல்.
4. அவசியமான விடயங்களைக் கையாள்வதில் காலதாமதத்தைத் தவிர்த்தல்
5. வெற்றி தொடர்பில் நேரான மனப்பாங்கினை வளர்த்தல்.
6. அனைத்துச் செயற்பாடுகள் தொடர்பிலும் பதிவுகளைப் பேணல்.

இதன் காரணமாகவே ஒருவருடைய நேர முகாமைத்துவமானது கலையாகவும் கட்டியெழுப்பக் கூடிய விஞ்ஞானப்பாங்கான செயற்பாடு எனவும் கொள்ளப்படுகின்றது. இவ்வாறான செயற்பாடுகளுடனான நேர முகாமைத்துவமானது பல வெற்றிக் கதவுகளைத் தட்டுவதற்கான வாய்ப்பை ஒருவருக்குப் பெற்றுத் தருவதாக இருக்கும்.

நேரத்தை முகாமை செய்வதற்கு வினைத்திறனான தந்திரோபாயங்கள் கையாளப்படுதல் அவசியமாகும். அதன் மூலமே முரண்பாடுகளற்ற வகையில் எமது தேவைகளுக்கு நேரத்தைப் பயன்படுத்திக் கொள்ள முடியும். ஒரு நிறுவனத்தில் நேர முகாமைத்துவம் கையாளப்படுவதன் மூலம் அந்த நிறுவனத்தின் செயற்பாடுகளில் பின்வரும் நன்மைகள் பெற்றுக் கொள்ள முடியும்.

1. அவசியமான கடமைகள் எவை என்பது தொடர்பான தப்பான அபிப்பிராயங்கள் குழப்பங்கள் இல்லாது போகும்.
2. அவசியமான வேலையை மேற்கொள்வதற்கான சந்தர்ப்பங்கள் உருவாக்கப்படும்.
3. ஆள்களுக்கிடையேயான தொடர்புகள் வலுப் பெறுவதோடு முரண்பாடுகள் ஏற்படுவது தவிர்க்கப்படும்.
4. ஊழியர்களுக்கிடையேயான பணிக் கையளிப்பு வாய்ப்புக்கள் சிறப்பான முறையில் இடம்பெறும்.
5. ஊழியரின் வெளியீட்டு இயலுமை அதிகரிக்கும்.
6. குறித்த கால எல்லைக்குள் ஆற்ற வேண்டிய பணிகளை நிறைவேற்றுவதற்கு ஊழியருக்கு உதவ முடியும்.

நேரமென்பது மாற்றமடையாத காரணியாகவுள்ளதால் எமக்குக் கிடைக்கும் நேரத்தில் நாம் என்ன செய்ய வேண்டும் என்பது தீர்மானிக்கப்பட வேண்டும். நேரத்தை எந்தச் சந்தர்ப்பத்தில் விரயமாக்... கிறோம் என்பது இனங்காணப்... வேண்டும். நேரத்தை முகா... செய்வதன் மூலம் எமக்குக் கிடை... கின்ற நேரத்தை உச்ச அளவி... பயன்படுத்த முடிவதோடு நாளா... தம் வெற்றிகரமான செயற்பா... களை மேற்கொள்ளவும் முடியும். ஆரோக்கிய நிலையைப் பேண... அழுத்த நிலையைக் குறைத்து தர... வாழ்வை அனுபவிக்கவும் முடியு...

# தற்காப்புக்கலை



தன்னையும், மற்றவர்களையும் பாதுகாக்கும் நோக்குடன் கற்றுக்கொள்ளும் தற்பாதுகாப்புக் கலை அவசியமானதொன்று. வரலாறுகளோடு உருவாகிய இந்தக் கலை உலகம் முழுவதும் பரவிக் காணப்படுகிறது. இக் கலையில் பயிற்சி பெற்றவர்கள் மூலமாகக் கற்றுக்கொள்ளலாம். தற்காப்புக் கலை ஆண்களை மட்டுமல்ல பெண்களையும் அதன்பால் ஆர்வம் கொள்ளச் செய்தது. அவற்றுள் கராட்டி, குங்ஃபூ, சிலம்பு, வர்மக்கலை, டிரகன், ஸ்டிக், வாள், ஜக்கிடோ, பொக்ஸிங், ஜுடோ என்ற பல வடிவங்கள் கொண்ட தற்காப்புக் கலையில் திறம்பட பயிற்சி பெற்றவர் உள்ளனர். கொலை, கொள்ளை, வழிப்பறிப்பு போன்றவற்றிலிருந்தும் பெண்கள் தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காக இந்தக் கலையை ஆர்வத்தோடு கற்று பயன் அடைதல் நன்று.

*சிந்து சிவதாஸ், ஐங்கரன் வீதி,*
*சுதுமலை தெற்கு.*

# நவ நாகரிகத்தை அதிகம் நாடிச் செல்வது பெண்களே...



21 ஆம் நூற்றாண்டில் காலடி பதித்து வாழ்ந்து கொண்டிருக்கும் இந்த நவீன உலகிலே நவநாகரிகத்தை அதிகம் நாடிச் செல்பவர்கள் பெண்கள் என்பது மட்டும் தெளிவாகி இருக்கிறது. அன்றைய காலகட்டத்தில் பெண்களிடம் அடக்கம், பொறுமை, சாந்தம் எனப் பல பண்புகள் நிறைந்து காணப்பட்டன. அதிகமான பெண்களிடம் அவை சிறிது சிறிதாக நவீனமயமடைந்து இன்று நாகரிகம் என்ற போர்வையில் பெண்கள் தங்களுடைய அனைத்துச் செயற்பாடுகளையும் சம்பிரதாயத்துக்கு மாறாகவும், கலாசாரத்துக்கு மாறாகவும் பேணி வருகின்றனர். அதிகமான பெண்கள் தங்களுடைய உடைகளிலும் சரி , செயற்பாடுகளிலும் சரி தாங்கள் பெண்கள் என்பதை மறந்து விடுகின்றனர். நவீன உலகிலே நாகரிகம் கூடிக்கொண்டே செல்கிறது. நவநாகரிகம் என்ற போர்வையில் பெண்கள் தமது மானம், பெண்மை என்ற இரண்டையும் இழக்கும் நிலை ஏற்படுகிறது. பெண்கள் கடவுளை வணங்கக் கோயிலுக்குச் செல்லும்போதும் கூட குட்டைப் பாவாடையுடனும், ஆண்களைப் போல சிறிய ரீசேர்ட் உடனும் செல்கின்றனர். நாம் எங்கு, எதற்காகச் செல்கிறோம் என்பது கூட அவர்களின் மூளைக்கு எட்டுவதில்லை. அதற்குக் காரணம் நாகரிகம் என்ற போர்வை.

இன்றைய காலகட்டத்தில் பல பெண்கள் தமது அழகையும், அணிகலன்களையும் பற்றி மட்டுமே சிந்திக்கின்றனர். அதனால் குடும்பம், பிள்ளைகள் என அனைத்தையும் மறந்து விடுகின்றனர். ஒரு பெண் திருமணம் ஆனவள் என தன்னை அடையாளப்படுத்தவே கழுத்தில் மாங்கல்யமும், நெற்றியில் குங்குமமும், காலில் மெட்டியும் அணிகிறாள். அதனை 19 ஆம் நூற்றாண்டுடன் உலகில் காண்பது அரிதாகிப் போய்விட்டது. ஏனெனில் ஒரு பெண் தான் கட்டிய மாங்கல்யத்தை விட தன் நாகரிகம்தான் அவசியம் என எண்ணுகின்ற நிலைமை இன்றைய காலகட்டத்தில் உருவாகிவிட்டது. இதனால் எதிர்காலத்தில் பெண் வர்க்கமே மாற வாய்ப்புண்டு. இதிலிருந்து நவநாகரிகத்தை அதிகமாக நாடுவது பெண்கள் என்றே அறிய முடிகிறது.

*எஸ்.சிவறயன்*
*முள்ளியவளை*

# நட்பின் வலி

உன்னைக் காணாது இருக்கும் போது
உன்னைக் காணத் துடிக்கின்றேன்
உன்னை நேரில் காணும் போது
உன்னைப் பிரிந்ததை எண்ணித் துடிக்கிறேன்
என் இதயத்தினுள்
உன்னை பொக்கிசமாய் வைத்துக் காக்கின்றேன்
என் நெஞ்சத்து நட்பின் வலி
உனக்கு எப்படி தெரியும்?
உன்து மனம் கல்லறையாக இருக்கும் போது



# விமர்சனம்


நீங்களும் எழுதலாம்....

நவநாகரிகத்தை அதிகம் நாடிச் செல்வது

**ஆண்களா?**
**பெண்களா?**

தரமான விமர்சனங்கள் பிரசுரமாவதோடு சிறந்த விமர்சனங்களுக்குப் பரிசுகளும் வழங்கப்படும்.

உங்கள் காரணங்களை விமர்சனப் பகுதியில் முன் வைத்து விமர்சியுங்கள்.



# மனதில் வேதனை

மனதில் வேதனை
தீர்வு கிடைக்கும்-காலம்
கலைந்தோ போனது
என் தந்தை
தொலை தூரம் சென்ற பின்
முகம் காணத்துடிக்கும்
என் மனதுக்கு
தொலைத்தொடர்பு -மட்டுமே
கிடைக்கின்றதே
என்று தீர்வு -என்
மன வேதனைக்கு



# அது ஒரு கனவு காலமா....

தந்தையே அது ஒரு
கனவுக் காலமா
உன்னுடன் வாழ்ந்தது
இன்று அவை
கலைந்து போய் விட்டதே?
ஒரு கனவாய்
மீண்டும் ஒரு முறை
என் வாழ் நாளிலே-என்
மரணத்துக்கு முன்பாய்
அந்த கனவுக் காலம்
என் வாழ் நாளை வசந்தமாக
மாற்றுவதற்கு வர வேண்டாமோ?

*டிலானி விமலதாசன்*
*இராமநாதன் கல்லூரி, [illegible]*

# இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும் பிரச்சினைகள் பற்றிப் பேசவும் தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இந்தப் பகுதிக்கான உங்கள் படைப்புக்களையும் ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

பெயர் :-..........................................................

முகவரி :-.......................................................

..........................................................

........................ ........................
திகதி கையொப்பம்

**'இளவல்கள் வட்டம்',**
'உதயன்', 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## கூட்டுறவு கொடிவார நிகழ்வு



சர்வதேச கூட்டுறவு தின விழாவை முன்னிட்டு கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு அமைப்புக்களால் கொடிவார நிகழ்வு ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

91 ஆவது சர்வதேச கூட்டுறவுத்தின விழாவை முன்னிட்டு கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு அமைப்புக்களால் கடந்த திங்கட்கிழமை காலை கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவாளர் மண்டபத்தில் கொடிவார நிகழ்வு ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்ட அதிதிகளுக்கும், கூட்டுறவு உத்தியோகத்தர்களுக்கும் கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் கொடிகளை வழங்கி கொடிவார நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

அதனைத் தொடர்ந்து கரைச்சி, கண்டாவளை, பூநகரி, பச்சிலைப்பள்ளி ஆகிய பிரதேச மட்டங்களில் கூட்டுறவு தின விழாக்கள் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (க-426)

# 8 வீதிகள் திறப்பு

மன்னார்,, ஜூலை 4

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் வடமாகாண வீதி இணைப்புத் திட்டத்தின் ஊடாக மன்னார் மாவட்டத்தில் புனரமைப்புச் செய்யப்பட்ட 8 வீதிகள் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டன.

தலைமன்னார் கிராமிய வீதி, கரிசல் வீதி, பேசாலை வாயாடிப்பனை வீதி, ஓலைத்தொடுவாய்வீதி, தோட்டவெளி மாலுப்பபடி வீதி, எஸ்பலனேட் வீதி, சௌத்பார் வீதி, பள்ளிமுனை கடற்கரை வீதி ஆகிய வீதிகளே புனரமைப்புச் செய்யப்பட்டு மக்களின் பாவனைக்காக திறந்து வைக்கப்பட்டுள்ளன.



இந்த நிகழ்வில் கைத்தொழில் மற்றும் வர்த்தக அலுவல்கள் அமைச்சர் றிஸாட் பதியுதீன், வட மாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி, உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் ஏ.எல்.எம். அதாவுல்லா, நாடாளுமன்ற உறுப்பினர் ஹீனைஸ் பாரூக் ஆகியோர் கலந்து கொண்டு வீதிகளைத் திறந்து வைத்தனர். (க-12)

## பாலத்தையும் வீதிகளையும் புனரமைக்க வேண்டுகோள்

அக்கராயன், ஜூன் 4

கிளிநொச்சி ஸ்கந்தபுரம் விநாயகர் குடியிருப்பு பிரதான வீதியில் ஆபத்தான நிலையில் காணப்படும் மரப் பாலத்தையும், குடியிருப்பு வீதிகளையும் புனரமைத்துத் தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள ஸ்கந்தபுரம் விநாயகர் குடியிருப்பில் தற்போது 65 இற்கும் அதிகமான குடும்பங்கள் வசித்து வருகின்றன.

இந்த நிலையில் இங்குள்ள பிரதான வீதியில் அமைந்துள்ள மரப்பாலம் மிகவும் ஆபத்தான நிலையில் காணப்படுகின்றது.

1999 ஆம் ஆண்டு இந்தக் குடியிருப்புக்கான வீதி புதிதாக அமைக்கப்பட்டபோது மேற்படி மரப்பாலமும் அமைக்கப்பட்டது. தற்போது இந்த மரப்பாலம் சேதமடைந்து மிகவும் ஆபத்தான நிலையில் காணப்படுகின்றது.

எனவே இந்தப் பாலத்தை உடனடியாக புனரமைத்துத் தருமாறு இந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அத்துடன் குறித்த குடியிருப்பின் பிரதான வீதி உள்ளடங்கலாக ஏனைய வீதிகளும் எந்தவித புனரமைப்பும் இன்றிக் காணப்படுகின்றன.

இதனால் மழை காலங்களில் போக்குவரத்துக்களை மேற்கொள்ள முடியாத நிலையும் காணப்படுகின்றது. எனவே இந்த வீதிகளையும் புனரமைத்துத் தருமாறு இந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-6)



வவுனியா வடக்கில் உள்ள நெடுங்கேணிப் பிரதேசத்தில் வனவள பாதுகாப்புப் பிரிவினால் பயன் தரும் மரக்கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. நெடுங்கேணிப் பகுதியில் 50 ஆயிரம் தேக்கங்கன்றுகளும், 45 ஆயிரம் காயக் கன்றுகளும் உற்பத்தி செய்யப்பட்டு வருவதாக நெடுங்கேணி வனவள பிரிவினர் தெரிவித்துள்ளனர். (க-435)

## முசலி பிரதேச சபைக்கு புதிய செயலாளர் நியமனம்

மன்னார் முசலி பிரதேச சபையின் புதிய செயலாளராக செபமாலை சராம் அல்போன்ஸ் கடந்த முதலாம் திகதியில் இருந்து பொறுப்பேற்றுள்ளார்.

முசலி பிரதேச சபையில் உள்ளூராட்சி உதவியாளராகக் கடமையாற்றிய செ.ச.அல்போன்ஸ் இந்தப் புதிய பதவிக்கு வடமாகாண சமூகசேவைகள் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை மானிப்பாய் பிரதேச சபையில் உள்ளூராட்சி உதவியாளராகக் கடமையாற்றிய இ.கிருஷ்ணகுமாரும் பிரதேச சபையொன்றின் செயலாளராக நியமனம் பெற்றுள்ளார். (க-41)

## ஆடற்கதை இன்று

கடந்த 27 ஆம் திகதி இடம்பெறுவதாக இருந்து ஒத்திவைக்கப்பட்ட, கலைஞர் வேல் ஆனந்தனின் நெறியாள்கையில் வவுனியா மாவட்ட ஆடலணியினர் தயாரித்து வழங்கும் 'குருஷேத்திரம்' கீழைத்தேய ஆடற்கதை மேடையேற்றம் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு வவுனியா நகர சபையின் கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (க-402)

## முழங்காவில் விநாயகர் பெருந்திருவிழா இன்று ஆரம்பம்

முழங்காவில், ஜூலை 4

முழங்காவில் பிரதேசத்தில் அமைந்துள்ள ஸ்ரீ செல்வ யோக சித்தி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவப் பெருவிழா இன்று வியாழக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 11 தினங்கள் திருவிழா இடம்பெறும். எதிர்வரும் 13 ஆம் திகதி சனிக்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் ஞாயிற்றுக்கிழமை தீர்த்த உற்சவமும், மறு நாள் வைரவர் மடையும் இடம்பெறவுள்ளன.

பிரதம குருவாக பிரம்ம ஸ்ரீ பொ.சி. கிருபாகரக் குருக்கள் பங்கேற்கவுள்ளார். (க)

## காடாக கிடக்கும் வயல்களை துப்புரவு செய்ய கோரிக்கை

அக்கராயன், ஜூன் 4

காடு மண்டிக் கிடக்கும் வயல் நிலங்களைத் துப்புரவு செய்து தம்மிடம் கையளிக்குமாறு ஸ்கந்தபுரம் கிராம மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி ஸ்கந்தபுரம் கிராமத்தில் 163 ஏக்கர் வரையான வயல் நிலம் காடுகள் மண்டிய நிலையில் காணப்படுவதால் அவற்றைத் துப்புரவு செய்து விவசாய முயற்சிகளுக்கெனத் தம்மிடம் கையளிக்குமாறு இக் கிராம மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

மீள் எழுச்சித் திட்டத்தின் கீழ் கூட்டப்பட்ட கூட்டத்தில் பொதுத் தேவைகளில் முதன்மை விடயமாக மேற்படி காணிகளைத் துப்புரவு செய்தல் அமைந்திருந்தது.

அக்கராயன் குளத்தின் கீழ் கரும்புச் செய்கைக்குரிய காணியும் பயிர்ச் செய்கையை மேற்கொள்ள முடியாத நிலையிலேயே காணப்படுகிறது.

மேலும் கரும்புத் தோட்டக் காணி கரும்பு ஆராய்ச்சி அபிவிருத்தி சபையிடம் ஒப்படைக்கப்படவுள்ளது.

இந்த நிலையில் காடுகள் வளர்ந்து காணப்படும் 163 ஏக்கர் வயல் நிலத்தை துப்புரவு செய்ய வேண்டிய நிலைமை உருவாகியுள்ளதாகத் தெரிய வருகின்றது. (க-18)

## கூட்டுறவாளர் தினத்தையொட்டிய போட்டிகளின் முடிவுகள்

மன்னார், ஜூலை 4

வவுனியா மாவட்டக் கூட்டுறவுச் சபையினால் வவுனியா தெற்கு வலயப் பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட போட்டி முடிவுகள் பின்வருமாறு:-

கட்டுரைப் போட்டி

உயர்தரம்

ரி.விதுஸா - இறம்பைக்குளம் மகளிர் ம.வி., ச.காவேரி - தமிழ் மத்திய ம.வி., ஆ.சோபனா - பெரியகோமரசன்குளம் ம.வி.

சாதாரணதரம்

தே.நிஸாந்தினி - இறம்பைக்குளம் மகளிர் ம.வி., இ.சிந்துஜா - இராசேந்திரங்குளம் அ.த.க.பாடசாலை, ச.தேனுசன் - நெளுக்குளம் கலைமகள் ம.வி.

பேச்சுப்போட்டி

உயர்தரம்

கா.காயத்திரி- இறம்பைக்குளம் மகளிர் ம.வி., வி.ஜான்சி - வீரபுரம் மணிவாசகர் ம.வி., கு. பிரசனன் - தமிழ் ம.வி., ப.தயானி - சைவப் பிரகாச மகளிர் கல்லூரி.

சாதாரணதரம்

சி.மிதுர்சன் - இந்துக் கல்லூரி, செ.மதுஸா - பெரியகோமரசங்குளம் ம.வி, க.சர்மிலா - குருக்கள் புதுக்குளம் அ.த.க.பாடசாலை, சு.டிலக்சன் - பூந்தோட்டம் ம.வி. பாடசாலை, ம.தர்மசீலன் - குருக்கள் புதுக்குளம் அ.த.க.பாடசாலை.

வவுனியா வடக்கு வலயம்

கட்டுரைப் போட்டி உயர்தரம்

ரா.தக்ஸலா - ஓமந்தை மத்திய கல்லூரி, அ.மிதுசா - கனகராயன்குளம் ம.வி., சு.பத்மரூபி - புளியங்குளம் இந்துக் கல்லூரி.

சாதாரணதரம்

சி.டிலானி - கிடாச்சூரி அ.த.க. பாடசாலை, பி.தரன்சிகா - கனகராயன்குளம் ம.வி., வி.டதுச்சினி - கல்மடு ம.வி.,

பேச்சுப் போட்டி

உயர்தரம்

கு. சிரஞ்சிதன் - புதுக்குளம் ம.வி, இ.வனிதா - கல்மடு ம.வி., இ.இராகவன் - புதுக்குளம் ம.வி.,

சாதாரணதரம்

இ.கிறிஸ்ரினா - தரணிக்குளம் கணேஸ்வித்தி., ம.திவ்யா - கல்மடு ம.வி., ஜெ. தனுஜா - கிடாச் சூரி அ.த.க.பாடசாலை. (க-402)



நல்லூர் சங்கிலியன் மன்றத்தின் 68 ஆவது ஆண்டு விழாவையொட்டி மன்றம் ஞாயிற்றுக்கிழமை பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகளை திவ்வியஜீவன சங்க மண்டப மைதானத்தில் நடத்தியது பெண்களுக்கான தேங்காய் துருவும் போட்டியின் போது பெண்கள் மும்முரமாக போட்டி போடுகின்றனர். (வ-7)

# ஆஸ்பத்திரியில் யுவதிகளுடன் சேஷ்டை புரிந்தவர் மாட்டினார்

யாழ்ப்பாணம், ஜூலை 4

யாழ். போதனா வைத்தியசாலையில் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெறச் சென்ற யுவதிகளுடன் தவறான முறையில் நடந்து கொண்ட சிவில் உடை தரித்த நபரை அங்கு நின்றிருந்தவர்கள் கையும் மெய்யுமாகப் பிடித்து வைத்தியசாலைப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

வைத்தியசாலைக்குச் சென்ற இராணுவ அதிகாரிகள் தாம் நடவடிக்கை மேற்கொள்வதாகக் கூறி சிப்பாய் என்று கருதப்படும் குறித்த நபரை தமது வாகனத்தில் ஏற்றிச் சென்றதாக சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் நண்பகல் இடம்பெற்றது.

வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெறுவதற்காக வரிசையாக நின்றிருந்த யுவதிகளின் பின்புறமாக நின்றே தவறான முறையில் நடந்து கொண்டார்.

வரிசையில் முன்னுக்கு நின்ற யுவதிகள் சிகிச்சை பெற்றுச் சென்றதும் அடுத்ததாக நின்றிருந்த குறித்த நபர் சிகிச்சைக்குச் செல்லாது மீண்டும் தனக்குப் பின்புறமாக நின்ற யுவதிகளை கடந்து மேலும் சென்று பின்புறமாக நின்று மீண்டும் தவறான முறையில் நடந்து கொண்ட போதே அங்கு நின்றிருந்தவர்கள், உத்தியோகத்தர்கள் இணைந்து குறித்த நபரைப் பிடித்து வைத்தியசாலைப் பொலிஸில் ஒப்படைத்தனர்.

அதன் பின்னர் வைத்தியசாலைக்குச் சென்ற இராணுவ அதிகாரிகளே குறித்த நபரை தமது வாகனத்தில் ஏற்றிச் சென்றனர் என்று மேலும் தெரிவித்தனர்.

இது தொடர்பில் வைத்தியசாலைப் பதில் பணிப்பாளர் மருத்துவர் எஸ். ஸ்ரீபவானந்தராஜாவுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, ''குறித்த சம்பவம் தொடர்பில் தமக்கு உத்தியோகபூர்வமாக எதுவும் அறிவிக்கப்படவில்லை'' என்றார். (வ-4)

# யாழ். தொண்டர் ஆசிரியர்களுக்கும் நிரந்தர நியமனம் வழங்க வேண்டும்

அச்சுவேலி, ஜூலை 4

யாழ். மாவட்டத்தில் கடமையாற்றும் தொண்டர் ஆசிரியர்கள் நிரந்தர நியமனம் வழங்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர்.

யாழ். மாவட்ட பாடசாலைகளில் தற்போது 107 பேர் தொண்டர் ஆசிரியர்களாகப் பணிபுரிகின்றனர்.

நீண்ட காலமாக உரிய முறையில் கொடுப்பனவு பெறாமல் கடமை புரிந்து வருகின்றனர் என தமக்கும் நிரந்தர நியமனம் வழங்கி ஆசிரியர் உதவியாளர் என்ற நிலையில் கொடுப்பனவு வழங்குவதோடு ஆசிரியர் பயிற்சி பெறுவதற்கும் சந்தர்ப்பம் வழங்க வேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

யாழ். மாவட்ட தொண்டர் ஆசிரியர்களின் கோரிக்கை தொடர்பாக வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் உயர் அதிகாரி ஒருவர் தகவல் தெரிவித்ததாவது:-

யாழ். மாவட்ட தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கியபோது வன்னிப் பகுதியில் கடமையில் இருந்த தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்கப்படவில்லை. அவர்களுக்கே நியமனம் தற்பொழுது வழங்கப்பட்டுள்ளது.

அவர்களுக்கு 6 ஆயிரம் ரூபா மாதாந்தம் கொடுப்பனவாக வழங்கப்படுகின்றது. ஆசிரியர் உதவியாளர்கள் ஆசிரியர் பயிற்சி பெற்ற பின்னர் அல்லது பல் கலைக்கழக பட்டம் பெற்ற பின்னரே ஆசிரியர் சேவையில் உள்ளீர்ப்பு செய்யப்பட்டு ஓய்வூதியத்துடன் கூடிய நிரந்தர நியமனம் வழங்கப்படும் எனத் தெரிவித்தார். (வ-11)

# நூற்றாண்டு விழாவை முன்னிட்டு சிரமதானம் மூலம் அழகுபடுத்தல்

## இராமநாதன் கல்லூரி வளாகம்

வலி.வடக்கு, ஜூலை 4

சுன்னாகம் இராமநாதன் கல்லூரியின் நூற்றாண்டையொட்டி 3 லட்சம் ரூபா செலவில் கல்லூரி வளாகம் துப்புரவு செய்யப்பட்டு அழகுபடுத்தப்பட்டுள்ளது.

கடந்த கால இடப்பெயர்வைத் தொடர்ந்து கடந்த பல வருடங்களாக பற்றையும் புல் பூண்டுகள் நிறைந்து காணப்பட்ட இந்த வளாகம் தற்போது லண்டனில் வாழும் பழைய மாணவிகள் மற்றும் பெற்றோரின் நிதிப் பங்களிப்பு உட்பட ஏனைய பங்களிப்புக்களுடன் இயந்திரங்களின் உதவியுடன் குறிப்பிட்ட பாடசாலையின் வளாகம் துப்புரவு செய்யப்பட்டுள்ளதாக அதிபர் திருமதி வி.கமலராணி தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் இந்த வளாகத் தில் உள்ள காணியில் பயன் பெறக் கூடிய வகையில் வாழை மற்றும் மரங்களை நட பாடசாலை அபிவிருத்திச் சங்கமும் பழைய மாணவிகள் சங்கமும், நிர்வாகமும் இணைந்து நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (வ-86)

தருவது வித்தியா

# இன்றைய நாள்

## உங்களுக்கு எப்படி?



**மேடம்:** எந்தக் காரியத்தைத் தொட்டாலும் இரண்டு, மூன்று முறை முயன்று முடிக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். சில நேரங்களில் நன்றி மறந்த உறவுகளை நினைத்து வருத்தப்படுவீர்கள். உங்கள் மீது சிலர் வீண் பழி சுமத்துவார்கள். உத்தியோகத்தில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது.



**இடபம்:** குடும்பத்தினரை அனுசரித்துப் போங்கள். செலவுகளைக் குறைக்க முடியாமல் திணறுவீர்கள். சகோதர வகையில் மனத்தாங்கல் வரும். உத்தியோகத்தில் மேலதிகாரியுடன் மோதல்களைத் தவிருங்கள்.



**மிதுனம்:** அதிகாரபூர்வமாகச் செயற்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரியின் பாராட்டைப் பெறுவீர்கள். சக ஊழியர்களின் ஆதரவு கிட்டும்.



**கடகம்:** பளிச்சென்று பேசி எல்லோரையும் கவருவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவு கிட்டும். பிரபலங்களின் சந்திப்பு நிகழும். அரச காரியங்களில் அனுகூலமான நிலை காணப்படும். தாய்வழி உறவினர்களுடன் இருந்துவந்த மனக்கசப்புகள் விலகும்.



**சிங்கம்:** தைரியமான முடிவுகளை எடுத்து வெற்றி காண்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களுக்கு மத்தியில் மதிக்கப்படுவீர்கள். சகோதரவகையில் மகிழ்ச்சி தங்கும். நண்பர்களின் சந்திப்பு நிகழும்.



**கன்னி:** எவ்வளவு பணம் வந்தாலும் எடுத்து வைக்க முடியவில்லையே என்று ஆதங்கப்படுவீர்கள். வாக்குறுதியை நிறைவேற்றப் போராட வேண்டி வரும். முன்கோபத்தால் பகை உண்டாகும். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் பிரச்சினைகள் வரும்.

**நாளை**

*ஆனி-21 வெள்ளிக்கிழமை 05.07.2013*
*திதி: துவாதசி கா.07.20 வரை*
*நட்சத்திரம்: ரோகிணி பி.இ.03.53 வரை*
*சுபநேரம்: 05.57 - 07.27 வரை*
*இராகுகாலம்: 10.27 - 11.57 வரை*



**துலாம்:** மனக்குழப்பங்கள் விலகும். வெளியூரிலிருந்து உறவினர்கள், நண்பர்களின் வருகையுண்டு. உத்தியோகத்தில் வேலைபளு குறையும். எதிர்பார்த்த இடத்திலிருந்து உதவி கிடைக்கும். அரச வேலைகள் சுமுகமாக முடியும்.



**விருச்சிகம்:** வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். மனதுக்குப் பிடித்தவர்களைச் சந்தித்து மகிழ்வீர்கள். மன நிறைவுடன் சில வேலைகளை செய்து முடிப்பீர்கள். வெளியூரிலிருந்து உறவினர்கள், நண்பர்களின் வருகையுண்டு.



**தனுசு:** நீங்கள் முன்பு செய்த உதவிகளுக்கு இப்பொழுது பாராட்டப்படுவீர்கள். உறவினர்கள் மத்தியில் மதிக்கப்படுவீர்கள். உற்சாகமான் பேச்சால் அனைவரையும் கவருவீர்கள்.



**மகரம்:** சோர்வாக இருந்த நீங்கள் சுறுசுறுப்படைவீர்கள். சிந்தனைத்திறன் அதிகரிக்கும். பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். வியாபார ரீதியாக முக்கிய பிரமுகர்களைச் சந்திப்பீர்கள். அரச காரியங்களில் அனுகூலமான நிலை காணப்படும்.



**கும்பம்:** துடிப்புடன் காணப்படுவீர்கள். எதிரிகளின் கொட்டம் அடங்கும். வியாபாரத்தில் மதிக்கப்படுவீர்கள். முன்கோபம் குறையும். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும்.



**மீனம்:** தன்னம்பிக்கையுடன் செயற்பட்டு காரியங்களை சாதிப்பீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரியின் ஒத்துழைப்பு உண்டு. வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். மாணவர்கள் பொறுப்பாக நடந்து கொள்வார்கள்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | 3 | | | | 4 | |
| | | 5 | 1 | 9 | 2 | | | |
| | | | 5 | | | 8 | 2 | |
| 5 | 8 | 3 | | | 6 | | 9 | 7 |
| | 9 | | | | | | 1 | |
| 2 | 1 | | 8 | | | 4 | 5 | 3 |
| | 5 | 9 | | | 1 | | | |
| | | | 7 | 3 | 8 | 9 | | |
| | 7 | | | | 5 | | | 4 |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 8 | 6 | 3 | 7 | 9 | 1 | 2 | 5 |
| 1 | 2 | 5 | 4 | 8 | 6 | 3 | 7 | 9 |
| 3 | 7 | 9 | 5 | 2 | 1 | 8 | 6 | 4 |
| 2 | 6 | 1 | 8 | 9 | 7 | 4 | 5 | 3 |
| 5 | 4 | 7 | 1 | 3 | 2 | 6 | 9 | 8 |
| 9 | 3 | 8 | 6 | 5 | 4 | 7 | 1 | 2 |
| 7 | 5 | 4 | 9 | 6 | 8 | 2 | 3 | 1 |
| 8 | 9 | 2 | 7 | 1 | 3 | 5 | 4 | 6 |
| 6 | 1 | 3 | 2 | 4 | 5 | 9 | 8 | 7 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள் ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என் பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.




பெரும்பாலும் மேகக் கூட்டத்துடனான காலநிலை நிலவும்.

# கோடா வைத்திருந்த நபருக்கு அபராதம்

தென்மராட்சி, ஜூலை 4

கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் கோடா வைத்திருந்த வரணி இடைக் குறிச்சியைச் சேர்ந்த நபருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 60 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டதுடன் அவரை 25 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆள் பிணையிலும் செல்ல அனுமதி அளிக்கப்பட்டது.

கொடிகாமம் பொலிஸ் நிலையத்துக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து இடைக்குறிச்சிப் பகுதிக்குச் சென்ற பொலிஸார் சட்டவிரோத கசிப்பு உற் பத்திக்குப் பயன்படுத்தப்படும் கோடாவைக் கைப்பற்றியதுடன் அதனை வைத்திருந்த நபரையும் கைது செய்ததுடன் அவருக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர்.

நேற்று முன்தினம் வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது குறித்த நபர் ஏற்கனவே இவ்வாறான வழக்கு ஒன்றில் அபராதம் செலுத்திய விடயம் நீதிவானின் கவனத்துக்குப் பொலிஸாரால் கொண்டு வரப்பட்டதையடுத்து எதிரி குற்றத்தை ஒப்புக் கொண்டதால் 60 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப் பட்டதுடன் 25 ஆயிரம் ரூபா பெறு மதியான ஆள் பிணையில் செல்லவும் உத்தரவிடப் பட்டது. (வ-9)

## எத்தகைய குண இயல்புகளைக் கடவுள் ஏற்றுக்கொள்வார்?

சித்தத்தினதும், இதயத்தினதும் நேர்மைத்தனத்தையும் தூய்மையையுமே இறைவன் கருத்திற் கொள்வார். அத்துடன் தன்பாலுள்ள எமது அன்பு எவ்வளவு முழுமையானது, உண்மையானது என்பதுமாகும். நாம் எத்தகைய செல்வந்தர் என்றோ, கல்விமான்கள் என்றோ அவர் கருதுவதில்லை.



நன்றி
தெய்வீகம் மலரும் பொழுது

சாயி சிந்தனை

# வெவ்வேறு விபத்துக்களில் குடாநாட்டில் ஐவர் காயம்

யாழ்ப்பாணம், ஜூலை 4

யாழ். குடாநாட்டில் இடம் பெற்ற வெவ்வேறு விபத்துச் சம்பவங்களில் ஐவர் காய முற்று வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை மந்துவில் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் 59 வயதான நபரொருவர் காயமடைந்தார்.

இவருக்கு முன்னால் மோட்டார் சைக்கிளில் சென்ற வர் தவறான திசையில் வெளிச்ச சமிக்ஞை காட்டியதாலேயே இந்த விபத்து நிகழ்ந்துள்ளது. காயமுற்றவர் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த திங்கட்கிழமை சுன்னாகம் கந்தரோடை வீதியில் கார் ஒன்று பந்தாடியதில் இளைஞர் ஒருவர் படு காயங்களுடன் தெல்லிப்பழை ஆதார வைத்திய சாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப் பட்டார். இளைஞரை மோதிவிட்டு தப்பிச் சென்ற கார் பற்றி பொதுமக்கள் கொடுத்த தகவலின் அடிப் படையில் சுன்னாகம்பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர்.

சாவகச்சேரி எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு முன் பாக நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற ஹைஏஸ்-ஓட்டோ விபத்தில் இருவர் காயமடைந்து யாழ். போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டனர்.

சம்பவத்தில் ஓட்டோவில் பயணித்தவர்களான கச்சாய் வீதியைச் சேர்ந்த சண்முகநாதன் கிருபா (வயது-24), மட்டுவில் தெற்கைச் சேர்ந்த செல்வநாதன் - நிஷாந் (வயது-25) ஆகிய இருவருமே படுகாயம் அடைந்து சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலைக்கு மாற்றப் பட்டனர்.

இதேவேளை கெற்பேலிப் பகுதியில் நேற்றுமாலை டிராக்டரில் மரம் ஏற்றிக் கொண்டிருந்த சமயம் மரம் தவறி வீழ்ந்த தில் ஒருவர் படுகாயம் அடைந் தார்.

இதில் படுகாயமடைந்த கெற்பேலி மேற் கைச் சேர்ந்த மாடசாமி சுரேஸ்குமார் (வயது-32) என்பவர் சாவகச் சேரி வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டுள்ளார். (ங-86-9)

## கூ.ச.அபிவிருத்திக்காக

# புதிதாக அங்கத்தவர்களை இணைக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 4

யாழ்.குடாநாட்டில் கூட்டுறவுச் சங்கங்களை மேலும் அபிவிருத்தி செய்யும் நோக்கில் புதிதாக அங்கத்தவர்களை இணைக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

சர்வதேச கூட்டுறவு தினத்தை முன்னிட்டு இந்த செயற்றிட்டத்தை சகல சங்கங்களிலும் ஆரம்பித்து வைப்பதற்கும் நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளதாக மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே.அருந்தவநாதன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

சங்கங்கள் அனைத்தும் சர்வதேச கூட்டுறவாளர் தினத்தை ஒட்டி புதிதாக அங்கத்தவர்களை இணைப் பதற்கு துரித நடவடிக்கை எடுக்க வேண்டும். சங்க கிளை நிலையங்களில் முகாமையாளர்கள் புதிய அங்கத்தவர்களை இணைக்கும் பணியில் ஈடுபடுவதோடு அதற்கான அறிவுறுத்தல்களை சங்க கிளை நிலையங்களில் மக்கள் பார்வைக்கு வைக்க வேண்டும்.

அத்துடன் கிளை நிலையங்களுக்கு வருகை தரும் நுகர்வோருக்கு இது குறித்த தான விழிப்புணர்வு நடவடிக்கைகளை பணியாளர்கள் மேற்கொள்ள வேண்டும். இதேவேளை கடந்த வருடம் புதிதாக அங்கத்தவர்களை இணைக்கும் வேலைத் திட்டத்தில் பொது பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் முன்னிலை வகித்ததும் அதிக அங்கத்தவர்களை இணைத்துக் கொண்டமைக்காக குறித்த சங்கத்துக்கு பரிசில் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. என்றார் (வ-17)

## சைக்கிள் திருடனுக்கு விளக்கமறியல்

தென்மராட்சி, ஜூலை 4

தோட்டத்தில் நிறுத்தியிருந்த சைக்கிளைத் திருடிய கொக்கு வில்வாசியை விளக்க மறி யலில் வைக்குமாறு நீதி மன்றால் உத்தரவிடப்பட் டது.

கொடிகாமம் பகுதியில் உள்ள தோட்டத்துக்கு சைக்கிளில் சென்ற விவசாயி வேலிக் கரையுடன் சைக்கிளை நிறுத்தி விட்டு தோட்ட வேலை யில் ஈடுபட்ட வேளையில் அந்த வழியே வந்த நபர் சைக் கிளை அபகரித்துக் கொண்டு செல்வதை அவதானித்ததையடுத்துக் கூக்குரலிடவே அந் தப் பகுதியில் நின்றவர்கள் துரத்திச் சென்று திருடனைப் பிடித்து பொலிஸாரிடம் ஒப் படைத்தனர்.

குறித்த நபரை கொடிகாமம் பொலிஸார் திங்கட்கிழமை சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தினர். அந்த நபரை எதிர்வரும் 16 ஆம் திகதி வரைவிளக்கமறியலில்வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. (வ-9)

## மாகாண மட்டத்தில் 2 ஆம் இடம்



நடைபெற்று முடிந்த வட மாகாண மட்ட மாணவர்களுக்கான திறனாய்வுப் போட்டிகளில் தரம்-3 இற்கான ஒட்டுச்சித்திர கீழ்ப் பிரிவுப் போட்டியில் வவுனியா அனந்தர் புளியங்குளம் அர சினர் தமிழ்க்கலவன் பாடசாலை மாணவி செல்வி பவேந்திரன். அக்சயா 2 ஆம் இடத்தைப் பெற்றுள்ளார். பாடசாலை வரலாற்றில் முதன் முறையாக இம் மாணவி மாகாண மட்டத்தில் இரண்டாம் இடத்தினைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ)




சாவகச்சேரி வாரிவனநாதர் சிவன் ஆலய பெருந்திருவிழா நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாகி தொடர்ந்து 11 தினங்கள் நடைபெறும். எதிர்வரும் 13 ஆம் திகதி சனிக்கிழமை தேர்த் திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (ந-9)

★ ★ ★

நல்லூர் மூத்தவிநாயகர் ஆலய வருடாந்தப் பெருந் திருவிழா நாளை வெள்ளிக் கிழமை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறும். (ந)

## யாழ்ப்பாண கல்லூரிக்கு புதிய அதிபர் நியமனம்

யாழ்ப்பாணம், ஜூலை4

யாழ்.வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் புதிய அதிபராக வண.டி.எஸ.சொலமன் நியமிக்கப்பட்டுள்ளார். தற்போது பதவி வகிக்கும் அதிபரின் ஓய்வு காலம் நெருங்கியதை அடுத்தே வட்டு தென்னிந்தியத் திருச்சபை பேராயர் அதி.வண.டானியல், எஸ்.தியாகராஜா தலைமையிலான குழு இதனை முடிவு செய்துள்ளது.

இதேவேளை சிரேஷ்ட தரத்தில் இணை உப அதிபர்களாக இருந்த இருவரில் வண ஜி.நடராஜா புலமைப் பரிசில் பெற்று ஆஸ்திரேலியா பயணமாகியுள்ளார்.

இதனையடுத்து சிரேஷ்ட நிலையில் உள்ள ஏ.சி. பிரான்சிஸ் உப அதிபராக தரம் உயர்த்தப்படவுள்ளார்.

யாழ்ப்பாணக் கல்லூரி வரலாற்றில் புகழ் பூத்த அதிபர்கள் வரிசையில் ராஜன் கதிர்காமர், கலாநிதி எஸ்.ஜெபநேசன், ஜி. இராஜநாயகம், வண.ஏ.ஏ.போல், ஏ.விமலேந்திரன் ஆகியோரது சிறப்புக்கள் தற்போதும் வரலாற்றில் உயர்ந்த இடத்தில் வைத்து போற்றப்படுகிறதுடன் அமெரிக்க மிசனரி மார்களால் வாழ்த்தப்பட்டவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. (எ-41)

## யாழ். பிரதேச செயலகத்தால் நடத்தப்பட்ட

# கலை இலக்கியப் போட்டி முடிவுகள் வெளியாகின

யாழ். பிரதேச செயலக, கலாசார அலுவல்கள் திணைக் களத்தினால், பிரதேச மட்டத்தில் நடத்தப்பட்ட கலை இலக்கியப் போட்டிகளின் பெறு பேறுகள் வெளியிடப்பட்டுள்ளன. வெற்றி பெற்றவர்களின் பெயர் விவரங்கள் வருமாறு:-

**பாடசாலை மட்டம்**

**கனிஷ்ட பிரிவு**

**கட்டுரைப் போட்டி**

முதலாம் இடம்-த.சஞ்ஜீவன் (புனித் பத்திரிசியார் கல்லூரி), இரண்டாம் இடம்-ச.மதுசன் (புனித பத்திரிசியார் கல்லூரி), மூன்றாம் இடம்-இ. துளசிகா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி)

**கவிதைப் போட்டி**

முதலாம் இடம்-காருண்யா பார்த்தீபன் (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசலை), இரண்டாம் இடம்-சுரேஷ்குமார் லோஜிதன் (வைத்தீஸ்வராக் கல்லூரி), மூன்றாம் இடம்- சர்மின் ஜெயசீன் (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை) பி.ஏ.ஸ்ரீபன் (புனித பத்திரிசியார் கல்லூரி

**கவிதைப் பாடல்**

முதலாம் இடம்-தவராசா மரியதர்சன் (புனித பத்திரிசியார் கல்லூரி), இரண்டாம் இடம்-அன்ரனி யோசப் கிறிஸ்ரன் (புனித பத்திரிசியார் கல்லூரி), மூன்றாம் இடம்- பொயிற்றர் கஸ்ரோ (புனித பத்திரிசியார் கல்லூரி)

**சிரேஷ்ட பிரிவு**

**கட்டுரைப் போட்டி**

முதலாம் இடம்-மாதங்கி பாஸ் கரன் (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), இரண்டாம் இடம்- சுறோமியா யோகராசா (திருக்குடும்ப கன்னியர் மடம் பாடசாலை), மூன்றாம் இடம்- இமெல்டா யோகராசர் (திருக் குடும்ப கன்னியர் மடம் பாடசாலை)

**கவிதைப் போட்டி**

முதலாம் இடம்-தர்மினி தவராசா (கொட்டடி நமசிவாய வித்தியாலயம்), இரண்டாம் இடம்-எ.விஜயராம் (புனித பத்திரிசியார் கல்லூரி), மூன்றாம் இடம்-சாம்பவி மனோகரன் (வேம்படி மகளிர் உயர் தரப் பாடசாலை), அபிராமி நற்குணம் (வேம்படி மகளிர் உயர் தரப் பாடசாலை)

**கவிதைப் பாடல்**

முதலாம் இடம்-நர்மதா குணதாஸ் (கொட்டடி நமசிவாய வித்தியாலயம்), இரண்டாம் இடம்-ஜெயக்குமார் புலேந்திரன், தனுசன் (புனித பத்திரிசியார் கல்லூரி), மூன்றாம் இடம்- விக்ரர் கிசோன் (புனித பத்திரிசியார் கல்லூரி)

**திறந்த போட்டி- பாடலாக்கம்**

முதலாம் இடம்-திருமதி வ.கஜநந்தினி (91/15, காரைநகர் வீதி, கொட்டடி), இரண்டாம் இடம்-ஜோ.ஜெஸ்ரின் (28, A.V றோட் கொழும்புத்துறை)

**இலக்கிய விபரணப் பிரிவு**

முதலாம் இடம்-திருமதி வ.கஜநந்தினி (91/15, காரைநகர் வீதி, கொட்டடி), இரண்டாம் இடம்-தி.ஸ்ரீ நாகேஸ்வரன் (09/அத்தியடி புது வீதி, யாழ்ப்பாணம்)

**நாட்டார் கலை கற்றல் போட்டி**

முதலாம் இடம்-திருமதி வ.கஜநந்தினி (91/15, காரைநகர் வீதி, கொட்டடி)

**சிறுகதைப் போட்டி**

முதலாம் இடம்-திருமதி வ.கஜநந்தினி (91/15, காரைநகர் வீதி, கொட்டடி)

இரண்டாம் இடம்- எஸ்.என். ஜே.மரியாம்பிள்ளை (655/1 கடற்கரை வீதி குருநகர்)

**கவிதைப் போட்டி**

முதலாம் இடம்-ஜோ.ஜெஸ்ரின் (28.ஏ.வி றோட், கொழும்புத்துறை), இரண்டாம் இடம்-திருமதி வ.கஜநந்தினி (91/15, காரைநகர் வீதி, கொட்டடி), மூன்றாம் இடம்-நாராயணசாமி சுதர்சன் (24, காதி அபூபக்கர் வீதி, யாழ்ப்பாணம்), மூன்றாம் இடம்- தி.ஸ்ரீ நாகேஸ்வரன் (09, அத்தியடி வீதி, யாழ்ப்பாணம்)

**சிறுவர் கதை**

முதலாம் இடம்-ஜோ.ஜெஸ்ரின் (28.ஏ.வி றோட் கொழும்புத்துறை)

இரண்டாம் இடம்- தி.ஸ்ரீநாகேஸ்வரன் (09. அத்தியடி வீதி, யாழ்ப்பாணம்) (ந)

## இலட்சார்ச்சனை

கைதடி மேற்கு அருள்மிகு இறுங்கித்தோட்டம் கந்தசாமி கோயிலின் வருடாந்த இலட்சார்ச்சனை இன்று காலை 9 மணிக்கு ஆரம்பமாகி தொடர்ந்து 6 தினங்கள் நடைபெற்று 7 ஆம் நாள் சங்காபிஷேகம் இடம்பெறும். (வ-288)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

நிஜமாக
15.02.1960



நினைவாக
16.06.2012

திருமதி பரமானந்தி தற்பரநாதன்

(புன்னாலைக்கட்டுவன் தெற்கு)

(திதி: 04.06.2013)

முடிவில்லா வேதனையைத் தந்துவிட்டு அமைதியானாய்!
விட்டுப் போனது தெரிந்தும் தினமும் உன்னோடு பேசுகிறேன்
உங்கள் ஆத்மாதான் தினமும் என்னை வழி நடத்துகிறது
உங்கள் நினைவால் நாளும் கனவுகள் கரைகிறது
தினமும் ஒவ்வொரு செயலும் உன்னையே ஞாபகப்படுத்துகிறது
கண்கள் பனிக்கும் நேரமெல்லாம்
நெஞ்சம் நினைக்கும் ஒரே உறவு நீதானே!
அன்பினால் அரவணைத்த அந்த நினைவுகள் தான்
இருள் சூழ்ந்த என் இதயத்திற்கு ஒளி
எஞ்சிய நாள்களுக்கும் உன் நினைவுகள் ஒன்றே துணை

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறேன்

291/6 , Edward Avanue,
Colombo-6 .

த. சரவணன் (மகன்)
T.P:077 250 8670

(C/10066)(3.6.11)

## தடகளப் போட்டி

யாழ்ப்பாணம்,ஜூலை4 மாகாண மட்ட தடகளப் போட்டியின் ஆரம்பநாள் நிகழ்வு இன்று வியாழக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் கல்வி, கலாசார பண்பாட்டலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ. சந்திரசிறி கலந்துகொள்ளவுள்ளார்.

நிறைவு நாள் நிகழ்வு எதிர்வரும் 8 ஆம் திகதி பிற்பகல் 4 மணிக்கு நடைபெறவுள்ளது. பிரதம விருந்தினராக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தாவும், சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கௌரவ சில்வேஸ்திரி அலன்ரினும் கலந்து கொள்வர். (வ)

## மரண அறிவித்தல்

### சின்னையா தவரெட்ணம் (J.P)

(முன்னாள் தலைவர், யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாசங்களின் சம்மேளனம், யாழ்.மாவட்ட கூட்டுறவு சபைப் பணிப்பாளர் சபை உறுப்பினர், வடமாகாண கடற்றொழில் அமைப்புத் தலைவர்)



மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும், குருநகரை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா தவரெட்ணம் நேற்று (03.07.2013) புதன்கிழமை காலமானார்.

அன்னார் பிலோமினா (றோஸ்)வின் அன்புக் கணவரும், Dr.திருமாறன், றதிமதி, Dr.மதிமாறன் (I.o.m) ஆகியோரின் பாசமிகு தந்தையும், Dr.அனோமா, கெனியூட், Dr.மகிழ்நங்கை (கொழும்பு தேசிய வைத்தியசாலை) ஆகியோரின் பாசமிகு மாமனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (2.6)(சி/10206)

83/11, பீச்றோட்,
குருநகர், யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

## நெய்தல் நில மீனவ மக்களின் நெஞ்சுருகிய

## கண்ணீர் அஞ்சலி

அமரர்

### சின்னையா தவரெட்ணம்

(முன்னாள் தலைவர், யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாசங்களின் சம்மேளனம் (வ.து)



சிறந்த கல்வியறிவுடனும்,
கடல் வளம் சார்ந்த உயரிய அனுபவத்துடனும்,
நீண்ட பல ஆண்டுகளாக வட பகுதி
கடற்றொழிலாளர்களின் துயர் துடைக்க
அயராது உழைத்து தனது
இறுதி மூச்சுள்ளவரை மீனவமக்களின் வாழ்வாதார
மேம்பாட்டுக்காக வழிகாட்டியாகத் திகழ்ந்து
தனது நிர்வாகத்திறமையினாலும் ஆளுமையாலும்,
கடற்றொழிலாளர் சங்கங்களையும்,
சமாசங்களையும் சம்மேளனத்தினையும்,
சிறப்புடனும், திறமையுடனும் நிர்வகித்து,
இவை தனித்துவத்துடன் திகழ வழியமைத்து
அமரத்துவமடைந்த சின்னையா தவரெட்ணம் அவர்களுக்கு
எமது இறுதிக் கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்து
இவரது இழப்பால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினரது ஆழ்ந்த அனுதாபத்தில் பங்கேற்று
கதிகலங்கி நிற்கின்றோம்.

ஆறாத்துயருடன்: தலைவர், பணிப்பாளர்கள்,
பணியாளர்கள், அங்கத்துவ
கடற்றொழிலாளர் கூட்டுறவு
சங்க சமாசங்கள், யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர்,
கூட்டுறவுச்சங்க சமாசங்களின் சம்மேளனம் (வ.து)
இல.100, பிரதான வீதி,யாழ்ப்பாணம்.

# '13' ஐ ஒழிப்பதற்கு வரைவு உடன் வேண்டும்

## சம்பிக்க வேண்டுகோள்

கொழும்பு, ஜூலை 4
'13' ஆவது திருத்தத்தை இல்லாது ஒழிப்பதற்கான சட்ட வரைவை ஜனாதிபதி உடனடியாக நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என்று ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச் செயலர் அமைச்சர் சம்பிக்க ரணவக்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.
மஹரகமவில் இடம்பெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:
''ஜனாதிபதி உடனடியாக 13 ஆவது திருத்தத்தை இல்லாது ஒழிக்கும் சட்ட வரைவை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும். அதனை நிறைவேற்றுவதற்கான பலத்தை வழங்க நாம் தயாராக உள்ளோம்.
13 ஆம் திருத்தச் சட்டம் என்பது



நாட்டின் ஜனநாயகத்துக்கு முற்றிலும் விரோதமானது.
இராணுவத்தினர் ஈழம் மலரவா வடக்கில் தமது உயிரை தியாகம் செய்தனர். இந்தநிலையில் வடக்கு மாகாண சபை பிரிவினைவாதிகளின் கையில் பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களுடன் போனால் அது ஈழம் மலர வழிவகுக்கும். இதற்கு ஒரு போதும் நாம் இடமளிக்க மாட்டோம்.
நாட்டில் இவ்வளவு காலமும் முஸ்லிம் மக்களுக்கு அநீதிகள் இழைக்கப்பட்டபோதும் குரல் கொடுக்காத முஸ்லிம் காங்கிரஸ், '13' இற்கு ஆதரவாக குரல் கொடுக்கின்றது.
நாம் மாகாண சபை முறைமையை இல்லாதொழிக்கக் குரல் கொடுப்போம்.- என்றார்.
இந்தக் கூட்டத்தில் ஜாதிக ஹெல உறுமய, பொது பலசேனா, சிங்கள ராவய உட்பட 27 இற்கும் மேற்பட்ட பௌத்த அமைப்புக்கள் கலந்து கொண்டன. (ச-ரி)

## பேரீச்சம் பழங்கள் ரம்ழானுக்கு அன்பளிப்பு



கொழும்பு, ஜூலை 4
புனித ரம்ழானை முன்னிட்டு ஐக்கிய அரபு இராச்சியத்தால் இலங்கைக்கு பேபீச்சம் பழங்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன.
நாட்டிலுள்ள முஸ்லிம்களுக்கு பகிர்ந்தளிப்பதற்காக வருடாந்தம் ஐக்கிய அரபு இராச்சியம் பேரீச்சம் பழங்களை அன்பளிப்பு செய்கின்றன.
அதற்கமைய இந்த வருடம் 7.5 மெற்றிக்தொன் பேரீச்சம் பழங்களை அந்த நாடு வழங்கியுள்ளது.
கொழும்பிலுள்ள ஐக்கிய அரபு இராச்சிய தூதரகத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றின்போதே பேரீச்சம் பழங்கள் உத்தியோகபூர்மாக இலங்கை அரசிடம் கையளிக்கப்பட்டன.
இந்த நிகழ்வில் இலங்கைக்கான ஐக்கிய அரபு இராச்சிய தூதுவர் அப்துல் ஹமீட் ஏ.கே.அல்முலா, சிரேஷ்ட அமைச்சர் ஏ.எச்.எம். பௌசி யிடம் பேரீச்சம் பழங்களைக் கையளித்தார்.
இந்த நிகழ்வில் முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் எம்.எச்.எம்.சமீலும் கலந்துகொண்டார். (ச)

## சாரதிகள் கவனத்துக்கு!

கொழும்பு, ஜூலை 4.
புகைப் பரிசோதனை சான்றிதழ் இன்றி வாகனங்களைச் செலுத்திச் செல்லும் சாரதிகளின் சாரதி அனுமதிப் பத்திரத்தில் 6 அபிவிருத்திப் புள்ளிகளை நீக்குவதற்கு மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம் தீர்மானித்துள்ளது.
மோட்டார் வாகனச் சட்டத்தின் 155 (ஆ) விதியின் கீழ் தற்போது குறிப்பிடப்பட்டுள்ள கட்டளைகளுக்கு அமைவாக இது செயற்படுத்தப்படும் என்று மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் எஸ்.எம். ஹரிச்சந்திர 'லங்காதீப்' பத்திரிகைக்குத் தெரிவித்தார்.



வாகனத்துக்கான அனுமதிப்பத்திரம், சாரதி அனுமதிப் பத்திரம் காப்புறுதிச் சான்றிதழ், வரி அனுமதிப் பத்திரம் என்பனவற்றுடன் புகைப் பரிசோதனைச் சான்றிதழும் மோட்டார் வாகனப் பொலிஸாரால் கட்டாயமாகப் பரிசீலனைக்கு உள்ளாக்கப்படும் என்று அவர் தெரிவித்தார். (ச-22)



பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலர் கோத்தபாய ராஜக்ஷ, சாலியபுரவில் உள்ள கஜபா இராணுவ தலைமையகத்தில் அமைக்கப்பட்ட ஓய்வு விடுதியை கடந்த திங்கட்கிழமை திறந்துவைத்தார். (ச)

## கிண்ணியா – மட்டு. வீதிக்கு 'காபெற்'

திருகோணமலை, ஜூலை 4
கிண்ணியா, குட்டிக்கரைச்சி, ஆலங்கேணி ஊடாக மட்டக்களப்புக்குச் செல்லும் வீதியை உயர்தர காபெற் வீதியாக நிர்மாணிக்கும் வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.
கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் அப்துல் மஜீத்தின் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ்



இந்தச் செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ் குறிஞ்சாக்கேணி பாலம், குட்டிக்கரைச்சி பாலம், சமாச்சத்தீவு பாலம் ஆகியன புதிய வடிவில் கிண்ணியா ஏரிகள் பாலத்தினைப் போன்று தூண்கள் நிறுவப்பட்டு நிர்மாணிக்கப்படவுள்ளன.
இத்திட்டத்தின் கீழ் மாஞ்சோலைப் பாலமும் நிர்மாணிக்கப்படவுள்ளது என்று முதலமைச்சு செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (ச-40)

## கொடுப்பனவு போதாது ஆசிரியர்கள் பாதிப்பு

கொழும்பு, ஜூலை 4
பரீட்சைகளின்போது கடமைகளில் ஈடுபடும் ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவு போதுமானதாக இல்லாததால் ஆசிரியர்கள் பாதிக்கப்படுகின்றனர் என்று இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.
அடுத்த மாதம் நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை நிலையங்களில் கடமைகளில் ஈடுபடும் ஆசிரியர்களுக்கான கொடுப்பனவு 25 சதவீதத்தால் அதிகரிக்கப்படும் என்று பரீட்சைகள் ஆணையாளர் டபிள்யு.எம்.என்.ஜே. புஸ்பகுமார தெரிவித்தார்.
இதேவேளை, பரீட்சைகளின்போது ஆசிரியர்கள் வலுக்கட்டாயமாக கடமையில் ஈடுபடுத்தப்படுகின்



றனர் என்று ஆசிரியர் சங்கத்தின் பிரதம செயலர் ஜோசப் ஸ்டாலின் சுட்டிக்காட்டினார்.
எனினும் எந்தவொரு ஆசிரியரும் வலுக்கட்டாயமாக கடமைகளில் இணைத்துக் கொள்ளப்படுவதில்லை என்று பரீட்சைகள் ஆணையாளர் புஸ்பகுமார கூறினார். (ச)

# இனமுறுகல் தணியும் வரை பாதுகாப்பு வழங்குங்கள்

## தொலஸ்வல தோட்ட பிரச்சினையில் ரூபன் பெருமாள் வேண்டுகோள்

நிவித்திகல, ஜூலை 4
இரத்தினபுரி, நிவித்திகல பிரதேசத்துக்குட்பட்ட தொலஸ்வல தோட்டத்தில் தோன்றியுள்ள இனமுறுகல் நிலைமை தணியும் வரை அந்தப் பகுதிக்கு தொடர்ச்சியாக பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் மாகாண சபை முன்னாள் உறுப்பினர் ரூபன் பெருமாள் கோரியுள்ளார்.
இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:
தொலஸ்வல தோட்டத்தில், கரவிட்ட பகுதியைச் சேர்ந்த லொத்தர் சீட்டு விற்பனையாளரான பெரும்பான்மையின இளைஞர் கடந்த 23 ஆம் திகதி வெட்டி கொலை செய்யப்பட்டிருந்தார்.
இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில், தொலஸ்வல தோட்டத்தைச் சேர்ந்த முருகையா ரஞ்சித்குமார் (வயது-31), வே.யோகேஸ்வரன் (வயது-29) இரு



வரும் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.
அதனையடுத்து, தொலஸ்வல தோட்டத்தை நோக்கி பஸ்ஸில் பயணம் செய்து கொண்டிருந்த எஸ்.இராஜமணி என்ற நபரை சிதுரு பிடிய எனும் கிராமத்தில் வழிமறித்த பெரும்பான்மையின இளைஞர்கள் தாக்கியுள்ளனர்.
இந்தச் சம்பவங்களைத் தொடர்ந்து தொலஸ்வல தோட்டத்தில் பதற்ற நிலைமை காணப்பட்டது. இந்த விடயம் தொடர்பில் எனக்குத் தெரியப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும் பிரதியமைச்சருமான முத்துசிவலிங்கத்துக்கு தெரிவித்தேன்.
இதுதொடர்பாக இரத்தினபுரி மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் நிவித்திகல பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி ஆகியோருடன் கலந்துரையாடி, தொலஸ்வல தோட்டத்துக்கு பாதுகாப்பு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
இந்தப் பகுதியில் ஏற்பட்டுள்ள பதற்ற நிலை தணியும் வரையில் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும். - என்றார். (ச-5)

சிவமயம்



# வீமன்காமம் கேணியடி ஞானவைரவர் கோயில் அலங்கார உற்சவ நாள்



வீமன்காமம் தெல்லிப்பழையில் அருள் பாலிக்கும் ஞானவைரவர் கோயில் அலங்கார உற்சவ நாள் எதிர்வரும் 09.07.2013 செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி 20.07.2013 சனிக்கிழமை வரை 12 நாள்கள் நடைபெறும். தினமும் பூசை மு.ப 11.00 மணிக்கு ஆரம்பமாகும் என்பதை அடியார்களுக்கு அறியத் தருகின்றோம்.

குறிப்பு- 20.07.2013 சனிக்கிழமை மு.ப 10.00 மணிக்கு பொதுக்கூட்டம் நடைபெறும்.

**நிர்வாகசபையினர்.**

உ

குருவே துணை

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்



## இலங்கை மனவளக்கலை மன்ற அறக்கட்டளை வழங்கும் சிறப்பு யோகா வாழ்வு பற்றிய பயிற்சிகள்

அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்களால் வடிவமைக்கப்பட்ட முழுமை நல வாழ்விற்கு மனவளக்கலை யோகா பயிற்சிகள்.

★எளிய முறை உடற் பயிற்சிகள் ★எளிய முறை காயகல்பப் பயிற்சிகள் ★எளிய முறை தியானப் பயிற்சிகள்
★அகத்தாய்வு எனும் தற்சோதனைப் பயிற்சிகள்

இன்றைய நவநாகரிக உலகில் நாம் எல்லோரும் அழகாகவே இருக்க ஆசைப்படுகின்றோம். நிலையற்ற புற அழகிற்கு நாம் அளவற்ற பணத்தைச் செலவு செய்கின்றோம். ஆரோக்கியம் நோக்கிய பயிற்சி பற்றி நாம் சிந்தித்ததுண்டா? உண்மையான அழகு என்பது எமது உடல் மனம் ஆரோக்கியத்துடன் இருப்பதுதான். இதுவே வாழ்வின் நிலையான அழகு. மன அமைதி, நோய் எதிர்ப்பு சக்தி, குடும்ப அமைதி போன்ற அனைத்தையும் பெற்றுக்கொள்ளக்கூடியதாக வடிவமைக்கப்பட்ட அற்புதமான பயிற்சியே மனவளக்கலை யோகாப்பயிற்சியாகும்.

பயிற்சி பெற்றவர்களின் பாராட்டுகளுக்கிணங்கவும் பலரின் வேண்டுகோளிற்கிணங்கவும் பயிற்சிகளை மீண்டும் ஆரம்பிக்க இருக்கின்றோம். புதிதாகப் பயிற்சிகள் பெற விரும்புபவர்களுடன் ஏற்கனவே பயிற்சிகளைப் பெற்றவர்களும் பயின்று பயன் பெற்றுக் கொள்ள அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**காலம்:**- 06.07.2013, 07.07.2013 மாலை 04.30 மணி 08.07.2013, 09.07.2013, 10.07.2013, 11.07.2013, 12.07.2013 மாலை 5 மணி.

**இடம்:- நாச்சிமார் கோயில் திருமண மண்டபம்,**
கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

### நிகழ்ச்சி நிரல்

இறைவணக்கம், குருவணக்கம்

**தொடக்கவுரை:**
மனவளக்கலை பேராசிரியர் அருள்நிதி
சி.முருகானந்தவேல் அவர்கள்
அறங்காவலர்
(இலங்கை மனவளக்கலை மன்ற அறக்கட்டளை)

அறிமுகவுரையும், பயிற்சி வழங்கலும்:
மனவளக்கலை பேராசிரியர் அருள்நிதி எஸ்.இந்திரா அம்மா அவர்கள்

அகத்தாய்வு - I (தற்சோதனைப் பயிற்சி)

**காலம்:**- 06.07.2013, 07.07.2013 சனி, ஞாயிறு
**நேரம்:**- காலை 8.30 மணி பி.ப. 01.00 மணிவரை
**இடம்:**- வண்ணார்பண்ணை தவமையம்

மனவளக்கலை மன்றத்தினால் வழங்கப்பட்ட எளியமுறை உடற் பயிற்சிகள் காயகல்பப் பயிற்சி ஆகிய 6 நாள் பயிற்சிகளை முடித்த அன்பர்களுக்கு அகத்தாய்வு I பயிற்சி நடைபெறவுள்ளது. இதில் வாழ்க்கையின் வெற்றிக்கு வழிகாட்டக்கூடிய விதத்தில் பஞ்சபூத நவக்கிரகதவம் பஞ்சேந்திரியதவம் இவற்றுடன் எண்ணம் ஆராய்தல் ஆசை சீரமைத்தல் வாழ்வின் நோக்கம் வாழ்த்தும் பயனும் இவைகள் கற்றுக் கொடுக்கப்படவுள்ளன. ஆறுநாள் பயிற்சி பெற்ற அனைவரும் கலந்து கொண்டு பயனடையுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

### அகத்தாய்வு - III
(தற்சோதனைப் பயிற்சி)

**காலம்:** 13.07.2013, 14.07.2013 சனி, ஞாயிறு
**நேரம்:** காலை 8.30 மணி - பிற்பகல் 1.00 மணி வரை
**இடம்:**- வண்ணார் பண்ணை தவமையம்.

அகத்தாய்வு II பயிற்சி முடித்த அன்பர்களுக்கு அகத்தாய்வு III பயிற்சி வழங்கப்படவுள்ளது. மனிதருள் வேறுபாடு ஏன். குடும்ப அமைதி, பிரபஞ்ச உயிரினத்தன்மாற்றம், பால் உணர்வும் ஆன்மிக மேம்பாடும், அன்பும் கருணையும் இவை போன்ற தத்துவவிளக்கங்களும் சிறப்பு தவங்களான ஒன்பது மையத்தவம், நித்தியானந்த தவம் இவைகளும் உடலிலுள்ள சீவகாந்தத்தை பெருக்கும் பயிற்சியான கண்ணாடி பயிற்சியின் விளக்கமும் கொடுக்கப்படவுள்ளது.

பயிற்சி வழங்குபவர்:
பேராசிரியர் அருள்நிதி எஸ். இந்திரா அம்மா அவர்கள்

**வண்ணார்பண்ணை தவமையவழி**
நாச்சிமார் கோயிலை அடுத்தவரும் அரசடிச் சந்தியிலிருந்து கேசாவில் பிள்ளையார் கோயிலை நோக்கிய முச்சந்தியிலுள்ள ரான்ஸ்போமருக்குப் பக்கத்திலுள்ள முதலாம் ஒழுங்கையிலுள்ளது.

**வாழ்க வளமுடன்.**

*இலங்கைமனவளக்கலைமன்றஅறக்கட்டளை*
*வண்ணார்பண்ணை தவமையம்,*
*நாச்சிமார் கோயிலடி, கே.கே.எஸ். வீதி,*
*யாழ்ப்பாணம்.*

தொடர்புகளுக்கு
077 772 6732
077 123 5646
071 440 3268
077 736 8745

(சி/10208)

# அதி சொகுசு பஸ்கள் விரைவில் அறிமுகம்

## தனியாருடன் போட்டிக்கு வருகிறது




கொழும்பு, ஜூலை 4

மக்களிடம் பெறும் பஸ் கட்டணத்துக்கு ஏற்பதாமான பஸ் சேவையை வழங்க வேண்டும் என்று தேசிய போக்குவரத்து ஆணைக் குழுத் தலைவர் ரொசான் குணவர்த்தன தெரிவித்தார்.

மலசலகூட வசதி, சொகுசாகச் சாய்ந்து சரி செய்துகொள்ளக் கூடிய ஆசனங்கள், தொலைக்காட்சி,ஆசனப்பட்டி அடங்கலான அதிசொகுசு பஸ் சேவையை அறிமுகம் செய்ய தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தீர்மானித்துள்ளது. ஆரம்பக் கட்டமாக அதிசொகுசு பஸ்களில் இத்தகைய சேவைகளை அறிமுகப்படுத்தி, பின்னர் சொகுசு, அரைச்சொகுசு மற்றும் சாதாரண பஸ்களில் இந்த வசதிகள் ஏற்படுத்தப்படவுள்ளன என்று அவர் கூறினார். (ச-ரி)

# குறிஞ்சாக்கேணி ஆற்றில் முதலையின் நடமாட்டம்



திருகோணமலை, கிண்ணியாப் பிரதேசத்தில் உள்ள குறிஞ்சாக்கேணி ஆற்றில் முதலையொன்றின் நடமாட்டம் மீண்டும் அதிகரித்துள்ளது. அதனால் பிரதேச மக்கள் மீண்டும் அச்சமடைந்துள்ளனர்.

இந்த ஆற்றில் கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் ஒரு முதலையின் நடமாட்டம் காணப்பட்டது. இதுகுறித்து பொது மக்களால் உரிய அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுஅவர்கள்பார்வையிட்ட போது அது காணாமல் போய்விட்டது. தற்போது அது மீண்டும் ஆற்றினுள் திரிகின்றது என்று பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

தம்பலகாமம் குடாவிலிருந்து பிரிந்து வரும் ஓர் ஆறே குறிஞ்சாக்கேணி ஆறாகும்.

இது உப்பு நீராக இருந்த போதிலும் முதலையின் நடமாட்டம் காணப்படுவது குறித்து பொது மக்கள் ஆச்சரியமடைந்துள்ளனர்.

(ச-40)

**விற்பனைக்கு**

தரமான 8'' கொன்கிறீற் கற்கள் விற்பனைக்கு உண்டு.
தொ.பே- 0776062747

**CSC-ASIAN மல்டிமீடியா**
**COMPUTER EDUCATION ஸ்கொலர்ஷிப்**
AN ISO 9001 : 2008 CERTIFIED TRAINING INSTITUTION

**Courses Offered**
Digital Pre-press
Digital Video Production
Graphics Design
AutoCAD ( 2D & 3D)
Mastering Multimedia
2D & 3D Animation
Cartoon Animation
Web Animation
MAYA Animation
Graphics & Animation

GRAPHICS
2D ANIMATION
3D ANIMATION

**WIN 65% SCHOLARSHIP**

இலவச புலமைப் பரிசில் பரீட்சை
**July 6th & 7th**

**100% PRACTICAL**

இலவச அனுமதிகளை அருகிலுள்ள பயிற்சி மையங்களில் பெற்றுக்கொள்ளுங்கள்.

| யாழ். நகரில் | சாவகச்சேரியில் | வவுனியா |
|---|---|---|
| 2G, ஸ்ரான்லி வீதி, T.P : 021-222 5677 | கட்டுக்காணி வீதி T.P : 021-2270267 | குருமண்காடு சந்தி மன்னார் வீதி T.P : 021-2262399 |

நல்லூர் பிரதேசசபை

**கோண்டாவில் ஐயப்பன் கோவிலுக்கு அருகிலுள்ள**

**- இரு கடைகளுக்கான**

## மீள் கேள்வி அறிவித்தல்

நல்லூர் பிரதேச சபையின் கோண்டாவில் இருபாலை வீதியில் அமைந்துள்ள கடைகள் இரண்டும் (02) 2013ஆம் ஆண்டு ஆவணி மாதம் 1ஆம் திகதி தொடக்கம் வாடகைக்கு விடுவதற்கு, கேள்விகள் 26.07.2013ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப 10 மணி வரை நல்லூர் பிரதேசசபைத் தலைமைக் காரியாலயத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்று பி.ப 3 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அத்தருணம் கேள்விக்காரரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமூகமளிக்கலாம்.

கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை **"தலைவர்" நல்லூர் பரதேச சபை,** கொக்குவில் என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிடப்பட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வி அறிவித்தல், கோண்டாவில் இருபாலை வீதி கடைகள் எனும் விவரத்தினை தெளிவாக எழுதி பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்படல் வேண்டும். இணைப்பிரதியை **"பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம். யாழ்ப்பாணம்"** என முகவரியிட்டு அனுப்பி வைத்தல் வேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் குறிப்பிடப்பட்ட மீளளிக்க முடியாத படிவக்கட்டணமும் மீளளிக்கக் கூடிய வைப்புப்பணமும் செலுத்துவதன் மூலம் நல்லூர் பிரதேசசபை அலுவலகத்தில் 25.07.2013 ஆம் திகதி வியாழக்கிழமை பி.ப 3 மணி வரை கேள்விப்படிவங்களை பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரங்கள் பெறுபவர்கள் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். எந்தவொரு கேள்வியையும் ஏற்கவோ, நிராகரிக்கவோ கேள்விச் சபைக்கு பூரண அதிகாரம் உண்டு. தெரிவு செய்யப்படும் கேள்விகாரர் மூன்று நாள்களுக்குள் " கீ " மணி, பெறுமதி சேர்வரி (VAT), NBT என்பவற்றின் முழுத்தொகையையும் செலுத்தி ஒப்பந்தம் செய்தல் வேண்டும். மேலதிக விவரங்களை நல்லூர் பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் காரியாலய நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

**குறிப்பு :**

1. ஆகக்குறைந்த கேள்வித் தொகைக்கு கீழ் குறிப்பிடப்படும் கேள்விகாரரின் கேள்வி வைப்புப்பணம் மீளளிக்கப்படமாட்டாது.
2. ஒரு விண்ணப்ப படிவத்தில் ஒரு கடைக்கு மட்டும் விண்ணப்பிக்க முடியும். ஒருவர் இருகடைகளுக்குமே விண்ணப்பங்களை சபையில் உரிய முறையில் பெற்று விண்ணப்பிக்கலாம். ஆனால் சித்தி பெற்ற விண்ணப்பங்களில் ஒருவருக்கு ஒரு கடை மட்டுமே வழங்கப்படும்.
3. தங்களினால் கோரப்படும் கேள்வித்தொகையுடன் 12% VAT, 2% NBT, செலுத்தப்படல் வேண்டும். மேற்படி தொகையும் விண்ணப்ப படிவத்தில் காட்டப்படல் வேண்டும்.
4. நடாத்தப்படவுள்ள வியாபாரத்தின் தன்மை விண்ணப்ப படிவத்தில் குறிப்பிடப்படல் வேண்டும். தங்களினால் நடாத்த உத்தேசிக்கப்படும் வியாபாரத்தின் தன்மை சபையால் பரிசீலிக்கப்பட்ட பின்பே அனுமதி வழங்கப்படும்.

| | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திர பணம் | மீளளிக்கப்படும் கேள்விவைப்புப் பணம் | ஏற்றுக்கொள்ளப்படும் ஆகக்குறைந்த கேள்வித்தொகை VAT + NBT தவிர |
|---|---|---|---|
| 01 | ரூபா1000.00 | ரூபா 2000.00 | ரூபா 200,000.00 |
| 02 | ரூபா1000.00 | ரூபா 2000.00 | ரூபா 200,000.00 |

**நல்லூர் பிரதேச சபை**
**கொக்குவில்.**
**04.07.2013**

**திரு. ப. வசந்தகுமார்.**
**தவிசாளர்,**
**நல்லூர் பிரதேச சபை.**

(C/10212) (10,14)

# 27 % பேருக்கு வடக்கில் அ.அட்டைகள் இல்லை

## வாக்களிப்பதில் சிக்கல்

யாழ்ப்பாணம், ஜூலை 4
வடமாகாணத்தில் 26.96 சதவீத மானோருக்கு தேசிய் அடையாள அட்டை இல்லை. வாக்களிப்பின் போது அடையாள அட்டை கட்டாயம் என்பதால் வடமாகாணத்தில் நடமாடும் சேவை நடத்தி அதனூடாகத் தேசிய அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொடுக்கும் செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக 'பவ்ரல்' அமைப்பின் நிகழ்ச்சித் திட்டப் பணிப்பாளர் சபாநாயகம் சிறீதரன் தெரிவித்தார்.

2012 ஆம் ஆண்டு வாக்காளர் பெயர்ப் பட்டியலின் பிரகாரம் யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகியவற்றை உள்ளடக்கிய யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் 4லட்சத்து 95 ஆயிரத்து 292 பேர் வாக்காளர்களாக உள்ளனர். இவர்களில் 4 லட்சத்து 23 ஆயிரத்து 847 பேரே தேசிய அடையாள அட்டையை வைத்துள்ளனர்.

முல்லைத்தீவு, மன்னார், வவுனியா மாவட்டங்களை உள்ளடக்கிய வன்னித் தேர்தல் மாவட்டத்தில் 2 லட்சத்து 19 ஆயிரத்து 196 பேர் வாக்காளர்களாகப் பதிவு செய்துள்ளனர். இவர்களில் ஒரு லட்சத்து 91 ஆயிரத்து 708 பேர் தேசிய அடையாள அட்டை வைத்துள்ளனர்.

யாழ்ப்பாணம் மற்றும் வன்னித் தேர்தல் மாவட்டங்களில் 98 ஆயிரத்து 833 பேர் தேசிய அடையாள அட்டையின்றி உள்ளனர்.

இவர்களுக்கு இலவசமாகத் தேசிய அடையாள அட்டை பெற்றுக் கொடுக்கும் பொருட்டே தமது அமைப்பினால் வடமாகாணத்தில் நடமாடும் சேவை நடத்தப்பட்டு வருவதாக சிறிதரன் மேலும் கூறினார். (த-5)

# தமிழக மீனவர்கள் 26 பேரும் விடுதலை

யாழ்ப்பாணம்,ஜூலை 04
அத்துமீறி இலங்கைக் கடற்பரப்பினுள் நுழைந்த குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இந்திய மீனவர்கள் 26பேரும் ஊர்காவற்றுறை நீதிமன்றினால் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

யாழ்.இந்தியத் தூதரக உதவிப் பொறுப்பதிகாரி விடுவிக்கப்பட்ட மீனவர்களைப் பொறுப்பேற்றார். மீனவர்களது படகுகளையும் எடுத்துச் செல்ல நீதிவான் ஆர்.எஸ்.மகேந்திரராஜா அனுமதி வழங்கினார்.

குறித்த 26 மீனவர்களும் 5 படகுகளில் தொழிலுக்குச் சென்றிருந்தபோது ஒருபடகு பழுதடைந்து நீரில் தாழமுற்பட்டது. அதனால் அதிலிருந்தவர்கள் எடையை படகுகளுக்கு மாற்றினர். பழுதடைந்த படகையும் மீட்கமுற்பட்ட நிலையில் அனைவரும் நெடுந்தீவுக் கடற்கரையில் கடந்த மாதம் 5ஆம் திகதி கரையொதுங்கினர். நெடுந்தீவுக் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட இவர்கள் ஊர்காவற்றுறை நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டு அவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டதோடு, வழக்கு யாழ்.மேல் நீதிமன்றுக்குப் பாரப்படுத்தப்பட்டிருந்தது. இந் நிலையிலேயே சட்டமா அதிபர் திணைக்களத்தினால் அவர்கள் நேற்று விடுதலை செய்யப்பட்டனர். (த-4)

# முருகைக் கல் அகழ்வில் ஈடுபட்ட மூவர் கைது

யாழ்ப்பாணம், ஜூலை, 4
சட்டவிரோதமாக முருகைக் கல் அகழ்வில் ஈடுபட்டிருந்த மூவரை கைது செய்த விசேட அதிரடிப் படையினர் அவர்கள் வசம் இருந்த 7 வாகனங்களையும் பறிமுதல் செய்தனர்.

அவர்களுக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தொடரப் போவதாக தெல்லிப்பழை பொலிஸார் தெரிவித்தனர்.

தெல்லிப்பழை வித்தகபுரத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

அதிகாரிகளுக்குக் கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் விசேட அதிரடிப்படையினர் மூவரையும் கைது செய்தனர். பின்னர் அவர்கள் தெல்லிப்பழைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மூவருக்கும் எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இரண்டு பெக்கோ இயந்திரங்கள் இரண்டு லொறிகள் இரண்டு உழவு இயந்திரங்கள் ஒரு டிப்பர் என்பன அவர்களிடம் இருந்து கைப்பற்றப்பட்டுள்ளன. (த-4)

# பொன்சேகா குழு இன்று யாழ். வருகிறது

யாழ்ப்பாணம், ஜூலை 4
வடமாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவது தொடர்பாக ஆராய்வதற்காக முன்னாள் ராணுவத் தளபதி சரத் பொன்சேகா தலைமையில் 60 பேர் கொண்ட குழு இன்று வியாழக்கிழமை யாழ்.மாவட்டத்துக்கு வருகை தரவுள்ளது.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 21 ஆம் திகதி வடமாகாண சபைத் தேர்தல் நடத்தப்படலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது. இதில் சரத் பொன்சேகா தலைமையிலான ஜனநாயக தேசியக் கட்சி போட்டியிடும் சாத்தியங்கள் பற்றி இந்தப் பயணத்தின் போது ஆராயப்படும்.

இதற்கான கள நிலைமைகளை நேரடியாக அறியும் பொருட்டும், இங்குள்ள சிவில் சமூகப் பிரதிநிதிகளைச் சந்திப்பதற்காகவும் சரத் பொன்சேகா இன்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளார்.

இன்று காலை 9 மணிக்கு யாழ். நகரிலுள்ள விடுதி ஒன்றில் சரத் பொன்சேகா கலந்துரையாடல் நடத்தவுள்ளார். அதன் பின்னர் நல்லூர் கந்தசுவாமி கோயிலுக்குச் சென்று வழிபாடுகளிலும் ஈடுபடுவார். (த-5)

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

# இந்தியத் தலையீடு தேவையற்ற ஒன்று

விவகாரமாக இருக்கக்கூடாது. இதனை இந்தியா புரிந்து கொள்ளும் என்பது எனது கருத்து.இது இலங்கையர்களின் விவகாரம் என்று இந்தியா விளங்கிக் கொள்ள வேண்டும். நாமே இதனைத் தீர்க்க வேண்டியுள்ளது.

இன அடிப்படையிலான மாகாணங்கள் இனப் பிரச்சினைக்குத் தீர்வாக அமையாது.இது தீர்வு அல்ல, இது தோல்வியடைந்து விட்டது. தமிழர்கள் நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் வசிக்கிறார்கள், முஸ்லிம்களும் கூட.

எனவே அவர்களின் பிரச்சினையை மாகாண சபைகள் எவ்வாறு தீர்க்க முடியும்? நிர்வாகத்தைப் பரவலாக்குவதில் எனக்கு நம்பிக்கை உள்ளது.ஆனால், இன, மத, மொழி, சாதி அடிப்படையில் அது இடம்பெறுவதில் நம்பிக்கையில்லை. இந்த நாடு எல்லா இலங்கையர்களுக்கும் உரியது, அதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்-என்றார்.(த)

# வவுனியா, மன்னாரில் அரச காணி 4,500 குடும்பங்களுக்கு பங்கீடு

அங்கு அரை ஏக்கர் வீதம் காணிகளைப் பகிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்கான நிதி ஒதுக்கீடுகளை வடமாகாண ஆளுநர் ஏற்படுத்தித் தந்துள்ளார். காணிகள் வழங்கப்பட்டதும் அதில் இந்திய வீட்டுத் திட்டத்தை ஏற்படுத்திக் கொடுக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று மேலும் தெரிவித்தார் முசலி பிரதேச செயலர்.

''1990களில் இடம்பெயர்ந்த 2,300 முஸ்லிம் குடும்பங்கள் தற்போது 7,000 குடும்பங்களாக மீளக்குடியமர்ந்த நிலையில், அவர்களில் பெரும்பாலானவர்கள் காணியற்று உள்ளனர். இந்த நிலையைக் கருத்திற்கொண்டே அவர்களுக்குக் காணி வழங்கப்படுகிறது. இதனை வைத்துக் கொண்டு முஸ்லிம் மக்களுக்கு காணி வழங்கப்படுவதாக கருதிவிட முடியாது. தமிழ்க் குடும்பங்கள் ஏற்கனவே காணிகளை கொண்டுள்ளன'' எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, காணி ஆணையாளர் திணைக்களம், ஜனாதிபதி செயலணிக் குழு என்பவற்றின் பணிப்புரைப்படி வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களில் காணி பங்கீடு நிறுத்தப்பட வேண்டும் என விடுக்கப்பட்டிருந்த அறிவிப்பு அண்மையில் திரும்ப பெறப்பட்டிருந்தது என பெயர் குறிப்பிட விரும்பாத அரச அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஐ-5)

# பிரிட்டனும் எச்சரிக்கை

வெளிநாட்டவர்களுக்கு எதிரான வன்முறைகள் அரிதாகவே இடம்பெறுகின்ற போதிலும், அங்கு சிறுவர்கள் உள்ளிட்டவர்கள் மீதான பாலியல் குற்றங்கள் அதிகரித்துள்ளன.

எனவே பெண்கள் தனியாகவோ சிறிய குழுவாகவோ பயணம் செய்யும் போது கூடுதல் கவனம் எடுத்துக்கொள்ள வேண்டும்.

இந்த ஆபத்துக்கள் பிரிட்டன் பிரஜைகளுக்கு மாத்திரம் என்று சொல்ல முடியாத போதும், குறிப்பிட்ட குற்றக் குழுக்கள் சுற்றுலாப் பிரதேசங்களிலேயே அதிகம் நடமாடுகின்றன.

2011 டிசெம்பரில், சுற்றுலாவில் வந்த பிரிட்டன் பிரஜை ஒருவர் இத்தகைய குழுவொன்றினால் கொல்லப்பட்டிருந்தார் என்றுள்ளது.

இதேபோன்றதொரு பயண எச்சரிக்கையை அமெரிக்காவும் வெளியிட்டமையால் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவரிடம் இலங்கை வெளிவிவகார அமைச்சு விளக்கம் கோரியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-5)


## மரண அறிவித்தல்கள்



### நாகலிங்கம் சச்சிதானந்தன்
(இந்திரன் - உதவி ஆணையாளர்)

சுதுமலை தெற்கு மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், அல்லைப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் சச்சிதானந்தன் கடந்த (28-06-2013) அன்று லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பண்டிதர் நாகலிங்கம் (யாழ்ப்பாணம், சுதுமலை தெற்கு)- தங்கமுத்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான உடையார் செல்லத்துரை (யாழ்ப்பாணம், அல்லைப்பிட்டி) சொர்ணம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற நடேஸ்வரியின் அன்புக் கணவரும், ஞானசம்பந்தனின் (J.P-சுதுமலை, விவாகப்பதிவாளரர்) அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற இராஜபுவனேஸ்வரன் (J.P- இலங்கை வங்கி முகாமையாளர், கொழும்பு), விவேகானந்தன் (தலைவர்-விவேகானந்தசபை, கொழும்பு), ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரனும், பவானி (லண்டன்), சிவானந்தன் (லண்டன்), கஜவல்லி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஸ்ரீதரன் (Western Fried Chicken-லண்டன்), சத்தியபாலினி (லண்டன்), காலஞ்சென்ற உருத்திரகுமார் (இந்தியா) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற தவவிநாயகம் (அல்லைப்பட்டி கிராமத் தலைமைகாரர் கிராம சபைத்தலைவர்), ஞானசம்பந்தன் தையல்நாயகி (சுது மலை), காலஞ்சென்ற வேலாயுதபிள்ளை (வர்த்தகர்-மட்டக்களப்பு)காலஞ்சென்ற சிவயோகலட்சுமி, நடேசபிள்ளை (தொழிலதிபர்- வட்டாரம் 2, அல்லைப்பிட்டி), காலஞ்சென்ற விநோதினி (கொழும்பு), மிதிலாதேவி(கொழும்பு) ஆகியோரின் மைத்துனரும், கிருஷ்ணாம்பாள் (பிரான்ஸ்), இராசம்மா(பிரான்ஸ்), காலஞ்சென்ற இரட்ணசபாபதி (உபதபால் அதிபர்- அல்லைப்பிட்டி), மங்கையற்க்கரசி (2ஆம் வட்டாரம், அல்லைப்பிட்டி) ஆகியோரின் சகலனும், சங்கரன், ஹரிகரன், சிவசக்கரவர்த்தி, பத்மஸ்ரீ, சுவர்ணஸ்ரீ, லக்ஷிமிஸ்ரீ, சரவணன், ஸ்ரீதேவி, சம்பத்குமார், அருள்நேசன் ஆகியோரின் அன்புப் பேரனும். தனுஷ்காவின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (04-07-2013) வியாழக்கிழமை 10.00 மணி முதல் இறுதிக் கிரியை செய்யப்பட்டு பி.ப 1 மணி அளவில் City of London and Crematorium, Aldersbrook Road, London, E12-5DQ என்னும் முகவரியில் பூதவுடல் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
சிவானந்தன் (மகன்) -0044 7424 446902
ஸ்ரீதரன் (மருமகன்) -0044 7944 177519
கஜவல்லி (மகள்) -0044 7440 118475
ஞானசம்பந்தன் (சகோதரன்)- 00 94 212255674
(முன்னாள் விவாகப் பதிவாளர், அன்னாமலை வீதி சுதுமலை தெற்கு, மானிப்பாய்)
நடேசபிள்ளை (மைத்துனர்) - 00 94 771 545 980

தகவல்
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
சகோதரன், மைத்துனர்.

(38878) (10,14)



### தணிகாசலம் முருகேசு

நயினாதீவு 3ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், கனடா ஸ்காபரோவை வசிப்பிடமாகவும் கொண்ட தணிகாசலம் முருகேசு கடந்த 30.06.2013 ஞாயிற்றுக்கிழமை ரொறன்ரோவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு-வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நாகமணி- ஆசைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், சிவகாமசுந்தரியின் அருமைக் கணவரும், பிரணவனின் அன்புத் தந்தையும், காசிநாதன், துரைரெத்தினம், நாகலெட்சுமி, மகேஸ்வரன், தேவராசா, வசந்தராசா, விஜயலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரரும், புவனேஸ்வரி, முத்துலிங்கம், ஈஸ்வரி, ஜெகதீஸ்வரி, விஜயலட்சுமி, வாமதாசன், ஜெயலட்சுமி, கலாநிதி, குணரட்ணம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், நடராசா, இந்திராணி, கதிரவேற்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகலனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் பார்வைக்கு வைக்கப்பட்டு இன்று (04.07.2013) வியாழக்கிழமை கிரியைகள் நடைபெற்று பின்னர் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

3ஆம் வட்டாரம்,
நயினாதீவு.
0213213429, 0779608306

தகவல்:
குடும்பத்தினர், கோ.வாமதாஷன்

## மரண அறிவித்தல்



### வேலுப்பிள்ளை நாகராஜா
(முன்னாள் அதிபர் மீசாலை கமலாம்பிகை வித்தியாலயம்)

நுணாவிலைப் பிறப்பிடமாகவும் பெருங்குளம் சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை நாகராஜா நேற்று (03.07.2013) புதன் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை- ஆச்சிமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும் திருமதி நாகேஸ்வரியின் பாசமிகு கணவரும் காலஞ்சென்றவர்களான திருமதி நாகேஸ்வரி பரமலிங்கம், திருமதி யோகம்மா இரத்தினம் மற்றும் சுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் திருமதி இராஜநந்தினி- வேலும் மயிலும், திருமதி முத்துக்குமாரு- இராஜினிதேவி, திருமதி சுகந்தினி- சந்திரசேகரம், சுகந்தன், திருமதி அமிர்தினி- மயிலைநாதன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

353/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/10219)

தகவல்:
இ.முத்துக்குமாரு (மருமகன்)

## மரண அறிவித்தல்



### முருகேசு பத்மநாதன்
(இளைப்பாறிய தபாலதிபர்)

புன்னாலைக்கட்டுவன் வடக்கைப் பிறப்பிடமாகவும், அச்சுவேலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு பத்மநாதன் நேற்று முன்தினம் (02.07.2013) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி முருகேசு தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற விநாயகமூர்த்தி-செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், ராணியம்மாவின் பாசமிகு கணவரும், செந்தில்குமரனின் அன்புத் தந்தையும், பிரதீபாவின் அன்பு மாமனும், அனுலாவின் அன்புப் பெரியப்பாவும், பவளம், இராசமலர், ராசன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அச்சுவேலியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் இன்று (04.07.2013) வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு தகனக்கிரியைக்காக அச்சுவேலி தெற்கு, முழக்கன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிவசக்தி கோயிலடி,
அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.

(சி/10218) (10,14)


தகவல்:
ப.செந்தில்குமரன் (மகன்)
077 985 4429

## தடகள விழா ஆரம்பம் இன்று

யாழ்ப்பாணம், ஜூலை 4
வடமாகாணக் கல்வித் திணைக்களத்தால் வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையே நடத்தும் தடகளப் போட்டிகளின் ஆரம்ப நிகழ்வுகள் இன்று வியாழக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வடக்கு மாகாண கல்வி கலாசார பண்பாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் திரு எஸ்.சத்தியசீலன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி கலந்துகொள்ளவுள்ளார்.

(ற-23-288)



வடமாகாண பாடசாலைகளுக்கு இடையே நடத்தப்பட்ட கராத்தே (குமித்தே) போட்டிகளில் 17 வயது மகளிர் பிரிவில் கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயத்தைச் சேர்ந்த செல்வி மகேந்திரன் மதுரிகா மூன்றாம் இடத்தைப் பெற்றுக் கொண்டதுடன் தேசிய மட்டப் போட்டிகளிலும் கலந்துகொள்ளவுள்ளார். (ற-288)

நெடியகாடு உதைபந்துத் தொடர்

## இதுவரை வெற்றி பெற்ற அணிகளின் விவரங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 4
நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகத்தின் 60ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில் கடந்த செவ்வாய்க் கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணிகளின் விவரம்:

வல்வை விளையாட்டுக் கழக அணிக்கும் றெட்றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகத்துக்கும் இடையே நடைபெற்ற ஆட்டத்தில் இரு அணிகளும் ஆட்டநேர முடிவில் தலா ஒரு கோலைப் பெற்ற நிலையில், வெற்றி தோல்வியை நிர்ணயிப்பதற்காக 5 சமனிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன. அதில் றெட்றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகம் .5:4 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் பாசையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம் 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

(ற-23)



## தாச்சிச் சங்க பொதுக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 4
யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் எதிர்வரும் 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கத் தலைவர் க.தயாளன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் முக்கிய விடயங்கள் குறித்து கலந்தாலோசிக்க உள்ளதால், தாச்சி விளையாட்டு கழகங்களின் பிரதிநிதிகளைத் தவறாது கலந்து கொள்ளுமாறு தாச்சிச் சங்கச் செயலாளரால் கேட்கப்பட்டுள்ளது.

(ற-288)

பாடசாலைகளுக்கு இடையான ரென்னிஸ் தொடர்

## 19 வயதுப் பிரிவில் வெற்றிபெற்ற அணிகள்

யாழ்ப்பாணம், ஜூலை 4
வடமாகாண பாடசாலைகளுக்கு இடையே நடத்தப்படும் ரென்னிஸ் சுற்றுத் தொடரில் 19 வயதுப் பிரிவு ஆடவர் மற்றும் மகளிரி பிரிவுகளில் வெற்றி பெற்ற பாடசாலை அணிகளின் விவரங்கள்:

19 வ.பி ஆண்கள்:
முதலாமிடம் - சென். ஜோன்ஸ் கல்லூரி
இரண்டாமிடம் - வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி.
மூன்றாமிடம் - யாழ்.மத்திய கல்லூரி.

19 வ.பி. பெண்கள்
முதலாமிடம் - சுண்டுக்குழி மகளிர் கல்லூரி
இரண்டாம் இடம்: வேம்படி மகளிர் கல்லூரி
மூன்றாமிடம் : வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி.

(ற-23)




சுண்டுக்குழி மகளிர் கல்லூரி அணியினர்




வேம்படி மகளிர் கல்லூரி அணியினர்

## டைமன்ஸ் உதைபந்து தொடர்; வெற்றி பெற்ற அணிகள்

யாழ்ப்பாணம், ஜூலை
வதிரி டைமன்ஸ் விளையாட்டுக் கழகத்தின் நூற்றாண்டை முன்னிட்டு நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் மனோகரா விளையாட்டுக் கழகமும், நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகமும் வெற்றிபெற்றுள்ளன.

மனோகரா விளையாட்டுக் கழக அணிக்கும் மணற்காடு சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழகத்துக்கும் இடையே இடம்பெற்ற ஆட்டத்தில் மனோகரா விளையாட்டுக் கழக அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழக அணிக்கும் மைக்கல் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழக அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற் றது.

(ற-23)

## டிராவிட்டின் தந்தை சாவு



இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித் தலைவர் ராகுல்டிராவிடின் தந்தை சரத் டிராவிட் நேற்று மாலை பெங்களூரில் காலமானார்.

பெங்களூரில் உள்ள அவரது வீட்டில் சரத் டிராவிட் காலமானார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. கிஸ்ஸான் ஜாம் நிறுவனத்தில் பணியாற்றி ஓய்வு பெற்றவர் சரத் டிராவிட். சரத் டிராவிடின் மனைவி பெயர் புஷ்பா. ராகுல் டிராவிட் தவிர விஜய் டிராவிட், ரத் டிராவிட் என்ற இளைய மகன்கள் இருவரும் உள்ளனர்.

மராத்தி பிராமண வகுப்பைச் சேர்ந்தவர் சரத் டிராவிட். ராகுல் டிராவிட்டும், அவரது தம்பியும் மத்தியப் பிரதேச மாநிலம் இந்தூரில் பிறந்தவர்கள். பின்னர் குடும்பத்தோடு பெங்களூருக்கு இடம் பெயர்ந்தமை குறிப்பிடத்தக்கது.

(ற)

## கோணேஸ்வரா இந்து வெற்றி

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் 15 வயதுப் பிரிவு பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்தும் பிரிவு III கிரிக்கெட் தொடரின் ஆட்டமொன்றில் ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி வெற்றிபெற்றுள்ளது.

நேற்றுமுன்தினம் ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் பதவிய மகா வித்தியாலய அணியை எதிர்த்து விளையாடிய ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி அணி 42.5 பந்து பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 276 ஓட்டங்களைப் பெற்றது.

க.கிரிசாந்தன் 41, ஆனந்தபிரகாஷ் 30, யு.மதுகரன் 29, வே.தகசனன் 22, ஹ.ரிசிகீர்த்தனன் 22, பே.பானுசாந் 20, ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர்.

பதிலுக்கு விளையாடிய பதவிய அணி 25 பந்து பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 114 ஓட்டங்களைப் பெற்றது.

ஹ. ரிசிகீர்த்தனன் 6.2 பந்து பரிமாற்றங்களில் 21 ஓட்டங்களுக்கு 5 இலக்குகளையும். பே.பானுசாந், வி.ஆனந்தபிரகாஷ், ம.அஜந்தன், பு.டினுர்சன் ஆகியோர் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

(ற)

## ஆஸி. அணியில் இடம்பிடிக்கும் பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர்

பாகிஸ்தான் கிரிக்கெட் வீரரான பவாத் அகமதுக்கு ஆஸ்திரேலிய குடியுரிமை வழங்கப்பட்டது. அதையடுத்து அவர் ஆஷஸ் டெஸ்ட் தொடரில் இடம்பெறுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

பாகிஸ்தானில் பிறந்தவர் பவாத் அகமது. சிறந்த சுழல் பந்து வீச்சாளரான இவர், 10 முதல் தர போட்டிகளில் விளையாடியுள்ளார். பின் தொண்டு நிறுவனத்தின் உதவியுடன் பாகிஸ்தானில் பெண் கல்வியின் வளர்ச்சிக்காக பாடுபட்டார். இவரது உயிருக்கு பயங்கரவாதிகளிடம் இருந்து மிரட்டல் வந்ததை அடுத்து 2010 ஆம் ஆண்டு ஆஸ்திரேலியா சென்று அங்கு ஆஸ்திரேலிய "ஏ' கிரிக்கெட் அணிக்காக விளையாடினார்.

பின்னர் நிரந்தர குடியுரிமை கேட்டு விண்ணப்பித்த இவருக்கு விளையாட்டு வீரர் என்ற அடிப்படையில் ஆஸ்திரேலிய குடியுரிமை வழங்கப்பட்டது.

வோர்னின் ஓய்வுக்கு பின் தரமான சுழற்பந்துவீச்சாளர் இல்லாமல் தவித்து வரும் ஆஸ்திரேலிய அணிக்கு பவாத் அகமது வரவு சிறந்த வரப்பிரசாதமாக அமைந்துள்ளது. எதிர்வரும் 10ஆம் திகதி ஆரம்பமாகும் இங்கிலாந்துக்கு எதிரான பாரம்பரியமிக்க ஆஷஸ் டெஸ்ட் தொடருக்கான ஆஸ்திரேலிய அணியில் இவர் இடம் பெற வாய்ப்பு உள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

(ற)


## வடக்கு கிழக்கு அணி வெற்றி

கிளிநொச்சியில் 19 வயதின் கீழ்ப் பிரிவு "20/20" துடுப்பாட்டப் போட்டியில் இலங்கையின் வடக்குக் கிழக்கு அணி ஆஸ்திரேலிய மெல்பேர்ண் அகடமி அணியைத் தோற்கடித்து வெற்றியீட்டியுள்ளது.

கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில், வடக்குக் கிழக்கு அணிக்கும் ஆஸ்திரேலியா - மெல்பேர்ண் அகடமி அணிக்கும் இடையில் நடைபெற்றது.

இந்த ஆட்டத்தில் ஆஸ்திரேலிய அணி 18 பந்துப்பரிமாற்றங்களின் அனைத்து இலக்குகளையும் இழந்து 117 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய வடக்குக் கிழக்கு அணி 20 பந்துப்பரிமாற்றங்களில் 6 இலக்குகளை மட்டும் இழந்து 118 ஓட்டங்களைப் பெற்று வெற்றியடைந்தது. (ற)

# இலங்கையணிக்கு அபார வெற்றி



மேற்கிந்தியத் தீவுகளுக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டு முக்கோண ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரொன்றில் பங்குபற்றிவரும் இலங்கை அணி, இந்தியாவிற்கு எதிரான ஆட்டத்தில் 161 ஓட்டங்களால் மாபெரும் வெற்றியைப் பெற்றுள்ளது.

சபீனா பார்க், ஜமைக்காவில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணி முதலில் பந்துவீசத் தீர்மானித்தது.

அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 50 பந்துப்பரிமாற்றங்களில் ஓர் இலக்கை மாத்திரம் இழந்து 348 ஓட்டங்களைக் குவித்தது.

ஆரம்பத்தில் பொறுமையான ஆட்டத்தை வெளிப்படுத்திய இலங்கை அணி, அதன் பின்னர் அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. முதலாவது இலக்குக்காக மஹேல ஜெயவர்தன, உபுல் தரங்க இருவரும் 38.4 பந்துப்பரிமாற்றங்களில் 213 ஓட்டங்களைக் குவிக்க, அதன் பின்னர் 2ஆவது இலக்குக்காக பிரிக்கப்படாத இணைப்பாட்டமாக 79 பந்துகளில் 135ஓட்டங்கள்குவிக்கப்பட்டன.

துடுப்பாட்டத்தில் இலங்கை அணி சார்பாக உபுல் தரங்க 159 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 174 ஓட்டங்களையும், மஹேல ஜெயவர்தன 112 பந்துகளில் 107 ஓட்டங்களையும், அஞ்சலோ மத்தியூஸ் 29 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 44 ஓட்டங்களையும் குவித்தனர்.

பந்துவீச்சில் இந்திய அணி சார்பாக வீழ்த்தப்பட்ட ஒரே இலக்கை ரவிச்சந்திரன் அஷ்வின் வீழ்த்தினார்.

349 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இந்திய அணி, 44.5 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 187 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 161 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

12 ஓட்டங்களுக்கே முதலாவது இலக்கை இழந்த இந்திய அணி, அதன் பின்னர் தொடர்ச்சியாக இலக்குகளை இழந்து தடுமாறியது. அந்த அணியின் இறுதி 5 இலக்குகளும் 42 ஓட்டங்களுக்குள் வீழ்த்தப்பட்டன.



துடுப்பாட்டத்தில் இந்திய அணி சார்பாக ரவீந்திர ஜடேஜா 62 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 49 ஓட்டங்களையும், சுரேஷ் ரெய்னா 33 பந்துகளில் 33 ஓட்டங்களையும், முரளி விஜய் 46 பந்துகளில் 30 ஓட்டங்களையும் பெற்றனர்.



பந்துவீச்சில் இலங்கை அணி சார்பாக ரங்கன ஹேரத் 37 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும், சச்சித்திர சேனநாயக்க, லசித் மலிங்க இருவரும் தலா 2 இலக்குகளையும், நுவான் குலசேகர, அஞ்சலோ மத்தியூஸ் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

இப்போட்டியின் நாயகனாக இலங்கையணியின் உபுல் தரங்க தெரிவானார்.(ற)

## தீவுகளுக்கு எதிரான பாக். அணி அறிவிப்பு

மேற்கிந்தியத் தீவுகளுக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ள பாகிஸ்தான் அணி அறிவிக்கப்பட்டுள்ளது. அறிவிக்கப்பட்டுள்ள ஒருநாள் சர்வதேச ஆட்டம் மற்றும் '20/20' சர்வதேச ஆட்டம் என்பவற்றின் அணிகளில் சயிட் அப்ரிடி மீண்டும் சேர்க்கப்பட்டுள்ளார்.

5 ஒருநாள் சர்வதேச ஆட்டங்கள், இரு '20/20' சர்வதேச ஆட்டங்கள் அடங்கிய இத்தொடர் எதிர்வரும் 14 ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ள நிலையிலேயே அணி தொடர்பான அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

அண்மையில் இடம்பெற்று முடிந்த சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் சேர்க்கப்பட்டிருக்காத சயிட் அப்ரிடி, உமர் அக்மல் ஆகியோர் இந்த 2 வகையான ஆட்டங்களுக்கான அணிகளிலும் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் இடம்பெற்றிருந்த சொய்ப் மலிக், கம்ரன் அக்மல், இம்ரான் பர்ஹத் ஆகிய வீரர்கள் இத்தொடருக்கான அணியில் சேர்க்கப்படவில்லை. சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் இவ்வீரர்கள் சிறப்பான பெறுபேறுகளை வெளிப்படுத்தாததன் காரணமாகவே இந்நிலை ஏற்பட்டுள்ளது.

அறிவிக்கப்பட்டுள்ள அணிகள்

ஒருநாள் ஆட்டம்: மிஸ்பா உல் ஹக், நசீர் ஜம்ஷெத், அஹமட் ஷெஷாத், மொஹமட் ஹபீஸ், அசத் சபீக், உமர் அக்மல், ஷகிட் அப்ரிடி, சயீட் அஜ்மல், வகாப் றியாஸ், ஜுனைட் கான், மொஹமட் இர்பான், அசத் அலி, உமர் அமின், மொஹமட் றிஸ்வான், அப்துர் ரெஹ்மான், ஹரிஸ் சொஹைல்

'20/20': மொஹமட் ஹபீஸ், நசீர் ஜம்ஷெத், அஹமட் ஷெஷாத், ஹரிஸ் சொஹைல், உமர் அக்மல், ஹமாட் அஸாம், ஷகிட் அப்ரிடி, சயீட் அஜ்மல், சொஹைல் தன்வீர், வகாப் றியாஸ், மொஹமட் இர்பான், அசத் அலி, உமர் அமின், ஸுல்பிகர் பாபர், ஜுனைட் கான்

(ற)



## முக்கோணத் தொடரில் ராம்போல் இல்லை

இலங்கை, இந்திய, மேற்கிந்தியத் தீவுகள் அணிகள் பங்குகொள்ளும் முக்கோணத் தொடரிலிருந்து மேற்கிந்தியத் தீவுகள் அணியின் வேகப்பந்து வீச்சாளர் ரவி ராம்போல் நீக்கப்பட்டுள்ளார். அவருக்கு ஏற்பட்டுள்ள உபாதை காரணமாக அவர் இத்தொடரிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளார்.



இத்தொடரின் முதல் ஆட்டமாக இலங்கை, மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையில் இடம்பெற்ற போட்டியின்போது ரவி ராம்போல் கணுக்கால் உபாதைக்குள்ளாகியதையடுத்து இரண்டாவது போட்டியில் பங்குபற்றியிருக்கவில்லை.

அதன் பின்னர் மேற்கொள்ளப்பட்ட மருத்துவப் பரிசோதனைகளின் போது அவரது உபாதை எதிர்பார்த்ததை விட அதிகமானதாகக் காணப்பட்டதால் இத்தொடரில் ரவி ராம்போல் பங்குபற்ற மாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ரவி ராம்போலுக்குப் பதிலாக வேகப்பந்து வீச்சாளரான ஜேஸன் ஹோல்டர் சேர்க்கப்பட்டுள்ளார். மேற்கிந்தியத் தீவுகள் சார்பாக இதுவரை 2 ஒருநாள் சர்வதேச ஆட்டங்களில் பங்குபற்றியுள்ள ஜேஸன் ஹோல்டர், உள்ளூர்ப் போட்டிகளில் சிறப்பான பெறுபேறுகளை வெளிப்படுத்தியவராகக் காணப்படுகிறார்.

மேற்கிந்தியத் தீவுகளின் இரண்டாவது போட்டியில் அவ்வணியின் தலைவர் டுவைன் பிராவோவும் உபாதை காரணமாகப் பங்குபற்றவில்லை. எனினும் தற்போது அவரது உபாதை குணமாகியுள்ளதை அடுத்து ஏனைய ஆட்டங்களில் அவர் பங்குபற்றுவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இதுவரை இடம்பெற்ற ஆட்டங்களில் ஜமைக்காவில் இடம்பெற்ற அதேவேளை, இனிவரும் போட்டிகள் ட்ரினிடாட் அன்ட் ரொபாக்கோவில் இடம்பெறவுள்ளன.(ற)

## தோல்வி குறித்து ஆராய வேண்டும் - ஹோக்லி

மேற்கிந்தியத் தீவுகள் முக்கோணத் தொடரில் இந்திய அணி சந்தித்த தோல்விகள் குறித்து ஆராயப்பட வேண்டும் என இத்தொடரில் இந்திய அணியின் தலைவராகச் செயற்படும் விராட் ஹோக்லி தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கெதிரான தோல்வி தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும்போதே விராட் ஹோக்லி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கெதிராக நேற்று. முன்தினம் இடம்பெற்ற போட்டியில் இந்திய அணி 161 ஓட்டங்களால் படுதோல்வியடைந்ததோடு, இதுவரை இத்தொடரில் இடம்பெற்ற 2 போட்டிகளிலும் தோல்வியடைந்துள்ளது.

இலங்கைக்கெதிரான தோல்வி இந்திய அணியின் வீரர்களைத் தாக்கும் எனத் தெரிவித்த அவர், எவ்வாறான தவறுகள் விடப்பட்டன என்பது ஆராயப்பட வேண்டும் எனத் தெரித்தார். அத்துடன் எஞ்சியுள்ள 2 ஆட்டங்களிலும் சிறப்பான பெறுபேற்றை வெளிப்படுத்த வேண்டும் எனவும் தெரிவித்தார்.

இலங்கைக்கெதிரான ஆட்டத்திலும், இத்தொடரின் முதலாவது போட்டியிலும் இந்திய அணி களத்தடுப்பில் மோசமாகச் செயற்பட்டிருந்தது.

இலங்கைக்கெதிரான ஆட்டத்தில் இரண்டு துடுப்பாட்ட வீரர்களின் (மஹேல, தரங்க) பிடிகளை இந்திய அணி தவறவிட்டிருந்தது என்று தெரிவித்த விராட் ஹோக்லி, அவர்களிருவரும் அதற் குப் பின்னர் 160 தொடக்ம் 170 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பகிர்ந்திருந்தமையையும் குறிப்பிட்டார்.

களத்தடுப்புத் தவறுகளுக்கு ஒரு சில வீரர்களை மாத்திரம் சுட்டிக்காட்ட விரும்பவில்லை எனத் தெரிவித்த விராட் ஹோக்லி, கிரிக்கெட் ஓர் அணி விளையாட்டு. பிடிக ளைத் தவறவிடுவது நடக் கக்கூடிய ஒன்றுதான். எனி னும் மிகச்சிறந்த களத்தடுப்பு அணிகளுள் ஒன்றாக இந்திய அணி காணப்படுகிறது என்பதே உண்மை என்றும் தெரிவித்தார்.

(ற)



''இவ்ளோ பெரிய பந்தில கிரிக்கெட் விளையாடினா நம்மாக்கள் பிடிய விடவே மாட்டாங்களே...''

# கிறிஸ் மார்ட்டின் ஓய்வு பெற்றார்


நியூஸிலாந்து அணியின் வேகப்பந்து வீச்சாளர் கிறிஸ் மார்ட்டின் சர்வதேச ஆட்டங்களில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளதுடன், ஓய்வுபெறுவதற்கான சரியான தருணம் இதுவே என்றும் தெரிவித்துள்ளார்.

நியூஸிலாந்து அணி சார்பாக 71 டெஸ்ட் ஆட்டங்களில் பங்குபற்றிய கிறிஸ் மார்ட்டின் 33.81 என்ற சராசரியில் 233 இலக்குகளையும், 20 ஒருநாள் சர்வதேச ஆட்டங்களில் பங்குபற்றி 18 இலக்குகளையும், ஆறு '20/20' சர்வதேச ஆட்டங்களில் 7 இலக்கையும் கைப்பற்றியிருந்தார்.

நியூஸிலாந்து சார்பாக 3 ஆவது அதிகூடிய டெஸ்ட் இலக்குகளையும் கைப்பற்றிய கிறிஸ் மார்ட்டின், அவரது மோசமான துடுப்பாட்டத்தை வெளிப்படுதியதாக அறியப்பட்டவர். 104 இனிங்ஸ்களில் துடுப்பெடுத்தாடியுள்ள கிறிஸ் மார்ட்டின், 123 ஓட்டங்களை 2.36 என்ற சராசரியிலேயே பெற்றுள்ளார்.

ஓய்வு பெறுவதற்கான சரியான நேரம் இதுவென உணர்வதாகத் தெரிவித்த கிறிஸ் மார்ட்டின், நியூஸிலாந்தை சர்வதேசப் போட்டிகளில் பிரதிநிதித்துவப்படுத்தக் கிடைத்த வாய்ப்புக்களை மிகவும் நேசித்திருந்ததாகத் தெரிவித்த அவர், நாட்டுக்காக விளையாடும் போது தன்னால் முடிந்தளவு திறமையை வெளிப்படுத்தியிருந்ததாகத் தெரிவித்துள்ளார்.

15 ஆண்டுகள் தொழில்முறைக் கிரிக்கெட் ஆட்டங்களில் பங்குபற்றியதன் பின்னர், புதியதொரு சவாலை எதிர்கொள்வதற்கான நேரம் இதுவெனத் தெரிவித்த கிறிஸ் மார்ட்டின், நியூஸிலாந்து அணிக்குத் தனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதாகவும் தெரிவித்துள்ளார். (ற)



# டிராவிட்டுடன் ஒப்பிடுவது நம்பிக்கை அளிக்கின்றது

## -புஜாரா

இந்திய அணியின் தூண் என்று வர்ணிக்கப்படும் முன்னாள் வீரர் டிராவிட்டுடன் தன்னை ஒப்பிடுவது மனஉறுதியை அதிகரிக்கிறது என்று இந்திய வீரர் புஜாரா தெரிவித்துள்ளார்.

டிராவிட் ஓய்வு பெற்ற பின்னர், இந்திய அணியில் பெரும் வெற்றிடம் ஏற்பட்டது. இந்நிலையில் புஜாராவின் வரவு புது நம்பிக்கை அளித்ததுள்ளது. கடந்த ஆண்டு நடந்த இங்கிலாந்து, ஆஸ்திரேலிய அணிகளுக்கெதிரான டெஸ்ட் தொடர்களில் இரட்டை சதம் அடித்தார். அதனால் இவரை அடுத்த டிராவிட் என்று வர்ணித்தனர்.

இது குறித்து புஜாரா கூறுகையில்,

''இந்திய கிரிக்கெட் அணியில் தனக்கென்று ஒரு தனி இடம் பிடித்தவர் டிராவிட். அணியின் வெற்றிக்கு பெரிதும் கைகொடுத்த இவர், தூண் என்று தனி முத்திரையே பதித்துள்ளார்.

இவரைப்போல வெற்றிகரமான வீரருடன் ரசிகர்கள் என்னை ஒப்பிடுவது தன்னம்பிக்கையை அதிகப்படுத்துகிறது. சிறுவயதில் நான் முன்மாதிரியாக எடுத்துக்கொண்ட வீரர்களில் டிராவிட் ஒருவர். எனது வழிகாட்டியான அவரிடம் இருந்து பல விடயங்களை கற்றுக்கொள்ள முயற்சித்தேன். அதற்குள் ஓய்வு பெற்றுவிட்டார். இருப்பினும் நேரம் கிடைக்கும் போது எல்லாம் அவரிடம் ஆலோசனை கேட்பேன்.

டெஸ்ட் போட்டிகளின் ஆரம்பத்தை சரியாக தொடங்கியுள்ளேன். ஒருநாள் ஆட்டங்களிலும் வாய்ப்பு கிடைக்கும் பட்சத்தில் சிறப்பாக செயல்படுவேன். அதற்கான வாய்ப்பு விரைவில் கிடைக்கும் என்று நம்புகிறேன். எதிர்வரும் டிசெம்பர் தென்னாபிரிக்காவில் நடக்கும் டெஸ்ட் தொடரில் நிச்சயம் சாதிப்பேன்.

இந்திய அணி சிறப்பாக செயல்பட்டு, 2017 ஆம் ஆண்டு முதல் டெஸ்ட் சம்பியன்ஷிப் கிண்ணத்தை கைப்பற்றும் என்ற நம்பிக்கை உள்ளது. ஐ.பி.எல் கிரிக்கெட் தொடரில் சூதாட்டம் நடந்ததா, என்பது எனக்கு தெரியாது. ஆனால் ஒரு சில வீரர்களால் எல்லா கிரிக்கெட் வீரர்களையும் கேள்வி கேட்கும் நிலை உருவாகியுள்ளது. இது, பெரும் ஏமாற்றமாக உள்ளது .(ற)



ALLIANCE FRANÇAISE DE JAFFNA
French மொழி கற்பிப்பதற்கு French Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்ட வடமாகாணத்திலுள்ள ஒரேயொரு நிறுவனம் Alliance Française de Jaffna மட்டுமே. இது ஓர் அரிய சந்தர்ப்பம்.மேலும் தரமான CERTIFICATEஐ பெறுங்கள்
புதிய வகுப்புகள் மிக விரைவில்... T.P.021.222.8093
61, Kachchery-Nallur Road, Jaffna
(றக்கா வீதியும் கச்சேரி-நல்லூர் வீதியும் இணையும் சந்தியில்)

உண்மை தான்- மெய்தான்
வெறும் 625,000/= ஆறு இலட்சத்து இருபத்தையாயிரம் மட்டும் செலுத்தி ஐரோப்பிய நாட்டில் படிக்க, உழைக்கச் செல்லலாம் (நிபந்தனைகளுடன்)
படித்துக் கொண்டே மாதாந்தம் இலட்ச ரூபாய் வரை சம்பாதிக்கலாம்.
விரைந்து வாருங்கள் உங்களில் சிலருக்கே வாய்ப்பு
திசை காட்டி(பிறைவேற்)லிமிட்
175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
021 221 9016, 021 568 9090
(38806)(3.8.11)

# கல்வியாண்டு - 2013
## விண்ணப்பம் கோரல்

சான்றிதழ் அளிக்கப்பட்ட பட்டய கணக்காளர்களுக்கான தொழில்சார் பட்டப்படிப்பு விண்ணப்பம் கோரல்

(ACCA) Assocaition of chartered certifid Accountants - U.K. (சான்றிதழ் அளிக்கப்பட்ட பட்டயக் கணக்காளர் சம்மேளனம்) இன் கற்கை நெறியை யாழ். நகரில் K-AIMS கல்வி நிறுவனத்தினூடாக மேற்கொள்வதற்கான விண்ணப்பம் கோரப்படுகிறது.

ACCA, U.K இனால் Gold அங்கீகாரம் பெற்ற பயிற்சி வழங்கும் நிறுவனமான K-AIMS ஆனது 2012 ஆம் ஆண்டு தனது யாழ். நகர கிளையை ஆரம்பித்து முதல், தனது இரண்டாவது பிரிவு மாணவர்களை பரீட்சைக்குத் தயார் செய்துள்ளது. இவ் விண்ணப்பக் கோரலானது நான்காம் பிரிவுக்கானது.

ACCA கற்கை நெறியானது மூன்று நிலைகளைக் கொண்டது
1. Diploma - 6 மாதம்
2. Degree - ஒரு வருடம்
3. ACCA - ஒரு வருடம்

★O/L, A/L பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் DIPLOMA நிலையில் இருந்து ஆரம்பிக்கலாம்.

★HNDA, யாழ்.பல்கலைக்கழக பட்டப்படிப்பைப் பூர்த்தி செய்த மாணவர்கள் DEGREE நிலையில் இருந்து ஆரம்பிக்கலாம்.

விசேட புலமைப்பரிசில்கள் கீழ்க்காணும் பிரிவினருக்கு வழங்கப்படும்.
★உயர்தரத்தில் அதிவிசேட சித்திகள் (கணிதம், விஞ்ஞானம், கலை மற்றும் வர்த்தகப் பிரிவு)
★யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள்
★HNDA மாணவர்கள்
விண்ணப்ப முடிவுத் திகதி 10th July 2013
புதிய பிரிவுகள் 12th July 2013 வெள்ளிக்கிழமை ஆரம்பமாகும்.
வகுப்புக்கள் வார இறுதி நாட்களில் நடைபெறும்

மேலதிக தகவல்களுக்கும், விசாரணைகளுக்கும், பதிவுகளுக்கும்
0773722104
021-2219422

பரிந்துரைகளுக்கும் முறைப்பாடுகளுக்கும்.
0772555814
(38799)
Jaffna.
3-1/2, Sirambiyadi lane,
(Off Stanly Road) Jaffna.

LOGIC
A/L 2015
விஞ்ஞான முறைகள்
ஆரம்பம்:-07/07/2013
ஞாயிறு காலை 8மணி
(sat, sun 8am)
By:-P.கமல்
NEC
பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி,
யாழ்.நகர்.

நாடகமும் அரங்கிலலும்
A/L 2014, 2015
புதிய பிரிவுகள்
ஆரம்பம்:-
06/07/2013(sat)
A/L 2014 sat, sun 8 am
A/L 2015 sat, sun 9am
S.சுகந்தன்
NEC
பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்.நகர்.

SAAMSON 3 மாத சனி, ஞாயிறு ஆங்கில பயிற்சி நெறி
இரண்டு தொடக்கம் நான்கு வயதிற்குள் ஒரு மொழியைப் பேசப் பழகும் எந்த ஒரு குழந்தைக்கும் அதன் எழுத்தோ இலக்கணமோ தெரிந்திருப்பதில்லை.
இன்று பலரும் இலக்கண வழியில் ஆங்கிலத்தைக் கற்பதனால் தான் அதனைப் பேசச் சிரமப்படுகின்றனர். SAAMSON இன் ஆங்கிலப் பயிற்சி என்பது அடிப்படை உரையாடலின் மூலம் சரளமாகப் பேசவும்,எழுதவும் மொழிபெயர்ப்புச் செய்வதற்குமானதாகும்.
புதிய பிரிவு ஆரம்பம் 06.07.2013 சனிக்கிழமை
பிரிவு 1 : 08.00 — 10.00
பிரிவு 2 : 10.00 — 12.00
பிரிவு 3 : 01.00 — 03.00
பிரிவு 4 : 03.00 — 05.00
தொடக்க வகுப்பு சனிக்கிழமை (06.07.2013) காலை 09.00
மூன்று மாதப் பயிற்சி நிறைவில் சரளமாக ஆங்கிலம் பேசமுடியாது விடின் முழுப்பணமும் திருப்பி வழங்குவதற்கான உத்தரவாதம்
3 மாத பயிற்சி நெறிக்கட்டணம் ரூபா 3,000 மட்டும்
SAAMSON 279, ஆஸ்பத்திரி பின்புறம் யாழ்
077 621 4567

குடிநீருக்காக அலைகின்றீர்களா? உங்களது கிணற்று நீரையே வீட்டிலேயே போத்தலில் அடைக்கப்பட்ட குடிநீரின் தரத்துக்கு மாற்றுவதற்கு
(38755) UV Water Solution
277, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். 0717273686

BCHS
BRITISH COLLEGE OF HIGHER STUDIES
சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும்
Spoken English with Grammar 1 1/2 Months
(ஆங்கிலத்தில் பேசுவதற்கு 100% உத்தரவாதம்) (Quick Learning course)
Diploma in English 2 1/2 Months
✳ எமது கற்கை நெறிகள் Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.
✳ O/L, A/L பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.
✳ Excellent Teachers' Panel & Individual Attention
Jaffna Branch: No. 15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550
Vavuniya Branch: No. 3, 6th Lane, Vairavarkovil Veethy, Vairavarpuliyamkulam, Vavuniya. Tel: 024 324 5287
Hot Lines: 0777 222 422 / 0777585913 / 071 4299935 / 0777730074
Evening & Weekend Classes for Employees also available..
Batch1 : 10-06-2013
Batch2 : 15-06-2013
Batch3 : 17-06-2013
Batch4 : 22-06-2013

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 04.07.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.